





# சீதாமஹேஸ்வரம்

சஹஸ்ர சந்திர தர்சன சதாபிஷேக சிறப்பிதழ்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதாமஹேஸ்வரம்

## சஹஸ்ர சந்திர தர்சன சதாபிஷேக சிறப்பிதழ்

எண்பதாவது அகவை

புனர்பூச ஜன்ம நட்சத்திரம்

ஐப்பசி மாதம் 26ம் நாள் (12.11.2014)

புதன்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் விபரத் தரவுகள்**

நூலின் பெயர் : "சீதாமஹேஸ்வரம்"

மொழி : தமிழ், சம்ஸ்கிருதம்

அளவு : 17.6cm x 25cm (B5)

பக்கங்கள் : i-xxv + 81

வெளியீடு : ஜயவருஷ ஐப்பசி புனர்பூச நன்னாள் **(12.11.2014 )**

பதிப்பாசிரியர் : கலாநிதி பிரம்மஸ்ரீ.மஹேஸ்வரக்குருக்கள் பாலகைலாசநாதசர்மா
சம்ஸ்கிருத சிரேஷ்ட விரிவுரையாளர் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை.

பதிப்புரிமை : பிரம்மஸ்ரீ, நதிசுதசர்மா ஜெயந்தகலா தம்பதிகள்
பிரம்மஸ்ரீ, பாலகைலாசநாதசர்மா மஹாலக்ஷ்மி தம்பதிகள்
பிரம்மஸ்ரீ, சர்வேஸ்வரக்குருக்கள் காதம்பரி தம்பதிகள்

**பேரப்பிள்ளைகள்**
ந.மனஸ்வினி
ந.நிஷேவிதா
ச.தேஜோவதனசர்மா
பா.மஹேஸ்வரநாதசர்மா
பா.சுப்பிரமண்யநாதசர்மா


முகவரி : ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவிலடி, நயினாதீவு
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவிலடி, சுதுமலை
மானிப்பாய், ஸ்ரீலங்கா

பிரதிகள் : 500

மின்னஞ்சல் முகவரி: sharmamns@gmail.com
mpkalsarma@gmail.com

தொலைபேசி : +94 (0) 21 225 5641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸஹஸ்ர சந்திர தர்சன சதாபிஷேகம் காணும்

அதிவந்தினீய சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி

பாரத்வாஜகோத்ரம் ஆபஸ்தம்ப சூத்ரம்

**சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள் ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மா**

ஆதீன குரு ஸ்ரீ நயினை நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

பிரதம குரு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்களின்
பெற்றோர்

ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மாவின்
பெற்றோர்

மாத்ரு தேவாபவ
பித்ரு தேவோ பவ







ஆச்சார்ய தேவோ பவ



இளமையில்
சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள்



சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மா




இளமையில்
ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மா



ஸ்ரீமான் ம.நதிசுதசர்மா
ஸ்ரீமதி ஜயந்தகலா தம்பதிகள்
ந. மனஸ்வினி, ந. நிஷேவிதா,



ஸ்ரீமான் ம.பாலகைலாசநாதசர்மா
ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி தம்பதிகள்
பா. மஹேஸ்வரநாதசர்மா, பா. சுப்பிரமண்யநாதசர்மா



ஸ்ரீமான் ச.சர்வேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீமதி காதம்பரி தம்பதிகள்
ச. தேஜோவதனசர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரைகளும்
# வாழ்த்துரைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

காலத்தின் தேவையைக் கருதியும், எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும், இதுவரை காலமும் நூலாக வெளிவராது இருக்கின்ற படியாலும் கிடைப்பதற்கு அரிதான விடயங்களை உள்ளடக்கியுள்ளதாலும் "நெடுமால் பெயராயிரம்" "ஸ்ரீ லலிதா அஷ்டோத்திரசதநாம ஸ்தோத்திரத்தமிழ் பாஷ்யம்" ஆகிய இரு விடயங்களை பழைய பிரதிகளிலிருந்து பெற்று அவற்றைத் தொகுத்து எமது பெற்றோர்களின் எண்பதாவது ஜன்மநட்சத்திரத்தில் நடைபெறும் சதாபிஷேக வைபவத்தில் "சீதாமஹேஸ்வரம்" எனும் பெயருடன் சிறப்பு மலராக வெளி வருகின்றமை குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

பொதுவாக தற்போதைய காலங்களில் பல்வேறுபட்ட வகையான நூல்கள் வெளிவருகின்றன. சிறப்பாக எமது யாழ்ப்பாண அந்தணச் சமூகத்தவர்கள் தமது நிகழ்வுகளை அடையாளப்படுத்தும் ஞானவேள்விச் செயற்பாடாக நூல்களை பதிப்பித்து வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. குறிப்பாக வேதசிவாகமங்கள், பத்ததி நூல்கள், பிரயோக நூல்கள், பண்பாட்டு நூல்கள், தர்மத்திற்கும் வாழ்க்கைக்கும் தேவைப்படுகின்ற நூல்கள் போன்ற சாராம்சங்களை உள்ளடக்கி வெளிவருகின்ற நூல்கள் சைவ தமிழ் உலகில் அதிக வரவேற்பைப் பெறுகின்றன.

"நெடுமாயில் பெயராயிரம்" "ஸ்ரீலலிதா அஷ்டோத்திரசதநாம ஸ்தோத்திரத் தமிழ் பாஷ்யம்" ஆகிய இரு விடயங்களை தெரிவு செய்வதற்குரிய முக்கிய காரணம் கலியுக தர்மத்தில் இறைவனுடைய நாமசங்கிர்த்தனங்களை அதிகமாக விளங்கிச் சொல்ல வேண்டும் என்ற உயர் நோக்கமேயாகும். இந்து தர்மத்தில் ஸ்ரீருத்திரம், சமகம், புருஷசூக்தம், பகவத்கீதை, விஷ்ணுசகஸ்ரநாமம் ஆகியன ஒவ்வொரு நாளும் நாம் அமைதியாக இருந்து கேட்க வேண்டிய ஜபம் பண்ண வேண்டிய மகிமை பொருந்திய பொக்கிஷங்களாகும்.

வாழ்க்கையிலே வருகின்ற அனைத்து துன்பங்களையும், கஷ்டங்களையும், நோய்களையும் போக்கின்ற ஔஷதம் விஷ்ணுசகஸ்ரநாமம் ஆகும். கலியுகத்திலே பகவானுடைய ஆயிரம் நாமங்களையும் நாமசங்கீர்த்தனம் செய்தாலே போதுமானதாகும். இவற்றை அப்படியே உள்ளடக்கிய தமிழ் பாடல்களே நெடுமால் பெயராயிரமாகும். எல்லோரும் இலகுவாக விளங்கி தமிழிலே சொல்லக் கூடிய இப்பாயிரம் தற்போது கிடைத்தற்கரியதாக உள்ளது. ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் ஸ்ரீலலிதா திரிசதி (முந்நூற்றி எட்டு நாமங்கள்) ஏற்கனவே தமிழ் விளக்கங்களுடன் பல பதிப்புக்களாக வெளிவந்துள்ளன. ஆனால் சக்தி ஆலயங்களிலே அதிக நடைமுறையில் பயன்படுத்தி அர்ச்சிக்கப்படும் ஸ்ரீலலிதா அஷ்டோத்திரசதநாமங்கள் தமிழ் விளக்கங்களுடன் கிடைத்தற்கரியதாக உள்ளது. எனவே இத்தேவைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்யும் முகமாக மேற்கூறிய இரு விடயங்களையும் உள்ளடக்கி ஒரு சிறிய கைநூலாக வெளிவருவது குறிப்பிடத்தகுந்ததாகும்.

இவ்விருவிடயங்களையும் தொகுத்து நூலுருவாக்கத்திற்கு உதவிய பழைய பிரதிகளின் ஆக்க கர்த்தாக்களான புலவர் பாண்டியனார் மற்றும் வே.ராமச்சந்திரசர்மா என்ற பெயர்களுடன் காணப்படும் பெரியோர்களுக்கு இவ்விடத்தில் முதற்கண் வணக்கங்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முத்தான முத்து விழாவில் இச்சிறப்பிதழை அலங்கரித்து அணிசெய்யும் வகையில் முத்தாக ஆசிச் செய்திகளும், வாழ்த்துரைகளும், பாயிரங்களும் இணைந்துள்ளன. இவற்றினை தந்துதவிய அனைத்து சமயப் பெரியோர்களுக்கும், கல்விமான்களுக்கும் இவ்விடத்தில் பணிவு நிறைந்த வணக்கத்தினையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். இச் சிறப்பிதழை நல்ல முறையில் அமைத்து குறுகிய காலத்தில் வடிவமைத்து தந்துதவிய ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், (கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்) உரிமையாளர் மற்றும் அலுவலர்களுக்கும் என்றும் எமது நன்றிகள்.

சிறப்பாக சீதாமஹேஸ்வரம் சிறப்பிதழ் உருவாக்கத்திற்கு தோளோடுதோள் நின்று உதவிய மைத்துனர் பிரம்மஸ்ரீ. சுப்பிரமணியசாஸ்திரிகள் நவநீதகிருஷ்ணன் M. Phil(யாழ் பல்கலைக்கழக உதவி நூலகர்), மருகர் வியாகரண சிரோன்மணி பிரம்மஸ்ரீ.சோ.பிரசன்னசர்மா M.A (ஆசிரியர், மட்டுவில் சந்திரமௌலீஸ்வர வித்தியாலயம்) சகோதரர் பிரம்மஸ்ரீ. ச. சதாநந்தசர்மா Dip.in.Electronics (உத்தியோகத்தர் ஏ.பி.சீக்ரட்டாஸ், அபான்ஸ் குரூப் அலுவலகம்) ஆகியோர் அன்பிற்கும் நன்றிக்கும் உரியவர்கள். மேலும் சிறப்பிதழ் உருவாக்கத்திற்கும், சதாபிஷேக வைபவ நிகழ்வுக்கும், பல்வேறு வகையில் பல உதவிகளும், ஒத்தாசைகளும் வழங்கிய அன்னைத்து அன்புள்ளங்களுக்கும் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது கண்கண்ட தெய்வங்களாகிய பெற்றோர்களுடைய சஹஸ்ர சந்திரதர்சன சதாபிஷேக (எண்பதாவது அகவை-ஜன்ம நட்ஷத்திரம்) வைபவ நிகழ்வையொட்டி சீதாமஹேஸ்வரம் (சதாபிஷேக சிறப்பு மலர்) எனும் சிறப்பிதழை தங்களுக்கு வழங்குதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

பெரியோர்களின் ஆசியும், உறவினர்களின் உறவையும், நண்பர்களின் நட்பையும் அன்பர்களின் அன்பையும், பணிவுடன் வேண்டி நிற்கின்றோம்.

ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவிலடி,
சுதுமலை, மானிப்பாய்
ஸ்ரீலங்கா
05-11-2014

**குடும்பத்தவர்கள் சார்பாக**
**பிரம்மஸ்ரீ.மஹேஸ்வரக்குருக்கள் நதிசுதசர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மயிலாப்பூர் ஸ்ரீ கற்பகாம்காள் உடனுறை கபாலீஸ்வரர் தேவஸ்தான வேத வாத்யார் சாக்தரத்ன வேதசாஸ்த்ர கலாரத்ன, ஜோதிக்ஷ வாசஸ்பதி பிரம்மஸ்ரீ டாக்டர். A.G. ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் வணங்கி மகிழும் ஆசிச்செய்தி**

அருள்மிகு கற்பகாம்பாள் உடனாகிய கபாலீஸ்வரர் திருவருளால் இலங்கை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோவில் பாரம்பரிய பிரதான சிவாச்சாரியாராகவும் முதன்மை அர்ச்சகராகவும் இலங்கை இந்து மத பிரதம குருவாகவும், கைலாச சிகரம் போல் காட்சி அளிக்கும் அந்தணர் சமூகத்தின் அறிவுக் கடலாவும் வேதாகம ஞான பண்டிதராகவும் ரிஷிஸ்ரேஸ்டர் பாரத்வாஜ மஹரிஷியாகவும் வேத ப்ரம்ம ரிஷயாகவும் காட்சி அளிக்கும் சுதுமலை தேவஸ்தான ஸ்தானிகர் ஆச்சாரியராக விளங்கும் பாரத்வாஜ கோத்ரம் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் வந்தவருமான பிரம்மஸ்ரீ மஹேஸ்வர குருக்கள். ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மாள் தம்பதிகளுக்கு சஹஸ்ரசந்திரதர்சனம் சாங்கபல சித்திகர சதாபிஷேகம் நடைபெற இருப்பது காணக் கிடைக்காத அரும் காட்சியாக அமைகிறது. சந்திரமாஸ்திர தீர்க்கமாயு: என்று வேதம் கூறுகிறது. "சந்திரம "தேவ பரீணாதி" என்றும் "சந்ரமாமன சோஸாதர:" என்றும் சந்திரமாவா அபாம்புஷ்பம் என்றும், வேதங்களில் சந்திரனை வடிவமைத்து போற்றுகின்றனர். அந்த சந்திரனை ஆயிரம் முறை பார்த்த பிறகு கீதாசாரியான ஜகத்குருவான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே ஆயிரம் பிறை கண்டவர்களை வணங்கி போற்றுதல் வேண்டும் என்று கூறுகிறார். மஹாராஜஸ்ரீ சீதாலக்ஷ்மி மஹேஸ்வர சிவாச்சாரியாருக்கு நதிசுதசர்மா, பாலகைலாசநாதசர்மா என்ற சூரிய சந்திரர் போல இரு புத்திரர்கள் சிவபெருமானை அலங்கரிப்பது போல் இருக்கிறார்கள். கௌரி என்ற பெண்ணும் சர்வேஸ்வரக் குருக்கள் என்ற மாப்பிள்ளையும் பாதுகாத்து வருகிறார்கள்.

ஜெயந்தகலா, மஹாலக்ஷ்மி என்ற இரண்டு கண்களை போன்ற மருமக்களைக் கொண்ட சந்தோஷமான குடும்பத்தில் பேரன்கள், பேத்திகளுடன் என்றும் மகிழ்ச்சியாக இருந்து கொண்டு பூர்ணாபிஷேகம், ரத்னாபிஷேகம், கனகாபிஷேகம், மகுடாபிஷேகம், தசாகேந்ர சம்பூர்ணாபிஷேகம், அனைத்தையும் பெற்றும், அனைவரையும் ஆசிர்வதித்தும் அனுசரிக்கும்படி நமஸ்காரத்துடன் இந்த ஆசி செய்தியை அன்புடன் வழங்குகிறேன். மேற்படி விழாவின் சிறப்பம்சமாக விஷ்ணு, லலிதா ஆகியோர் கூடிய ஸ்தோத்ர பாராயணப் புத்தகம் வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

இவ்வண்ணம்
**A.G. ஸ்ரீநிவாச சாஸ்திரிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தில்லைக்கூத்தன் திருவடி பூசிக்கும் உரிமைத்தொழில் பூண்ட தில்லைவாழ் அந்தணர் கூட்டத்தின் சிறுதுளி, சிற்றபலத்தானின் பொற்பத - குஞ்சிதபத - தூளி த்ரைவேத அத்யயன பாரங்கதர் சிதம்பர நடராஜா பூஜ்ய ஸ்ரீ ஜி. பரமேஸ்வர தீட்சிதர் வணங்கி வழங்கிய ஆசிச்செய்தி

ஆகம உலகில் தமக்கெனத் தனியிடம் அமைந்த நமது சிவபக்த சிவ மஹேஸ்வர ஐயா அவர்களுடைய தொடர்புக்கான ஆவல் பயிரினை எனக்கு வித்திட்டோர், கப்பித்தாவத்தைப் பெரியவர் சண்முகரத்ன சர்மா J.P.,பெறாமகனார் கொட்டாஞ்சேனை ஸ்ரீ பாபு சர்மா, நமது ஐயா அவர்களின் திருக்குமாரர் ஆகிய மூவராவர். காரைநகர் திரு ந. பாக்கியராஜா மாஸ்டர், கோப்பாய் சிவம் ஐயா இவர்கள் அப்பயிரை வளர்த்து ஐயாவைக் காண உடன் கூட்டிச் சென்றனர். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி அது.

அதன் பிறகு சிவஸ்ரீ ஐயா அவர்களே தம் அன்புள்ளத்தால் அப்படி எமக்குக் கிடைத்த நட்பைப் பூர்த்தி செய்தும், அந்த் ஸ்நேகப் பூ காயாமல் கனியச் செய்தும் வருகின்றனர். இது ஒரு விந்தை. எண்பதை எட்டிப் பார்க்கும் ஸ்ரீ ஐயாவின் தோற்றம் நாம் பார்க்க மிகவும் எளிமையும் இனிமையும் வாய்ந்ததே! சிவாகம உலகில் பட்டங்களும், புகழாரங்களும் இவரைத் தேடிவந்து தாமே பெயர்பெற்றன. இவர்கள் சைவ உலகில் சிவகன்மத்தைத் தாமே விரும்பி ஆன்மார்த்தமாக ஆற்றிவரும் கன்ம வீரர்.சிவாகமத்தை விரும்பிக் கற்கவரும் மாணவர் உலகிற்கு இவர்தம் குருத் தன்மையால் இளைஞர். நாகபூஷணி,புவனேஸ்வரி தேவியரை மற்றும் எல்லாத் தெய்வத்தையும் பூசிக்கும் போதெல்லாம் குழந்தைபோல் குழைந்து நெகிழ்ந்து பூஜை செய்வதைக் காண மெய்சிலிர்க்கும். சைவ மாநாடுகள், சிறப்புக் கூட்டங்கள் இவற்றில் அறிஞர், பெரியோருடன் பங்கேற்கும் சமயம் தனிச்சுடர்விட்டுப் ப்ரகாசிக்கும் சுயதீபம்! (சிவதீபம்) வரும் வறிஞர்க்கு அன்னமிடும் வள்ளல்! கோயில் அடியார்களுக்கும் குடும்பத்தார்க்கும் எப்போதும் கண்டிப்பும், பரிவும் கொண்ட தந்தை! அன்புள்ளம் கொண்ட அடியார்களைப் பேணுவதில் தாயினும் இனியவர்!

இவற்றை, அவரிடம் நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்றவர் எப்போதும் உணரலாம். சிதம்பரத்தில் நடேசப் பெருமான் சந்நிதியில்தான் ஐயாவுக்குத் தரிசனம் அளித்துவருகிறார். விஜயரதசாந்தி அன்றும் குடும்பத்தாருடன் ஐயா தில்லைக்கு ஏகி, தரிசித்து எமது இல்லத்துக்கும் வந்து, எளிய விருந்தோம்பலைப் பெருமையுடன் ஏற்று மகிழ்ந்தது எங்களுக்கு நிலையான பெருமை!

தம்மைத் தேடிவரும் பெரியோரும், அறிஞரும் அவர்தம் உள்ளம் இறும்பூதெய்துமாறு வந்தவரிடமிருந்து மேலும் தமது திறனை வளர்த்துக்கொள்ளும் விதத்தில் அன்புடன் அவர்களையே ஊடுருவிப் பார்த்துத், தாம் அவரினும் எளியோராக நடந்துகொள்ளும் காட்சி மிக இனிது! கண்டோர் பெருவியப்பையடையும் அருங்குணம் உள்ளவர்கள் நமது நயினாதீவு, சுதுமலை ச.மகேஸ்வரக் குருக்கள் ஐயர் அவர்கள். ஐயாவின் இத்தகு வியப்புறு அன்பு குணங்களை அடுக்கியே நாமும் எண்பதைத் தாண்டலாம். ஆயினும் எம் போன்ற ( எமக்கதிக ) அன்புள்ளம் கொண்ட அனைவர்க்கும் வாழ்த்த இடம் வேண்டி, தாண்டவேஸ்வரன் எடுத்த பொற்பதம் வணங்கி, வாழ்த்தி, நிறைவோம்! வளர்வோம்!!

வாழி, புவனேசி பதமலர் பூதசிக்குநின் பொற்கர மலர்!
வாழி, தெய்வம் பல ப்ரதிஷடித்து வணங்கு மும் முடிச் சென்னி!
வாழி, முப்போதும் பிழையாது வாழ்த்து மந்திரித்த மலரிதழ் வாய்!
வாழி, நின்னடியார் தமையன்போடு அரவணை நுந் திருமேனியே!!

**சிவஸ்ரீ கணேச.பரமேஸ்வர தீக்ஷிதர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை வில்லூன்றிக்கந்தசுவாமி தேவஸ்தான பிரதம சிவாச்சார்யர், மட்டக்களப்பு, சிவாநந்த வித்யாலய முன்னாள் சம்ஸ்கிருத, இந்து நாகரிக விரிவுரையாளர், பூர்ணானந்த குருகுல வேத சாஸ்த்ர ஆகம கலாசாலை அத்யாபகர்

வியாகரண சிரோமணி

(அண்ணாமலை சர்வகலாசாலை)

சிவாசார்ய கலாநிதி, சிவாசார்ய சக்ரவர்த்தி

"வேத, ஆகம, சைவசித்தாந்த, கிரியா, விசாரத"

சிவஸ்ரீ. பூரண. தியாகராஜக்குருக்கள் B.A. Hons

அவர்களின் ஆசியுரை

[illegible]

நயின த்வீப நிவாசின்யா: நாகபூஷணி ஆலய
பாரம்பரிய குரோ மீனாம்பா பிரிய பதே:
ஜம்பு ஹேஸ்வர குரு தம்பத்யோஸ் தனூஜஸீய
சீதாலக்ஷ்மி பிரியபதே: மஹேஸ்வர குரோ சதா.
சர்வ மங்கள சம்பூர்ணே சதாபிஷேக தினே சுபே.
மங்களம் தனுதாம் தேவெள கஜானன ஷடானனௌ
நாக பூஷணி தேவீச அனுகிருண்ணாது சர்வதா அநேக திடகாத்ரஞ்ச
தீர்க்க மாயுகு யசோ பலம்.

நயினாதீவு எனும் தலத்திலே வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற நாகபூஷணி அம்பிகைக்கு பரம்பரையாக அபிஷேக ஆராதனை செய்து பூஜிக்கின்ற ஜம்புஹேஸ்வரகுருக்கள் மீனாம்பாள் தம்பதிகளின் புதல்வர் மஹேஸ்வர குருக்கள் சீதாலக்ஷ்மி தம்பதிகளின் சதாபிஷேக வைபவத்தில் ஆனைமுகனும் ஆறு முகனும் மங்களங்களையெல்லாம் அருள்புரிவாராக. நாகபூஷணி அம்பிகையும் அத் தம்பதிகளுக்கு நோயற்ற திடத்திரத்தையும் நூறாண்டு காலம் வாழவும் குறையற்ற செல்வம் பலம் ஆகியவற்றையும் எப்போதும் கொடுத்து அருள்புரிவாராக. வாழ்த்துக்கள்.

சுபம்

சிவஸ்ரீ. பூரண. தியாகராஜக் குருக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர்
## சிவஸ்ரீ. தா. மகாதேவக் குருக்களின்
## வாழ்த்துரை

சம்ஸ்கிருத நூல்கள் அச்சுக்கச்சு அப்படியே தமிழில் மொழிபெயர்த்து வழங்கும் மரபு அந்தக் காலம் தொடங்கியே நடைமுறையிலிருக்கிறது. காசிவாசி செந்திநாதய்யர் அவர்கள் அருளாளர்களால் பாடப்பட்ட வேதத்திற்கு ஒப்பான தேவாரங்களை "தேவாரம் வேதசாரமென" வெளியிட்டிருக்கிறார். ஆத்மநாதசர்மா அவர்கள் லலிதா சஹஸ்ரநாமத்தை "அன்னை அருட் பேராயிரம் என்று வெளியிட்டிருக்கிறார். இதேவரன்முறையில் இப்பொழுது நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆதீன சிவாசார்யராக விளங்கும் ஐம்புஹேஸ்வர மஹேஸ்வரக் குருக்கள் அவர்களுடைய சதாபிஷேக நன்னாளில் விஷ்ணு சஹஸ்ரநாமத்தை அப்படியே மொழிபெயர்த்து உருவான "நெடுமால் பெயராயிரம்" என்ற தமிழாக்கத்தை வெளியிடுவதற்கு அவரது புத்திரர்கள் தீர்மானித்திருப்பது விசேஷமான கைங்கர்யம் அதோடு லலிதா அஷ்டோத்தர சதநாமாக்களையும் சங்கரபாஷ்ய மரபில் தமிழ் உரையோடு வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். குருக்களையா அவர்களும் அவரது சகதர்மணி சீதாலக்ஷ்மி அம்மையாரையும் வாழ்த்துவதோடு அவர்களையும் இருவரின் பெயர்களோடு "சீதாமஹேஸ்வரம்" நூல் வெளியீடும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

**சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்.**
இணுவில் தர்மசாஸ்ர குருகுல அதிபர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேதாகமோத்தம ஆச்சார்ய சாரதா
### சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள் அவர்கள்
### வாழ்த்தி வழங்கும் ஆசிச்செய்தி...

சதாபிஷேகம் காணுகின்ற சிவாச்சாரியார் அவர்கள், தாய் மாமனாரான பிரதிஷ்டா பூஷணம், சிவாகம ஞானபானு சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களிடம் முறைப்படி வேதாகம கிரியைகளை கற்றுக் கொண்டதுடன் அவரையே தனது ஆச்சாரிய அபிஷேகத் தீக்ஷாகுருவாக கொண்டு தனது குருத்துவத்தை சிறப்பாக நடாத்தி வருகின்றார். இலங்கையில் பல தெய்வீகத் திருத்தலங்களில் கும்பாபிஷேகங்களையும் மஹோற்சவப் பெருவிழாக்களையும் நடாத்தி சிறப்புப் பெற்றவர்.

சீதாலக்ஷமி அம்மாவை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இல்லறம் எனும் நல்லறத்தை இனிதே நடாத்தி மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளாகிய செல்வங்களைக் கண்டு இன்புற்று இறைபக்தியுடன் வாழ்ந்து வருகின்ற ஒரு சிறந்த சிவாச்சாரியார் தான் எனது அன்பு மைத்துனர் மஹேஸ்வரக்குருக்கள்.

ஒருவரது வாழ்நாளில் அறுபது ஆண்டு நிறைவில் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவும் எழுபதாவது வயது நிறைவில் பீமரதசாந்தி வைபவமும் எண்பதாவது அகவையில் சதாபிஷேக வைபவமும் நடைபெறுவது அந்தண சமூகத்தவர்களுக்கே உரிய சிறப்பான கிரியை முறைகள் ஆகும்.

அவ்வாறே எமது சமூகத்தவர்களின் மூத்த சிவாச்சார்யர் வரிசையில் திகழும் சிவஸ்ரீ ஜம்புஹேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார் ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மா தம்பதிகளின் சதாபிஷேக விழாவினை முன்னிட்டு வெளியிடுகின்ற சீதாமஹேஸ்வரம் எனும் சிறப்பான நூலை வழங்குகின்ற பிள்ளைகட்கு எமது ஆசிகளும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

சதாபிஷேக விழா காணுகின்ற என் மைத்துனர் அவர்தம் மனைவியாளுடன் மேன்மேலும் நலங்களும் பெற்று மங்களம் மிகு தம்பதிகளாக வாழ எல்லாம் வல்ல அம்பிகையின் பாதம்பணிந்து ஆசி கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

சுபம்

" வேதாகமோத்தம ஆச்சார்ய சாரதா "
**சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்
## ஆதீன பரம்பரைக் குருமணி சிவஸ்ரீ சுவாமிநாத பாலசுந்தர குருக்கள்
## அவர்களின் வாழ்த்துரை

"உத்யம ஸாஹஸம் தைர்யம் புத்தி சக்தி பராக்கிரம
ஷடேதே யதத்ர வர்த்தந்தே தர்ர தைவம் பரிசீததி"

முயற்சி, வல்லமை, தைரியம், புத்தி, சக்தி, வீரம் இவை ஆறும் யாரிடம் சேர்ந்திருக்கின்றதோ அப்புருஷனிடம் தெய்வீகத் தன்மை மேலோங்கி தேஜஸ் பெருகி நிற்கும் என்கிறது நீதி சாஸ்திரம். இச்சுலோகத்திற்கு ஏற்ற உதாரண புருஷராக "விப்ர சிரேஷ்டராக" வாழ்ந்து தன்னைப் பூரணப் படுத்திக் கொண்டவர் பேரன்பிற்குரிய மருகர் மஹேஸ்வரக் குருக்கள் அவர்கள். நயினை அன்னையின் அருட் கடாக்ஷத்தால் முழு நிறைவோடு தன் குலம், தன்பரம்பரை, தன் சுற்றம் என அனைவராலும் மதிக்கப்பட்டதன் பலனாய் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியாகி அந்தணர் குல ஆலோசகராய் விளங்கினார்.

ஆதீன பரம்பரைக் குருமணியாக கிடைத்த பேற்றினை சிரம் மேல் கொண்டு நயினை அன்னையின் பாதக் கமலங்களை வழுத்தியதன் பயனாய் அன்னையின் அருட் கடாக்ஷத்தினால் பரிபூரணமான வாழ்வு கைவரப் பெற்றது.

"மங்கலம என்ப மனை மாட்சி மற்றதன்
நன் கலம் நன் மக்கட்பேறு"

என்கின்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க மனம் நிறை நல் மனையாளோடு அறிவாற்றல் சார் நற்பண்பு நிறை குழந்தைகளை ஈன்று குலம் தழைக்க மனம் நிறை மக்கள், மருமக்கள், பேரக் குழந்தைகளோடு சேர்ந்த பேரானந்தம் நிறைந்த வாழ்வில் அகவை எண்பதில் தடம் பதித்த உவகை பெற்றார்

"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்துளெல்லாம் உளர்

என்கின்ற குறளடிகளை மெய்ப்பிப்பது போல் வாழ்ந்து வருபவர் மருகர் அவர்கள்.

சதமானம் பவதி: சதாயு: புருஷ: எனும் வேத வாக்கு ஆசிகளாய் அமைய, ஆண்டாண்டு காலம் தம்பதி சமேதராக நோயற்ற வாழ்வு, நீங்காத செல்வம், நீண்ட ஆயுள், இன ஜன சம்பத்து மித்ர சகிதம் சலக சௌபாக்கியங்களையும் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழ ஸ்ரீ நயினையினதும், ஸ்ரீ புவனேஸ்வரி அன்னையினதும் பேரருள் கிடைக்க வேண்டி ஆசி கூறி வாழ்த்துகின்றோம்.

மஹேஸ்வர குரூணாம் ஹி அசீதி வயச தினே சுபே
மங்களம் குருதாம் தேவௌ கஜானன ஷடானநௌ
ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி மாதா புத்ர, பௌத்ர சமன்வித:
தீர்க்க மாயுர் தனம் கீர்த்திம் லபதாம் சர்வசம்பத:

சுபமஸ்து.

என்றும் அன்பு மாமனார்
**சிவஸ்ரீ சுவாமிநாத பாலசுந்தரக் குருக்கள்**
**நயினாதீவு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை திருஞான சம்பந்த ஆதின முதல்வர்
## ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
## இரண்டாவது குருமஹா சந்நிதானம் அவர்கள் வழங்கிய
## அருளுரைச் செய்தி

பேரன்புமிக்க பெருமைக்குடையீர்!

நயினை சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக்குருக்கள் அவர்களுடைய சதாபிஷேக விழா நிகழ்வதையிட்டு பெரும் மகிழச்சியடைகின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற திருக்குறளின்படி உலகில் வாழ வேண்டிய முறைப்படி இல்லறம் செய்பவர் விண்ணுலகத் தெய்வமாக மதிக்கப் பெறுவார்கள். வையத்துள் வாழ்வதும் ஒரு நெறியாகும். அந்த வகையில் வாழ்ந்து காட்டும் சிவஸ்ரீ. ச. மஹேஸ்வர குருக்கள் அவர்களின் சிவாச்சார்யகைங்கரியங்களையும், சிறப்புக்களையும் அறிதல் அவசியமே. இவர் நூறுக்கு மேற்பட்ட மஹாகும்பாபிஷேகங்களை பிரதமகுருவாக இருந்து நடத்தியதுடன் ஆயிரத்திற்கு மேற்பட்ட கும்பாபிஷேகங்களில் பங்குபற்றியுள்ளார். இருநூற்று ஐம்பது மஹோற்சவங்களை பிரதமகுருவாக இருந்து நடத்தியதுடன் நயினை நாகபூசணி அம்மனின் அருட்பார்வையால் 2010ம் ஆண்டு அம்பாளின் மஹோற்சவத்தை சிறப்பாக நடாத்தி அம்பாளின் திருவருளை பெற்றவராவார். சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் மூன்று பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகங்களை (1983,1999,2014) பிரதம குருவாக நடாத்தியமை அவருக்குள் இருக்கும் அம்பாளின் அருட்சக்தியை புலப்படுத்துகின்றது. இம்மூன்று கும்பாபிஷேகங்களிலும் அடியேன் பங்குபற்றி அருளுரை வழங்கிய பாக்கியமும் எனக்கு கிடைத்ததையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். ஒரு ஆலயத்திலேயே தொடர்ந்து மூன்று பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகங்களைச் செய்தவர் என்ற சாதனையாளர் பெயரை அம்பாள் கொடுத்துள்ளார்.

குருக்கள் அவர்கள் தன்னை சமய சமூகப் பணிகளிலும் ஈடுபடுத்தி "சர்வதேச இந்து மத குருபீடாதிபதியாக இன்றுவரை பணியாற்றி வருவது சிறப்பாகும்.

இத்தகைய பெரும் சிறப்புக்களுடன் கூடி அந்தண சிரேஷ்டராக விளங்கும் குருக்கள் அவர்களும் அவரது குடும்பத்தவரும் பல்லாண்டுகாலம் வாழ வேண்டும் என ஸ்ரீ மீனாட்சி உடனுறை சோமசுந்தரேஸ்வரப் பெருமான் ஆசீர்வதிக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

குருமஹாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபை, அறங்காவலர் சபைத் தலைவர்**
**அகில இலங்கை இந்துமாமன்றம்.**
**மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை**
**அவர்களின் வாழ்த்துச் செய்தி**

அகவை எண்பது காணும் சிவஸ்ரீ. ச. மஹேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இவர் ஐம்பது வருடகாலமாக சிவாச்சாரியாகப் பணி புரிந்து நூறுக்கு மேற்பட்ட மஹா கும்பாபிஷேகங்களை பிரதம குருவாக இருந்து நடத்தியது மட்டுமல்லாமல் பல மஹோற்சவங்களையும் நடாத்தியுள்ளார். அத்துடன் பல இலவச சக்தி நூல்களை வெளியிட்டு கல்விப்பணிகளில் ஈடுபட்டதுடன் கனடா போன்ற வெளிநாடுகளிலும் தனது சமயப் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

இவர் "கிரியாகலாப முக்தாமணி" ஆகம வித்தகர் "கிரியா தத்துவநிதி" "மூத்த சிவாச்சாரியார்" போன்ற பட்டங்களும், பல விருதுகளும் பெற்றுள்ளார்.

இவர் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து சிவத்தொண்டுகள் பல செய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

**மனிதநேயர் வி. கயிலாசபிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன்**
**அவர்களின் வாழ்த்துச் செய்தி**
**இலங்கை இந்து மக்களின் பிரார்த்தனை**

அதிவந்தினீய சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி பாரத்வாஜகோத்ரம் ஆபஸ்தம்ப சூத்ரம் சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக்குருக்கள் ஸ்ரீமதி சீதாலஷ்மி அம்மா தம்பதியினர்க்கு ஐப்பசி மாதம் இருபத்தாறாம் நாள் சகஹஸ்ர சந்திர தர்சன சதாபிஷேக மாங்கல்ய தாரண வைபவம் நடப்பதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சியும் கட்டற்ற களிப்புமுறுகின்றோம்.

வணக்கத்திற்குரிய மஹேஸ்வரக்குருக்கள் இந்நாட்டுச் சிவாச்சாரியர் பரம்பரையில் தனக்கென ஒரு தனிப் பெரும் இடத்தை வகிப்பவர்.

கிரியாகலாமுக்தாமணி, ஆகமவித்தகர், கிரியாதத்துவநிதி, சரகமலசாரங்க வித்யா பாரங்கதவிசாரதா,கிரியாகாலபபாரதி எனப் பல பட்டங்களையும் பெற்ற கௌரவத்திற்கும் போற்றுதலுக்கும் உரிய மூத்தசிவாச்சாரியார் இவர். நயினை நாகபூசணி அம்மன் திருத்தலத்தின் ஆதீன குருவாகவும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் திருக்கோயிலின் பிரதமகுருவாகவும் விளங்கும் எங்களின் மூத்த சிவாச்சாரியார் தனது அறிவாலும் அனுபவத்தாலும் திறமையினாலும் இந்நாட்டின் சைவசமய வளர்ச்சிப் பாதையில் இளம் சிவாச்சாரியர்களுக்கு ஒரு கலங்கரை விளக்காக விளங்குபவர் என்றால் அது மிகையாகாது.

சிவாச்சாரியர் பரம்பரை பாண்டித்தியம் பெற்றவர்களாக வளரவேண்டும் என்பதே எங்கள் எல்லோருடைய விருப்பமாகும். அந்த வழியிலும் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத சிரேஸ்ட விரிவுரையாளராக விளங்கும் கலாநிதி பாலகைலாசநாத சர்மாவைத் தன் வாரிசாகப் பெற்ற வளர்த்தெடுத்து எமது அபிலாசையைத் திருப்திப்படுத்திய பெருமையும் இந்தப் புனித உத்தமருக்கு உண்டு என்பதனையும் கூறி வைப்பதில் பெருமை காண்கின்றோம்.

சதாபிஷேகத் தம்பதியினருக்கும் அவர்களின் பரம்பரைக்கும் என்றும் சக்தியின் கடாட்சம் உண்டு. திருவருளால் அவர்கள் தழைத்து உய்ய இந்நாட்டு இந்து மக்களின் சார்பில் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

இறைபணியில்
**கந்தையா நீலகண்டன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வேந்தர்
## பேராதனைப் பல்கலைக்கழக தகைசார் வரலாற்றுப் பேராசிரியர்
## கலாநிதி சி. பத்மநாதன். அவர்களின் பாராட்டுரை

யாழ்ப்பாணத்துப் பிராமணோத்தமர்களில் முதன்மையானவர்களில் ஒருவரான ஸ்ரீமான் மகேஸ்வரக் குருக்களின் எண்பதாவது வயது நிறைவில் வெளியிடப்படும் இச்சிறப்பு மலருக்குப் பாராட்டுரை வழங்குவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இவர் சுதுமலை அம்மன் கோயிலின் பிரதம குருக்களாகப் பல்லாண்டுகள் பணிபுரிந்துள்ளார். இன்று இலங்கையிலுள்ள வேதாகம பண்டிதர்களில் அவர் மினவும் மேன்மையானவர். அவர்களது வேதமந்திர உச்சாடனம் மிகவுங் கவர்ச்சியானது. அதனைப் பற்றிய பாராட்டுகளைப் பலரிடமிருந்து கேள்விப்பட்டேன்.

இலங்கையிலுள்ள பிரதானமான பல இந்துக் கோயில்களில் வருடாந்த உற்சவங்கள் அவரது வழிகாட்டலில் நடைபெற்று நிறைவேறியுள்ளன. ஆகமப் பிரகாரமான பிரதிஷ்டாபன நிகழ்ச்சிகளைப் பெருந்தொகையில் நடத்தியமை அவரின் மற்றுமொரு சிறப்பாகும்.

இலங்கையில் வாழும் இந்துக்கள் சற்பிராமணர்களை இன்றும் அன்போடும் மரியாதையோடும் ஐயர் என்று தான் சொல்வார்கள். அதற்குப் பல காரணங்களுண்டு. கிராமப்புறங்களில் வாழ்ந்த அந்தணர்கள் ஊரவர்களின் இன்ப துன்பங்களில் ஈடுபாடு கொண்டிருந்ததோடு ஆலய தருமங்களை மிகவும் பக்குவமாக நடைபெறச் செய்துள்ளனர். அவர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சியோடும் தமிழர் சமுதாயத்தின் உணர்வுகளோடும் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர்.

மஹேஸ்வரக் குருக்களின் முன்னோர்கள் வாழையடி வாழையாக வேதாகம நெறியினையும் சைவசமயத்தையும் துறைபோகக் கற்று சைவசமய நெறியினைக் காத்த சிறப்புடையவர்கள். "ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்" என்னும் மூதுரைக்கேற்பவும் "அந்தணர் என்போர்" அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற வள்ளுவர் வாக்கினுக்கு உதாரணமாகவும் வாழ்ந்தவர்கள்.

ஒழுக்க சீலங்களிலும் புலமையிலும் மாசிலாத மக்களைப் பெற்று, வளர்த்து எமது சமுதாயத்துக்கு வழங்கிய மஹேஸ்வரக் குருக்களைப் பாராட்டுவதற்கு வார்த்தைகளில்லை.

குருக்களவர்களைப் பற்றி அமைச்சராக இருந்த மகேஸ்வரன் மூலமாகவே நான் முதன்முதலாக அறிந்தேன். மகேஸ்வரன் அவர் மீது மிகுந்த மதிப்பும் அபிமானமுங் கொண்டவர். அதற்குப் பின் பாலகைலாசநாத சர்மா எமக்கு அறிமுகமானார். கண்ட நாள் முதலாகவே, தலைமுறை வேறுபாடு கடந்த நிலையில், பரஸ்பரம் அன்பும் புரிந்துணர்வும் ஏற்பட்டது. புலமையில் வீழ்ந்துவிட்ட எமது சமுதாயத்தில் அவரை ஒரு விடிவெள்ளியாக நான் கண்டேன்.

மகன் தந்தைக்காற்றும் நன்றி இவன் தந்தை எந்நோற்றான் கொல் என்னுஞ் சொல் என்ற வாக்கியம் எமது மனதில் என்றும் நிலைபெறும் வண்ணமாயிற்று. அரும் பெருஞ் சிறப்புகளைச் செய்த மகா மேதையான மஹேஸ்வரக்குருக்களின் சேவைகளைப் பாராட்டி, அவர் சீரோடும் சிறப்போடும் வாழ அருள்புரிய வேண்டுமென்று பற்றொன்றிலாப் பெருமானை வேண்டுகின்றோம்.

**பேராசிரியர் சி. பத்மநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் துணைவேந்தர் வாழ்நாட் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்த்துச்செய்தி

சிவஸ்ரீ மஹேஸ்வரக்குருக்கள் அவர்களின் எண்பது அகவையுடன் தொடர்பான சதாபிஷேக சிறப்புமலர் வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக்குருக்கள் நாடறிந்த மிகவும் கௌரவத்திற்குரிய இந்துக்குரு ஆவார். இந்து மக்களின் அன்புக்கும், அபிமானத்துக்குமுரியவர். சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவராக (1992-2002)ல் இருந்து இந்துமக்களினதும் சிவாச்சார்களினதும் வாழ்க்கையை சிறப்பான முறையில் நெறிப்படுத்தி வழிநடத்தியவராவார். சாதாரண மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்டவர்.

இந்துசமய விடயங்களில் மிகுந்த அறிவு மிக்கவர். இளைய சிவாச்சாரியர்கள் பூரணமான சமய, கிரியை அறிவுரைகள் நுட்பங்களை நன்குகற்க வேண்டும் என விருப்பம் கொண்டவர். குருக்கள் அவர்கள் சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாக இருந்து சிவாச்சாரியர்களின் அறிவு, ஆற்றல், மேம்பாட்டுக்கு பெரிதும் உதவி வருகின்றார்.

நான் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த காலத்தில் குருக்கள் ஐயா அவர்கள் பேரவை உறுப்பினராக இருந்தார். கடினமான சூழ்நிலைகளிலும் நல்ல தீர்மானங்களை எடுப்பதற்கு உதவியாக இருந்தார். இவரது அறவு, ஆற்றல், ஞானம் ஆகியவற்றால் குருக்கள் மேல் ஏனைய பேரவை உறுப்பினர்கள் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தனர். சபை நடவடிக்கைகள் உயர்தரத்தில் நடைபெறுவதற்கு உதவியாக இருந்தார்.

சிவஸ்ரீ மஹேஸ்வரக்குருக்கள நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி கோயில், நயினாதீவு வீரபத்தி சுவாமி கோயில் மஹோற்சவங்களையும் நூற்றுக்கணக்கான மகா கும்பாபிஷேகங்களையும் மற்றும் ஆயிரக்கணக்கான சமய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய பெருமைக்குரியவர். ஒவ்வொரு நிகழ்விலும் சிறந்த முறையில் செயலாற்றி தனது கடமையை நிறைவேற்றியுள்ளார்.

குருக்கள் அவர்களின் மகன் கலாநிதி பாலகைலாசநாதசர்மா, கல்வியிலும் புலமையிலும் புகழ் பெற்றிருப்பது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. மகன் நோய்வாய்ப்பட்டு சிறிது காலம் இருந்த பொழுது அவர் பட்ட துன்பத்தை நான் நேரடியாக அறிந்தேன். இலங்கையில் சம்ஸ்கிருதக்கல்வியை முன்னெடுப்பதிலும் சம்ஸ்கிருதத்தில் ஆய்வு ஆராய்ச்சிகளை மேற்கொள்வதிலும் கலாநிதி பாலகைலாச நாதசர்மா முன்னிலை நிற்பதையிட்டு அவரது தந்தையார் குருக்கள் மிகவும் பெருமைப்படலாம்.

குருக்கள் அவர்கள் தனது குடும்பம், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர் என பலதும் பெற்று வாழ்ந்து வருகின்றார். மேலும் இவரது குடும்பம் சமூகத்துடன் ஒன்றி அன்பு ஆதரவாக வாழும் பண்பைப் பெற்று இருப்பது சிறப்பம்சமாகும்.

இத்தகைய பல சிறப்புப் பண்புகளைக் கொண்ட குருக்கள் அவர்கள் மேலும் பல ஆண்டுகள் வாழ இறைவன் அருள் புரிவாராக.

**பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர், பேராசிரியர் கலாநிதி. மா.வேதநாதன் அவர்கள் வணங்கி வழங்கிய வாழ்த்துச் செய்தி

நயினை நாகபூஷணி அம்பிகையின் பாதகமலங்களைப் பணிந்து நயினை நாகபூஷணி அம்மன் திருத்தலத்தின் ஆதீன குருவாக விளங்கும் மூத்தசிவாச்சாரியார் சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள் அவர்களது சதாபிஷேக வைபவ சிறப்பு மலராக வெளிவரும் "சீதாமஹேஸ்வரம்" எனும் சிறப்பு மலருக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கு அன்னையின் அருளினால் கிடைத்த பேறு மகிழ்ச்சி தருவது. பெருமைக்குரியது.

குருக்களவர்கள் இலங்கையின் மூத்த சிவாச்சாரியப் பெருமக்களுள் கௌரவத்திற்கும் போற்றுதலுக்கும் உரியவர். பாரம்பரிய குருகுலக் கல்விமரபின் வழிவந்து நயினாதீவு ஐ. கைலாசநாதக்குருக்களினால் ஆச்சார்யாபிஷேகம் செய்து வைக்கப்பட்ட குருக்களவர்கள் மனம் மொழி மெய்களால் ஒன்றித்து நெகிழ்ந்து நயினை நாகபூசணி அம்பிகைக்கு பூஜை செய்கின்றபோது அதனைக் கண்டு பக்தியில் திளைப்பதை எனக்குக் கிடைத்த பாக்கியமாகவே நான் கருதுகிறேன்.

சுமார் அரைநூற்றாண்டுகால குருத்துவப்பணியில் பெருமைக்கும் புகழுக்குமுரிய பல கைங்கரியங்களையும் அரும்பெரும் சமூக சேவைகளையும் செய்த குருக்களவர்கள் தீவுப்பகுதியில் மட்டுமன்றி நாட்டிலும் சர்வதேசநாடுகளிலும் இந்துசமயத்தின் பெருமைக்குரியரென்பது வெள்ளிடைமலை.

நயினாதீவு மக்களின் பெரும் அன்புக்குரிய அந்தண சிரேஷ்டராக அவரைக்கண்டு மகிழ்ந்திருக்கிறேன். சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன் நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் மஹோற்சவகுருவாக அவரைக்கண்டபோது அம்பிகையின் கருணையை அவர் விழிகளில் கண்ட உணர்வு என்னை பக்திப் பரவசப்படுத்தியதை மறக்கமுடியாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகவும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாகவும் விளங்கியமை குருக்கள் அவர்களின் குலப்பெருமைக்கு நாகபூஷணி அம்பாளின் அனுக்கிரகத்தினால் கிடைத்த பெரும்பேறு என்றே கூறலாம்.

குருக்கள் தம்பதியினரது சதாபிஷேக வைபவம் சிறப்புற எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கக் கிடைத்த பேற்றினை நினைத்துப் பார்க்கிறேன். என்னே என் அன்னையின் அருள்! குருக்களும் குடும்பத்தினரும் நீண்ட ஆயுளோடும் நிறைந்த மகிழ்ச்சியோடும் வாழ்க என வாழ்த்தி வணங்கி என் அன்னை நயினைத்தாயின் திருவருள்பொழியும் திருவிழிகளால் வழங்கும் கடைக்கண் பார்வையில் கசிந்துருகி நிற்கிறேன்.

**பேராசிரியர் கலாநிதி. மா.வேதநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த
## அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர்
## கலாநிதி. க.பிரேமகுமார்
## வழங்கிய வாழ்த்துரை

1935ம் ஆண்டு யாழ்ப்பாணம் நயினாதீவை பிறப்பிடமாக கொண்ட சிவஸ்ரீ. ச. மஹேஸ்வரக்குருக்கள் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலில் ஆதினகுருவாகவும், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோயிலில் பிரதமகுருவாகவும் பணியாற்றும் இவரின் எண்பதாவது பிறந்ததினத்தை முன்னிட்டு இவரின் குடும்ப அங்கத்தவர்களால் திருமால்பாயிரம், அம்மன் நூற்றெட்டு நாமங்கள் அடங்கிய தமிழ் விளக்கங்களுடன் “2014ல் சீதாமஹேஸ்வரம் சதாபிஷேக சிறப்புமலர் வெளியீடு” எனும் தலைப்பிலே நூலாக வெளியிடுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இவரின் மகன் கலாநிதி பாலகைலாசநாதசர்மா அவர்கள் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் சம்ஸ்கிருத சிரேஷ்ட விரிவுரையாளரும் கூட. இந் நன்நாளிலே சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் என்றமுறையில் எனது வாழ்த்துமடலை தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் கோண்டாவில் நாராணயசாஸ்திரிகள், யாழ்ப்பாணம் சீதாராமசாஸ்திரிகள். நயினாதீவு ஐ. கைலாசநாதகுருக்கள் ஆகியோரிடம் பாரம்பரிய குருகுலக் கல்வியைப் பயின்றவர். இவருக்கு 1965ம் ஆண்டு நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் பிரதிஷ்டாபூசணம், ஐ. கைலாசநாதகுருக்களினால் ஆச்சாரியாபிஷேகம் செய்து வைக்கப்பட்ட குருக்கள் பட்டம் பெற்றவர். நூற்றுக்கு மேற்பட்ட மஹாகும்பாபிஷேகங்கள், இருநூற்றிஐம்பது மகோற்சவங்களில் பிரதமகுருவாகவும், ஆயிரம் கும்பாபிஷேகங்களிலும் பங்குபற்றியுள்ளார். ஐம்பது வருட காலமாக சிவாச்சார்யப் பணிபுரிந்து மேலும் பல இடங்களில் மஹா கும்பாபிஷேகங்களையும், மகோற்சவங்களையும் நடாத்தியுள்ளார்.

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவராகவும், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும், சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியாகவும் பல சமூகசேவைகளில் ஈடுபட்டுள்ளார். மேலும் இவர் பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரத சமயசமூகப் பணிகள் பலரது பாராட்டுக்குரியதும், சமூகத்திற்கு நன்மை பயப்பதாகவும் விளங்குகின்றது என்பது பெருமைக்குரிய விடயமாகும். மேலும் இதுபோன்ற பல சமய சமூகப் பணிகளில் இவர் ஈடுபட வேண்டுமென்றும் இன்னும் பல ஆண்டுகள் இவர் நீடுழிவாழ வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு திருவருள்பாலிப்பாராக.

வாழ்த்துக்களுடன்

**கலாநிதி. க.பிரேமகுமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவரும்**
**சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவரும்,**
**அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவரும்**
**இளைப்பாறிய ஸ்கந்தவரோதயக்கல்லூரி அதிபருமாகிய**
**செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்கள்**
**வழங்கிய வாழ்த்துரை**

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

சீரும் திருவும் நிறைந்த சிவாச்சாரியப் பெருந்தகையும், ஈழத்திருநாட்டில் சிவாச்சாரிய பீடத்தை அலங்கரித்து வரும் மதிப்பார்ந்த பீடாதிபதியும் எங்கள் நாட்டிலுள்ள உயர் சக்தி பீடங்களாக விளங்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி, சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி தேவஸ்தானங்களின் குரு முதல்வருமான சிவஸ்ரீ ச.மஹேஸ்வரக் குருக்களின் அகவை எண்பது பூர்த்தி விழாக்குறித்து வாழ்த்துவதில் ஆனந்த மடைகின்றேன். ஆற்றலும் ஆளுமைச் சிறப்பும் மிக்க சிவாச்சாரியத் தலைமகன் எம் சமூகத்துக்குக் கிடைத்த பெரும் சொத்து என்றால் மிகையாகாது. எல்லோரையும் மதிக்கும் பண்பும் எவரையும் அரவணைககும் ஆற்றலும் அவரது தனித்துவம் மிக்க சுபாவம் எனலாம். எனது தாயாரிடம் சிறுபராயத்தில் கற்ற இவர் அவரைக் கண்டதும் கொடுக்கும் மதிப்பைக் கண்டு யான் ஆச்சரியப்படுவேன். உயர்ந்த பெருந்தன்மை யுடைய குருக்கள் ஐயா அவர்களும் அம்மாவும் அகவை எண்பது பூர்த்தி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி மண்ணில் நல்ல வண்ணம் பல்லாண்டு, பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன். ஐயாவின் சிறப்புக்கு இலக்கணமாக விளங்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரையும் வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்கள் அவர்களது எண்பதாவது பிறந்த தினத்தை முன்னிட்டு இடம்பெறும் சிறப்பான சதாபிஷேக வைபவத்துக்கும் வெளியிடப்படும் "சீதாமஹேஸ்வரம்" எனும் சிறப்பு மலருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்தண சிரேஷ்டரான சிவஸ்ரீ மஹேஸ்வரக் குருக்கள் இலங்கையின் மூத்த சிவாச்சாரியப் பெருமக்களுள் ஒருவராக கருதப்படும் பெருமைக்கும் புகழுக்குமுரிய உத்தமராவார்.

குருக்கள் அவர்கள் தமது குருகுலக் கல்வியை சிறந்த அந்தணக் குருமார்களான கோண்டாவில் நாராயண சாஸ்திரிகள், யாழ்ப்பாணம் சீதாராம சாஸ்திரிகள், நயினாதீவு ஐ. கைலாசநாதக் குருக்கள் ஆகியோரிடம் பயின்று அந்தண குலத்துக்குரிய சிறப்புக்களைப் பெற்றுக்கொண்டார். அது போன்றே பெருமைக்குரிய கைலாசநாதக் குருக்களினால் ஆச்சாரிய அபிஷேகம் செய்து வைக்கப்பட்டவர். மேலும், 1966 ஆம் ஆண்டு சுதுமலை அம்மன் ஆலயத்தில் தமது முதல் உற்சவத்தைத் தொடங்கி குலப்பெருமைக்கு வித்திட்டவர்.

அக்காலந்தொட்டு ஆயிரக்கணக்கான கும்பாபிஷேக வைபவங்களிற் பங்கேற்றதோடு, 250க்கும் மேற்பட்ட மகோற்சவங்களுக்குப் பிரதம குருவாக இருந்து பணிசெய்தமை அவர்தம் வாழ்நாளின் சிறப்பாகும். நயினை நாகபூசணி அம்மன், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன், நல்லூர் கந்தசுவாமி கோவில், நயினை ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவில் போன்ற பிரபல்யமான ஆலயங்களில் மகோற்சவ வைபவங்களிற் பங்கேற்றமை அவருக்குக் கிடைத்த பெரும்பேறு எனலாம்.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாக சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைவராகப் பணிபுரிந்தமையும், யாழப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக விளங்கியமையும், தொடர்ச்சியாக சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாக விளங்கியமையும் குருக்கள் அவர்களின் வாழ்நாள் சிறப்பு பணிகளாக நாம் போற்றலாம்.

குருக்கள் அவர்களின் அபிஷேக, உற்சவ கிரியா மேன்மை கருதி பல அமைப்புக்களாலும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டவர். அவற்றுள் 'கிரியா கலாபமுக்தாமணி', 'ஆகம வித்தகர்', 'கிரியா தத்துவநிதி, 'மூத்த சிவாச்சாரியார்' போன்ற விருதுகள் குறிப்பிடத்தக்கவையாகும். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் ஆலயங்களில் ஆகம ரீதியான கிரியைகளை மேற்கொண்டு பணிபுரிந்து இன்று சதாபிஷேகம் காணுகின்ற குருக்கள் அவர்களையும், அவர்தம் துணைவியாரையும் நாம் மனமாரப் போற்றிப் பாராட்டுகின்றோம். நிறைந்த ஆயுளோடு இன்னும் பல்லாண்டு காலம் அந்தணர் குலத்துக்கும் மற்றும் இந்து சமயத்திற்கும் அவர்களது வழிகாட்டல் கிடைக்கவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குருக்கள் தம்பதியினரது சதாபிஷேக வைபவம் சிறப்பாக இடம்பெற எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண. பிதா கலாநிதி.எஸ்.ஜெபநேசன்

## அவர்களின் வாழ்த்துச் செய்தி

சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்கள் ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மா தம்பதியினரின் சதாபிஷேக வைபவம் 12 - 11 - 2014 நடைபெறவிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

சிவஸ்ரீ மஹேஸ்வரக்குருக்களும், நானும் நெடுநாளைய நண்பர்கள். குருக்கள் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவிருந்த பொழுது அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. தமது சமயாசாரங்கள் ஒன்றையும் கைவிட்டு விடாது, அதேசமயம் நீதிக்காகவும் நேர்மைக்காகவும் குரல் கொடுப்பவராக அவரைக் கண்டேன். யாழ் மண்ணில் இத்தகைய ஆசார சீலர்களைப் பார்க்கும் பொழுது ராஜாஜி, கல்கி போன்றவர்களுடைய ஞாபகமே எனக்கு ஏற்படும். இவ்வாறு கல்வியும் ஞானமும், ஒழுக்கமும் நிறைந்த குருக்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்வது நமது சமுதாயத்திற்குப் பெருமையாகும்.

மஹேஸ்வரக்குருக்கள் அதிகம் பேசமாட்டார். ஆனால் தாம் சரியெனக் கண்டதனை எவர்க்கும் அஞ்சாது எடுத்துரைப்பார். அந்தணர்க்குரிய உடையுடனேதான் பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டங்களுக்கு வருவார். அவருடைய கண்ணியமான பேச்சும் நடையுடை பாவனைகளும் அவருக்கு பெருமதிப்பைத் தேடிக் கொடுத்தன.

அவரைப்போலவே அவருடைய பிள்ளைகளும் தமது ஒழுக்க நெறிகளை பேணிப்பாதுகாப்பதுடன் சம்ஸ்கிருத கல்வியிலும் சிறந்து விளங்குகின்றனர். ஒரு காலகட்டத்தில் சம்ஸ்கிருதக் கல்வி யாழ்ப்பாணத்தில் மேலேங்கி நின்றது. ஆனால் இலண்டன் பல்கலைக்கழகம் வெளிவாரிப் பரீட்சைகளை நிறுத்தியதுடன் சம்ஸ்கிருதக் கல்வி தளர்ச்சியடைந்தது.

இத்தகைய சூழலில் சமஸ்கிருதக் கல்வியை வளர்த்துவரும் மகேஸ்வரக்குருக்களின் குடும்பத்தினருக்கு யாழ் சமுதாயம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

மஹேஸ்வரக் குருக்களும் குடும்பத்தினரும் நல்லாரோக்கியத்துடன் நீடூழி வாழ்ந்து நமது சமுதாயத்திற்கு தொண்டாற்ற வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

**கலாநிதி.எஸ்.ஜெபநேசன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தர்மகர்த்தாசபைத் தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

### சதாபிஷேகம் காணும் சம்பு குமாரர்

ஈழத்து மக்கள் அனைவரின் வணக்கத்திற்கும் மதிப்பிற்கும் உரியவராக திகழ்பவர்தான், நயினைத்தாய் பெற்ற ஞானச்செல்வர் சிவஸ்ரீ சம்பு மகேஸ்வரக்குருக்கள். சக்தி பீடங்களில் சிறப்பு பெற்ற ஸ்ரீ புவனேஸ்வரி பீடமாகிய நயினையம்பதியில் பிறந்து, இப்பீடத்திற்கு நிகராகத் திகழும் சுதுமலையில் மணவாழ்வில் இணைந்து இன்று இந்த இரு பீடங்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தி, பிறந்த மண்ணுக்கும், புகுந்த மண்ணுக்கும் பெருமை தேடித்தந்து, சதா பிஷேகம் காண்கின்றார்.

இந்துக்குருமார் சபையில் அதி உயர்பதவியை வகித்து பணியாற்றிய பெருமையுடன், பல குருமார்களை உருவாக்கி எமது சமயத்திற்கு அரும்பணியாற்றிய ஒருவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமை மிக்க ஒருவர். சபைகளில் தனது ஆற்றலையும் அனுபவத்தையும் வெளிப்படுததி வந்தார். வருகின்றார். சைவ உலகமே போற்றும்படி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, இன்று சதா அபிஷேகம் காணும் பாக்கியம் பெற்று சிறப்புறுகின்றார். குடும்பமே ஒரு ஞானமும், கல்வியும் கலையும் நிறைந்த குடும்பமாகும்: இந்த மகிழ்வுடன் குருக்கள் பல்லாண்டு வாழ்க வாழ்கவென வாழ்த்தி வணங்குகின்றேன்.

அன்புடன்,
**ஆ.தியாகராசா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்**

**ஆலய தர்மகர்த்தா சபைத்தலைவர்**

**வைத்தியக்கலாநிதி ஆ. சிவபாதம் அவர்கள்**

**வழங்கிய வாழ்த்துரை**

எமது அம்மாள் ஆலயத்தில் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளாக பிரதமகுருவாக இருந்து குருத்துவப் பணிபுரிந்துவரும் எங்கள் குருக்கள் ஐயா சிவஸ்ரீ. ச. மஹேஸ்வரகுருக்களின் எண்பதாவது அகவையில் வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை தருவதில் அகமகிழ்கின்றேன்.

அம்பாள் ஆலயத்தில் நித்திய, நைமித்திய உற்சவங்களையும் மூன்று பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேசங்களையும் (1983,1999,2014) வெகு சிறப்பாக நடாத்தி வைத்த மூத்த சிவாச்சாரியார் ஆவார். அத்துடன் எமது அம்மாள் ஆலய மண்டபத்திலேயே தனது வாழ்வின் மூன்று மாங்கல்ய தாரணங்களையும் செய்யும் (திருமணம் 1962, அறுபது வயது 1995, எண்பது வயது 2014) பெரும் பாக்கியத்தையும் பெற்றவர் குருக்கள் ஆவார். இப் பெரும் பேற்றை கொடுத்த அருள் தாய் எங்கள் புவனேஸ்வரி அம்பாள் ஆகும். சிறந்த பாக்கியசாலியான எங்கள் குருக்கள் நாடறிந்த அறிஞரும் கூட பல இடங்களில் உற்சவங்களையும் மஹாகும்பாபிஷேகங்கள் பிரதம குருவாகிய இருந்து நடாத்தியிருக்கின்றார்.

குருக்கள் ஐயாவின் சமய, சமூக பணிகள் மேன்மேலும் வளரவும் .அவரின் குடும்பத்தவர்கள் சந்தோஷமாகவும் வாழ அம்பாள் அருள் புரிய வேண்டும். நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வவங்களும் பெற்று எங்கள் ஊர் அம்மா திருமதி சீதாலட்சுமி அம்மாவுடன் பார்வதி சமேத பரமேஸ்வரான நீடுழி வாழவேண்டும் என அம்பாளை வேண்டி வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

வைத்தியகலாநிதி
ஆ.சிவபாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய தர்மகர்த்தாசபை உபதலைவர் பேரம்பலம் வாதவூரர் அவர்களின் வாழ்த்துச்செய்தி

சைவம் வளர சமரசமாம் பூ மலர
வையத்தில் அன்பு மணம் பரவ - உய்வளிக்கும்
சைவப் பெரியார் மஹேஸ்வரக்குருக்கள்
குருத்துவ பணி தொடர வாழ்த்துகிறேன்.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்த தமிழும் சைவமும் பழைமையானவை. ஆனால் பழமை வாய்ந்த சைவத்துக்கு பல சந்தர்ப்பங்களில் சோதனைகள் ஏற்பட்டதுண்டு. ஆனால் இன்றும் அது அத்தனை சோதனைகள் வந்தும் நிலைத்து நிற்கின்றது என்றால் நமது முன்தோன்றிய சமய குரவர்களும் சைவப் பெரியார்களும் ஆண்பாலர் மட்டுமன்றி பெண்பாலர்களும் பங்களிப்பு செய்துள்ளனர் என்றால் மிகையாகாது. அப்படிப்பட்ட சைவப் பெரியார்கள் வழியில் வந்த மஹேஸ்வரக்குருக்கள் இன்று தனது எண்பதாவது வயதை எட்டி சிறப்பாக பிறந்த நாளை கொண்டாடுவதை விட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த நேரத்தில் தனது எண்பது வயது காலத்தில் எப்படியும் வாழலாம் என்றில்லாமல் என்னென்ன நல்ல காரியங்களை எமது சமூகத்துக்காக செய்தார் என்று சிந்திப்பது மிகப் பொருந்தும். கடந்த முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக சுதுமலை அம்மன் கோவிலின் பிரதான குருக்களாக பொறுப்பேற்று எமது கிராமத்து மக்களுக்கு பல துன்பங்களுக்கு மத்தியில் மன நிம்மதியையும், சந்தோசத்தையும் கொடுத்து நல்ல உபதேசங்களை வழங்கி வாழ்க்கையை நல்ல முறையில் நடாத்திச் செல்ல இன்றும் அரிய சேவையை செய்து கொண்டிருப்பதை காணக் கூடியதாக இருக்கிறது. தன்னுடைய வயதில் ஐம்பதுக்கு மேற்பட்ட ஆண்டுகளாக நூறுக்கு மேற்பட்ட மஹாகும்பாபிஷேகங்களை நடாத்தியும் இருநூறுக்கு மேற்பட்ட மஹோற்சவங்களை பிரதம குருவாக இருந்து நடாத்தியும் இன்றும் தன் சேவையை நடாத்திக் கொண்டிருக்கும் இவர் தன்னுடைய பெயருக்கும் புகழுக்குமாக வாழ்ந்தவரல்லர். இன்றும் இவரது சேவையை புகழ்ந்து பட்டங்கள் வழக்கப்பட்டும், இவரது கடமையுணர்வை கண்டு மதகுரு பீடாதிபதியின் தலைமைப் பதவியை வழங்கியும் இவரை பாராட்டத் தவறியவர்கள் எவரும் இல்லை. இவர் மக்கள் சேவையே தனது வாழ்க்கையாக வாழ்ந்து மனைவியின் ஒத்தாசையுடன் வாழ்ந்து வருகிறார் இவர் தொண்டு மேன் மேலும் தொடர்ந்து சைவம் வளரவும், நமது மக்கள் மனதில் மன அமைதியையும் நல்வாழ்க்கையை நடாத்துவதற்குரிய அறிவுரைகளையும் வழங்கி மேன்மேலும் இவர் பணி தொடர புவனேஸ்வரி அம்பாள் கடாட்சம் எப்போதும் இவருக்கு உண்டு. இவருடைய பணிகள் மேன்மேலும் தொடரவும் நம் மக்களுக்கு சுபிட்சமான வாழ்க்கை கிடைக்கவும் இவருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை கூறுவது மட்டுமல்லாமல் இவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து "வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற நல்வாக்குக்கு அமைய இன்னும் எமது மக்களுக்கு தெய்வமாக வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன்

**பேரம்பலம் வாதவூரர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
## நயினாதீவு தம்பகைப்பதி பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரர் ஆலய நிர்வாகசபைத்தலைவர் தனபாலசிங்கம் வாசித்தளித்த வாழ்த்துரை

எல்லாம் வல்ல அருள்மிகு பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரப் பெருமானின் பாதார விந்தாரங்ளை வழுத்திக் கொண்டு அதி வந்தனீய குருமணி சிவஸ்ரீ சம்பு மஹேஸ்வரக் குருக்களையும் முதற்கண் வணங்கிக் கொள்கிறேன். நயினாதீவு தம்பகைப்பதி ஸ்ரீ வீரபத்திரப் பெருமான் ஆலயத்துக்கும் குருக்கள் ஐயா அவர்கட்கும் பிரிக்கப்பட முடியாத நெருங்கிய தொடர்பு இருந்து கொண்டே இருக்கிறது. நித்திய பூசை தொடக்கம் கும்பாபிஷேகம், வருடாந்த உயர்திருவிழாவாகட்டும் வேறு ஆலய சம்பந்தமான விடயங்களாயினும் எமது ஆலய நிர்வாகசபை குருக்கள் ஐயா அவர்களின் ஆலோசனை பெற்றே செயற்படுவது வழமையாகி விட்டது. அவ்வளவுக்கு எமது ஆலயத்தின் வளர்ச்சியில் கூடிய அக்கறை கொண்டவர் குருக்கள் .

மனித வாழ்க்கையில் நீடித்த வாழ்க்கை வாழ்வது என்பது தெய்வ கடாட்சமே ஆகும். இரு பெரும் அருட் சக்திகள் ஆகிய ஸ்ரீ நாகபூஷணி அம்பாளினதும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளினதும் நித்திய உபாசகராக விளங்குகின்றமை இந்த எண்பது வருட கால வெள்ளத்தில் குருக்கள் ஐயா அவர்கள் சுக துக்க நிகழ்வுகளைத் தாண்டி வந்துள்ளார் என்பது எவரும் கூறத் தேவையில்லை.

சங்கப் புலவர் ஒருவர் கூறுகிறார்

"ஆண்டு பலவாக ஓசையிலவாகுதல்
யாங்காங்கிய ரென வினவுதிர் ஆயின்
மாட்சி என் மனைவியொடு
மக்களும் நிரம்பினர்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே"

கவிஞரின் கூற்று குருக்கள் ஐயா அவர்களின் வாழ்க்கைக்கும் பொருந்தும் என எண்ணுகின்றோம்.

குருக்கள் ஐயா அவர்கள் நீடித்த வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று பல்லாண்டு காலம் வாழ அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளை சமேத ஸ்ரீ வீரபத்திரப் பெருமானையும் மனமாரப் பிரார்த்திக்கின்றேன்

சுபமங்களம்

**சி. தனபாலசிங்கம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா ஆலய பரிபாலனசபைத் தலைவர் அவர்களின் வாழ்த்துரை

பெருங்காடு கிராஞ்சியம்பதி கந்தசாமி கோவில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இவ்வாலயத்தை மூன்று தர்மகர்த்தா பரம்பரையினர் பரிபாலித்து வந்தனர். காசிநாதர் சின்னத்துரை என்னும் முருக பக்தரால் இவ்வாலயம் உருவாக்கப்பட்டது. கிராஞ்சியம்பதி வளாகத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. முருகன் கோவிலும், சிவன் கோவிலும் சற்று தள்ளி முத்துமாரியம்மன் கோவிலும் அமைந்திருப்பதானது. தமிழத்து தென் மதுரையில் திருப்பரங்குன்றமும், மதுரை மீனாட்சி அம்மனும் மாரியாத்தா கோவிலும் அமைந்திருக்கும் அழகிற்கு நிகரானது என்று ஈழத்திற்கு வந்திருந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறியமை இங்கு நினைவு கூறத்தக்கது.

இவ்வாலயத்தில் புரோகிதர்களும் மூன்று பரம்பரையினர் நித்திய நைமித்திய பூசைகளைச் செய்து வந்தார்கள். இப் புரோகிதர்களும் சிவஸ்ரீ சம்புகேஸ்வரக் குருக்களும் ஒருவராவர். மூன்று பரம்பரையினர்களும் ஆலயச் சூழலிலே வாழ்ந்து வந்தனர். சிவஸ்ரீ சம்புஹேஸ்வரக் குருக்களின் மகனான சிவஸ்ரீ. ச. மஹேஸ்வரக் குருக்கள் 1935ம் ஆண்டு பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். உயர் கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும், யாழ் பரமேஸ்வராக் கல்லூரியிலும் தொடர்ந்தார். குருகுலக் கல்வியை கோண்டாவில் நாராயண சாஸ்திரிகள், யாழ் சீதாராம சாஸ்திரிகள் நயினாதீவு ஐ. கைலாசநாதக் குருக்கள் இவர்களிடம் கற்றுக் கொண்டார். யாழ்ப்பாணம். கொழும்பு போன்ற இடங்களில் கூட்டுறவுச் சங்க முகாமையாளராகவும் காசாளராகவும் பதவி வகித்தார். 1962ம் ஆண்டு சீதாலஷ்மி அம்மாவைத் திருமணம் செய்தார். 1965ம் ஆண்டு எமது ஊர் ஐ. கயிலாசநாதக் குருக்களினால் ஆச்சாரியாபிஷேகம் செய்து வைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966ம் ஆண்டு சுதுமலை அம்மன் கோவில் முதல் உற்சவத்தை நடாத்தினார். சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவராகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவை உறுப்பினராகவும் சர்வதேச இந்து மதகுரு பீடாதி பதியாகவும் விளங்கினார். நயினாதீவு நாகபூசணி அம்மன் மகோற்சவம், சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் மகோற்சவங்களை சிறப்பாக நடாத்தி வைத்துள்ளார். பல இடங்களில் மகாகும்பாபிஷேகங்களையும். மகோற்சவங்களையும் நடாத்தினார். கிரியா கலாப முத்தாமணி, ஆகமவித்தகர், கிரியா தத்துவநிதி போன்ற விருதுகளையும் பெற்றிருந்தார்.

கிராஞ்சி முருகன்பால் மிகுந்த பற்றுள்ளவராக இருந்தார். முருகன் கோவில் மகாகும்பாபிஷேகங்கள் நடைபெற்ற காலங்களில் அதில் பங்குபற்றி வந்துள்ளார். இவரின் மகனாருக்கு நோய் ஏற்பட்ட போது முருகனில் நேர்த்தி வைத்து ஷண்முகார்ச்சனையும் செய்தார். தனது குலதெய்வத்தை ஒருநாளும் மறக்காமல் இருக்கிறார். நயினாதீவுக்குச் செல்லும் போது கிராஞ்சி முருகனை ஒரு கணம் தரிசித்துவிட்டே அப்பால் செல்வார்.

இவருடைய எண்பதாவது அகவை பூர்த்தி விழாவன்று வெளியிடப்படும் "சீதாமஹேஸ்வரம்" சதாபிஷேக சிறப்பு மலர் சிறக்கவும் முருகனை நினைவு கூர்ந்து எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

சுபம்

**த. தவராசா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை மருத்துவர் சங்கத்தைச் சேர்ந்த**
**வைத்திய கலாநிதி. வி.கனகரத்தினம் அவர்களின்**
**வாழ்த்துரை**

குருமணியின் சதாபிஷேகம்
சர்வமங்களமாக நிறைவு பெற
நயினை நாக பூஷணி சுதுமலை
புவனேஸ்வரி அம்பிகை அருளாசி
வேண்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.

சதாபிஷேக
தம்பதிகளின் ஆசிர்
வாதத்தையும் வேண்டி
நிற்கின்றோம்.

இத்தம்பதிகள் தீர்க்க ஆயுசு பெற்று
தேக சுகத்துடன் இன்னும்
பல்லாண்டு வாழ
பிராத்திக்கின்றோம்.

குருமணியின் அன்புள்ள
**டாக்டர் வி. கனகரெத்தினம் குடும்பம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுமால் பெயராயிரமும் லலிதா அஷ்டோத்தரசதநாம ஸ்தோத்திரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாராட்டு விழா நாயகராக



சுதுமலையில் பிரதிஷ்டா
பிரதம குருவாக



நயினையில்
மஹோற்சவ குருவாக [2010]






சர்வமத பிரார்த்தனையில்



மேலைத்தேசத்தில் இந்துமத குருவாக



யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக



திருக்கடவூரில்
விஜயரதசாந்தியின் போது



பிரதம விருந்தினராக



சிதம்பரத்தில் ஐம்பதாவது
திருமணநாள் நிறைவின்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னப்பிராசன குருவாக



முத்த குடும்ப அங்கத்தவர்களுடன்



ஷஷ்டியப்த பூர்த்தியில்



இந்துமத குருபீடாதிபதியாக



உலக இந்துமாநாட்டில்



ஆயுஷ்ய ஹோம குருவாக



ஆச்சார்யாபிஷேக தீக்ஷா குருவாக



பிரம்மோபதேச குருவாக



உபநயன குருவாக



ருது சாந்தி குருவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுமால் பெயராயிரம்

காத்தற் கடவுளாம் மகாவிஷ்ணுவின் சகஸ்ரநாமத்திற்குப் பாண்டியனார் செய்த பெயர்த்துரை நூலாக அமைவது நெடுமால் பெயராயிரமாகும்

ஞானம் தலைப்பெற்ற நம்முன்னோர் ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லா்க்கு ஆயிரம் திருநாமம் பாடி வைத்தார்கள். பெயரளவில் இந்நாமங்கள் உள்ள நெகிழ்வையும், பக்தி உணர்வையும், பெருக்குபவை உன்னி நோக்கில் பெயர்களுக்குள் மறைந்து இருக்கும் எண்ணக்கருக்கள், நம் நுண்மதிக்கு விருந்தாய், மக்கள் நுழை புலத்தை ஞானத்தெளிவிற்கு இட்டுச் செல்லக்கூடியன. பெயராயிரங்களின் நோக்கும் இதே. ஓதுவார் நெஞ்சினையும் நுண்மதியையும் ஒருங்கே இசைந்து நல்லிந்திரியங்களை ஈர்த்து ஞானங்கடந்துபோய் குணங்குறி கடந்து பரம்பொருளிடம் சேர்த்தலே அது .

பரம்பொருள் ஒன்று , பாரெலாம் பரந்து அவையவையாய் நிற்பது பலபெயருடைய, பல இனங் கொண்டது. ஞானமும் கடந்து இந்திரியங்களும் கடந்து நிற்கும் பொருளை ஆயிரம் பெயர் சொல்லிக் கூவி அகத்திலிருத்தி வந்தித்தால் ஞானவழியாலும் புலன் வழியாலும், உணர்வு வழியாலும் அப்பொருளோடு ஒன்றும் பேற்றை நாம் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாண்டியனார் அருளிச்செய்த
## நெடுமால் பெயராயிரம்
### பரிபாடல்

ஓஒம்
உலகெலா மாகியோன், ஊரன்,
எனையவுந் தன்பா லீர்ப்போன்,
எதிர்வொடு கழிவு நிகழ்வெனு மேந்தல்,
எதிர்ப்படு தோற்ற மியற்றுநன்,
எதிர்ப்படு தோற்ற மேந்துவோன்,
எதிர்ப்படு தோற்ற மாயிருப்போன்,
எதிர்ப்படு தோற்ற மியையு மாவி,
எதிர்ப்படு தோற்ற மிறப்பப் பெருக்குநன்,
இயல்பிற் றூய வின்னுயிர்,

விழுமிய நல்லுயிர்,
வீடுபெற் றார்தம் விழுமிய செல்சார்,
தாவிலி, யாளி, சான்று, செய் யறிஞன்,
பொன்றாதான், புணரி,
புணர்ப்பிய லறிஞர் தணப்பரு வியவுள்,
முதனிலை யாளி முதலி,

ஆள்யாளி யாக்கையன்,
திருவாளன், கூந்த லழகியன்,
நம்பி, அனைத்துமா யுள்ளான்,
அனைத்து மழிப்பான்,
அருட் பொலிவு,
துளக்கமி னெடுநிலை,
தோற்றமெழு முதல்,
குன்றாப் பொருட்குவை,

குலவு பிறப்பாளன்,
எல்லாப் பேறு மெய்துவிப்போன்,
புரவலன்,
துகளறு பிறப்பினோன், தோன்றல், இறைவன்,
தான்றோன்றி, தமர்க்கு நலந் தழைப்பிப்போன்,
நாள்விருந்தியன் ஞாயிறு,
திருவிழி முளரி சிவணினோன்,

பெருங்குரன் முழக்க மிடுவோன்,
தொடக்கமொடு முடிவு துன்னலன்,
தந்தை, சால்புகெழு தந்தை,
தந்தையின் தான் இறந்தோன்,
அளவையினளக்கப் படான்,
ஐம்பொறி யாளி,
முளரி யுந்தி முகிழ்த்தோன்,
உம்பர் தோன்றல், உலகுசெய் வினைஞன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமொழி யாயினான்,
சொற்பொரு ளுலகஞ் செப்பமுறப் புனையுநன்,
பன்னப் பணைத்தோன் பண்டை முதியோன்,
ஞாலஞ் சுழற்று நடுநிலைப் புள்ளி,
கருவியிற் கவரப் படான்,
எஞ்ஞான்று மிருப்போன், எழின்மாயோன்,
அருள்கூர் செங்கணன், அனைத்து மீட்குநன்,
குறைவற நிறைவுற்றோன்,

உலக மூன்ற னுறையுள்,
தூய்மை, பொலிவு விழுப்பம்,
அடங்கலு மாள்பவன்,
உயிர்ப்புக் காற் றுதவுநன், உயிர்ப்புவிளி,
மூப்பன், சீரியோன், மக்கள்கிழான்,
பொலம்பீலி, நிலஞ்சூலி,

திருவின் காதலன், செருமதுத்துத்தோன்,
பேரிறைவன், அடுதிறல், பெருவில்லி, ஒள்ளியன்,
நிலங்கடந்தான், விறந்து துவன்றியோன்,
மேலோரை யில்லான்,

மிண்டர் மீதூர்தற் கரியான்,
செய்ந்நன்றி யறிவெகெழு செம்மல், செயற்பாடு,
தான்றன்னை யுடையான், இமையவர் பெருமான்,
தஞ்சம், பெருங்களிப்பு, தற்பிழம் பாயினான்,
ஞாலம் யாவற்றுக்கும் வித்து,
மகப்பிறப்பு வாயில்,
பகற்பொழ்து, யாண்டு, பாம்பு, தெருள்,

எல்லாக் காட்சியு மியற்கை யினுடையான்,
பிறப்பிலாளன், யாவர்க்கு மிறைவன்,
பெற்றான், பெற்றம்,
பெற்ற மெல்லாம் பெறுவிக்கு முதலி,
வழாது வைகுவான்.

ஏற்றை யேனம்,
வரைவில் பிழம்பினன்,
எனைத்துப் புணர்ப்பினு மெதிர்வோன்,
வாழ்வெய்துவோன்,
வாழ்வுறு நெஞ்சினோன்,
வாய்மையாளன்,
ஒப்பநிற்கு முள்ள மமைந்தான்,
அளவினமைவோன், அமைதியாளன்,
செயல் பழுதாகான், செம்மலர் விழியோன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனேற் றூர்தி. ஆனேற்றுப் பிழம்பினோன்,
சினவி. பல்பல சென்னியன்.
உலகு தாங்கு மொருவன்.
உலகெலாம் பிறக்கு மொருவயின்.
செஞ்சொற் செவிமடுப்போன்.
இறவாமை யியல்பாயினோன்.
நின்றாங்கு நிற்க நெடுநிலை மதலை.

சிறப்புடை ய பேரேற்றஞ் செப்விப்பான்.
மெய்யுணர்வு வீறுடையான்.
எங்கணு மியல்வோன், எல்லா முணர்வோன்-
கதிரவன். ஞாலங் காவற் பணை ருள்
மாந்தரான் வழுத்துபு வேண்டப் படுவோன்.
கல்வி யெல்லாங் கண்ட முனைவன்.
கல்விப் புலமை யெல்லா மாயினோன்.
புலத்துறைக் கருவிநூற் புலமை குன்றான்.
பனுவ லுலகம் யாக்கை யாயினான்.

பனுவ லுலகம் பாற்பட வுணர்ந்தோன்.
பனுவ லியற்றும் பாவலன்,
உலகிற்கு மேற்பார்வையாளன்.
உம்பற்கு மேற்பார்வையாளன்
அறத்திற்கு மேற்பார்வையாளன்,
செய்செயல் செய்யார் செயலென வுடையான்.
நாலுயி ரொருதான்.
நால்வேறு முதல்வ ராயினான்.
நாற்கொடும் பல்லன். நாற்பெருந் தோளன்.

பேரொளிப் பெரும் பிழம்பு.
துப்பு. துப்பு நுகர்வோன்.
பிழையெலாம் பொறுக்கும் பெரியோன்,
முதுஞால முற்றோன்றல்.
கொடுமையி லாளன். அடுதிற லாளன்.
இகல்வெல்லு மியல்பினன்.
ஞாலம் பலவு ஞாலும் வித்து.
பெயர்த்தும் பெயர்த்தும் பெருக வாழ்வோன்,

இமையவர்கோன். இளவல்.
நிலங்கடந்த நெடுமுடி யண்ணல்,
செயல் பழுது போகான்.
வாலியோன், வன்றிறல், வான்வேந் தும்பரான்,
தொகைநிலை, தொல்படைப்பு,
திரிபின்றி மன்னுந் தெருளுயிர்.

ஒழுக்கம், அடக்கம் .
உரைநற் பாலான், உயர்ந்தோங்கு மருத்துவன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதிடை யீடில் புணர்ப்பியல் புணரி,
மள்ளர்ப் பொருதட்டு மாய்ப்போன்,
திருவின் கொழுநன், செவ்விய தீந்தேன்,
ஐம்பொறியி னகப்படான்,
170 மயல்பெரி தாக்குவோன்,

முயற்சி பெரியான்,
திண்மை பெரியான், ஒண்மை பெரியான்,
ஆண்மை பெரியான், ஆற்றல் பெரியான்,
திகழொளி பெரியான்,
விதந்து காட்டொணா மெய்யினன்,
திருவளர் செல்வன்,
அளவறியல் ஆகா ஆருயிர்,
180 இருங்குன்ற மேந்தி,

வல்வில் லாளி, வைய மேந்தி,
திருவின் நிலைக்களம்,
நன்மக்களின் செல்சார்,
விலக்க லாகான், விண்ணவர் களிப்பு,
மண்ணக மிழிந்த தண்ணளி யாளன்
முதுமொழி நவின்ற முதியோர் முதல்வன்,
ஒள்ளொளி யாளர் உள்ளொளி,
190 உளஞ்செறுத் துயர்ந்தோன், ஒதிமம், கலுழன்,

அரவினுட் சிறந்த அராஅவாசு,
செம்பொற் கவின் திருவுந்தியான்,
நன்கு நோற்றோன்,
செந்தாமரைத் திருவுந்தியழகன்,
மக்கள் கிழான், மறலியை யில்லான்,
199 யாவையும் பார்ப்பான், யாளி,

சேர்ப்பான், சேர்வை,
நிலைபெயராது நிலையுநன்,
பிறப்பிலன், பிறராற் பிணித்த லொல்லான்,
பண்பளிப்போன்,
விதப்பபுறச் செவிப்படு மெய்யினன்,
அவுணர்க் கொல்லி
209 ஆசிரியன், ஆசிரியர்க் காசிரியன்

அனுத்துலகினும் அவிர் சுடரொளி,
வாய்மையின் வாய்மை,
வாய்மை மருவு வன்றிறல்,
இமைப்போன், இமையான், எழின்மலர்த் தாரினன், சொற்கோ-
வீறுகொண்ட மெய்யுணர்வாளன்,
முந்துற்றுக் கொண்டுய்ப்போன்,
219 சேரிச் செம்மல், திருமாவளவன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்குமுறை, வழங்கல் வழுவான்,
வியவுள் வயவளி,
ஆயிரந்தலை யண்ணல்,
அனைத்துலகினாருயிர்,
கண்ணா யிரவன்,
உருளை வாழ்க்கை திருமு விப்போன்,
மீட்சி யினமைதி மேவுதிரு வுளத்தான்,
நன்கு மறைப் புற்றோன், நன்கனம் வீப்போன்,

பகற்பொழுது பாரிப்போன்,
வானோர்க்கு மடைகொடுபோய் வழங்குமெரி,
நில்லா துழிதரு ஞெமர் காற்று,
வையந் தாங்க வல்லான்,
எல்லார்க்கும் நல்லருள் ஈயும் வள்ளல்,
எதிர்ப்படுந் தெளிவுடை யருளெழு C நஞ்சினன்,
உலகெலா மாக்குநன், உலகெலாமுண்ணுநன்,
உலகெலா மாக ஓங்குபு பணைப்போன்,

வழிபடுநன், வழிபடப்படுநன்,
எல்லார்க்கும் நல்லான், எல்லாம் புதைப்போன்,
நீர்மையி னிகழு நெடுமால், மாந்தரன்,
எண்வரையறை யில்லான்,
அளவையிற் பெறப்படா வாருயிர்,
விதந்தோதப்படம் விழுமியோன்,
தன்வழிப்படுஞ் சான்றோரை யாக்குவோன்,

தூயருள் தூயன்
பெட்ட வெல்லாம்பெற்றோன்,
எண்ணிய வெல்லா மெய்தினோன்,
பெறுநர்க்குப் பேறு பெய்வோன்,
பேறு சீர்ப்ப வேண்டுஞ் செயன்முறைமை,
ஆனேற்றியல்பினன், ஆனேற்றை,
நெடுமால்,
ஆனேற்றிய லேணிப்படி யணியமைததோன்,
அறம்வயிறாயினோன், அறம் வளர்ப்போன்,

அறமாகின்றோன்,
உலகினும் உயிரினும் தான்வேறுள்ளான்,
பனுவலம் பாற்கடல், பனையெழிற் றோளன்,
கடக்கலரியன், சொல்வளஞ் சுரப்போன்,
வீறுகெழு விண்வேந்து,
செல்வமளிக்குந் திருமால், செல்வம்

பல்வேறு பிழம்புகொள் பண்பினோன்,
மல்லல்வண் பிழம்பினோன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுசுடர்க் கதிரூ டிலங்குவான்,
பிறவெலாம் வயக்கும் பெற்றியன்,
திண்மை யாண்மை யொண்மை சிறந்தோன்,
ஒள்ளொளி யொளிரு முள்ளத் தூய்மையன்,
துன்னற் கரிய சூட்டழல்,
சீர்நல மெல்லாந் தேங்கிய தேக்கம்,
செவ்விதிற் றெளியச் செப்பு மெழுத்து,
மறைமொழி,

திங்களின் தண்கதிர், செஞ்ஞாயிற்று வாளொளி,
இன்மருந் தியல்கதி ரெழுவாய்,
தன்னியல்பி னொளிருந் தனிஞாயிறு,
முயன்மறு வெண்குருதிப்பால்,
இமையவ ரிறைவன், எழுபிணி மருந்து,
அனைத்துலகிற்கு மணைக்கட்டு,
வாய்மையோ டறனு மருளு நல்லாண்மையன்,
இறப்பெதிர்வு நிகழ்வினோ ரிறைஞ்ச நின்றான்,

வளி, வளி வலவன், மண்டழல்,
காமம் விளைப்போன், காமங்கொல்லி,
கவர்கவினி, காதலன்,
தமர்விழையுந சாலவளிப்போன்,
ஏந்தல்,
ஊழிமுதலிய பொழுதுண் டாக்குநன்,

திருமியூழி தெருமரல் செய்வோன்,
மிகுபல புணர்ப்பினோன், மீதூண் மிசையுநன்,
கட்புலனாகான், மெற்றெனத் தோன்றுவோன்,
அவுண ராயிரவரை யட்டோன்,
எல்லையில் வயவரை யினிதுகடந்தட்டோன்,
வேட்கப் படுவோன், விழுமிய சீரியோன்,
விழுமியோர் விழையுநன்,

மயிலெருத்துறழ் வயங்கு கேழினன்,
பிணிக்குநன், பெய்யுநன்,
சினஞ்செற்றோன் சினஞ்செய்வோன்,
வினைமுதல்,
உலகெலா மேந்து முயர்தோள் வெற்பன்,
வையந் தாங்கும் வயவன், வழாஅன்
சீர்த்திமான்,
உயிர்ப்புவளி, உயிர்ப்புவளி யுந்துநன்,

இமையவரிளங்கோ,
கடற்பெருக்கு,
நிலைக்களன்,
வழுக்கான், மாண நடப் பட்டோன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லுயிரெல்லாந் தொக்க தொகைநிலை,
ஒருங்குசெறி யுலக மூன்றுவோன்,
பொதிச் சுமைப் பகடு,
330 வேண்டுவார் வேண்டுவ வேண்டியாங்கு நல்குவோன்,

உயிர்ப்புவளி யூர்தி,
பொதிந்த பொருள்வைப்புப் புத்தேள்,
செழுவளங்கெழு செஞ்ஞாயிறு,
முதற்புத்தேள்,
பொருந்தலர் மூதூர் போழ்வான்,
கவலாதான், கடப்பிப்போன்,
கரை சேர்ப்பான்,
339 மள்ளன், மள்ளர், மரபினோன்,

ஆளாளி,
ஊறுதுணை,
எஞ்ஞான்று மிவண்மீளி,
முளரிமான், முளரி மலர்ந்தன்ன கண்ணான்,
உந்தியந் தாமரை பூத்தோன்,
செந்தாமரைத் திருக்கண் ணழகன்,
தண்ணந் தாமரைத்தாய்,
349 உயிருட லெடுப்பான், உடைப்பெருஞ் செல்வன்

ஆனாவளம்,
பழந்தொன் மூதுயிர், வியன்பெரு விழியோன்,
கலுழக் கொடியுயிர்தோன்,
இணையி லாளன், யாளி கொல்புள்,
வெருவரு தோற்றத்தன், பொழுதெலா
வேண்மடை யூண்கொளி, (முணர்வோன்,
360 இயன்முழு துடைமையி னெடுத்துக் காட்டு,

திருமக ளாளன், செருவடு திறலோன்,
வீயான், செய்யன், மேலோர் தேர்பவன்,
பொருட்டு, ஞாலம் புதைத்தொளிர் வயிறி,
பொறையள், மண்ணகம் பொறுக்க கிற்பான்
370 அடிசி லட்டுண்ணு மண்ணல்,

கடிதியலி,
மீதூண் வெய்யோன், பிறப்பிடம்,
கலக்குநன், கடவுள்,
திருவியான், ஏற்றஞ் சாலிறைவன்,
துணைக்கருவி, மூதல் வினைமுதல்,
380 விழுமிய வினைமுதல்.

வெவ்வேறு வினைமுதல்,
எளிதினெய்தப்படான்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழையுறைமுனைவன்,
தேற்றவுணர்வினோன்,
செயல்யாப்புக்களைகண்,
நன்னிலைக்களம்,
நிலைக்கள மளிப்போன்,
நிலைப்புள்ளி, விழுச்செல்வன்,
390 வெளிப்படப் புலப்படு மேலோன்,

களிப்புறு நகைவன், செழியன்,
பார்வை நல்லன்,
மகிழ்விக்கு மழகன்,
இறுவாய்,
நசையிலான், நடவை,
தற்பணிப்போன், தற்பணிப்பிப்போன்,
400 ஒருவரானு முந்தப் படாதான்

மறவன்,
வல்லாளரின் வல்லாளன்,
அறவன், அறனுணர்வாள ரையன்,
ஒருங்குட னிணைத்தொளி ரும்பர்,
ஆஅளி, ஆவி, ஆவி யளிப்போன்,
409 போற்றி, புரையுயிர் பெரும்பெயர்,

பொன் முட்டை யிட்டோன்,
கூடார்க் கொல்லி,
துவன்றினோன், சூறாவளி,
இழிந்து குன்றா தெழுவோன்,
செவ்விப் போழ்து,
காண்டக வினியன், காலன்,
விழுமிய மீமிசை விட்புலம் வாழ்நன்,
420 ஏற்போன், கடியன், யாண்டு, திறவோன்,

இளைப்பாறு மின்னிழல்,
உலகெலா மொருங்கு காணிக்கைகொள்வோன்,
அகன்பாயல்,
நிலைபெயராது நிற்கு நடுகால்,
அளவை,
வீயாத வித்து,
430 வேண்டும் பொருள், யாண்டு மில்லான்,

பெருங்களஞ்சியம்,
தொல்பெருந்துப்பு,
மன்பெரும்பொருள், வாட்டமெய்தான்,
எல்லையி லழுவம் எஞ்ஞான்று மிருப்போன்,
ஆவினைத் தாம்பி னணைக்குங் குற்றி,
இரும்பெரு வேள்வி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

440 நாண்மீ னுருளை,

நாண்மீனி, திறமை சாலி,
எய்ப்போன், செவ்விதின் முயல்வோன்,
வேள்வி, வேட்டல், வேட்கப் படுவோன்,
பெருவேள்வி யாற்பேணப் பெறுவான்,
சிறுவேள்வி செழு முதுவேள்வி,
450 உள்பொரு ளெனப்படு நல்லார் செல்சார்,

எல்லாங் காணு மியல்பினோன்,
இயல்பின் மீட்சியுள்ள மெய்தினான்,
முழுதுணர் கிற்போன்,
சிறப்புமிகு செம்புலம்,
நன்குயர் நன்னோன்பி,
திருமுக மலர்ச்சியன், தேர்வரு நுண்ணியன்,
இன்குரன் முழக்கம்,
459 இன்ப மீவோன், இனியநன் நெஞ்சினோன்

உளங்கவர்வோன், சினஞ்செறுத்தோன்,
மொய்ம்புறு திணிதோளன்,
துன்னலர்ப் போழ்வான், துஞ்சு விப்பான்,
தற்கிழமை யாளி, சால்பி,
பலப்பல தோற்றம் படுவோன்,
மிகப்பல செய்கை தகைப்பறச் செய்யுநன்,
470 எல்லா வுயிராயு மிடங்கொள்வோன்,

ஆனா வார்வலன், ஆன்கன்று புரப்போன்,
மணிமாண் சூலி, வண்பொரு ளிறைவன்,
அருளறங்காவலன், அறஞ்செய் கிற்போன்,
அறவியலாளன், உள்பொருள், இல்பொருள்,
480 பாழ்

உலவா உள்பொருள் உலக்குமில்பொருள்
அறியாதான் அறியப் படாதான்
ஆயிரங்கதிரோன், ஆருயிர்ப் பணிப்போன்,
அடையாளஞ் செய்து கொண்டோன்,
ஒளிக்கதிர்க் கற்றை யுருள்,
உயிர்தொறு முளந்தொறு மொண்மையினுள்ளோன், யாளி,
உயிரெலா வற்றினு மோங்குபே ரிறைவன்,
490 முதற்புத்தேள், முதுபெருங் கடவுள்,

கடவுளர் கடவுள் கடவுளர்த் தாங்குநன்,
கடவுளர்க் கற்பிப்போன்,
கவலைக்கடல் கடப்பிப்போன்,
நிலனு மொழியு நிரையும் புரப்போன்,
கல்வியுலகங்காவலன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருடீ ருணர்வி னெய்தற் பாலான்,
தொல்லோன்,
யாக்கை யைம்புலன் மேற்கோள்பவன்,
துய்ப்போன்,

குரக்கு வேந்து,
நிரம்பு கையுறை நேர்வோன்,
வான்விழை தீம்பிழி மாந்துநன்,
மூவா விண்மருந் தானாது பருகுநன்,
தீம்பிழி,
எனைத்தும் பலரை இகல்வென்றான்,
எனைத்தும் பலரினு மேற்ற முடையான்,
பணிவிப்போன், அடலாளி,
வாய்மை வழுவான்.

தொழும்பர் பணிகொளற் குரியான்,
ஒண்மைப் பண்பாள ரொருதனித் தலைவன்,
மன்னுயிர்,
அடக்கியாள்வோன் அயராச் சான்றாம்,
இம்மைச் செம்மை இன்பமீனி,
எல்லையில்லா வல்லாண்மையன்,
முழங்கு முந்நீர்,
அலகிலா வாருயிர்,
ஊழிப் பெருங்கடற் றுயிற்கிடை,
மாய்வுசெய் மறலி,

மயல்செய் மலர்க்கணைவேள் பிறப்பிலி,
வழிபாடு கொளற்குக் கிழவோன்,
தன்றன்மை தபுதலிலன்,
இகலடுநன்,
இடையீ டின்றி யெப்பொழுது மகிழ்வோன்,
மகிழ்ச்சி, மகிழ்விப்போன், களிப்பு,
வாய்மை யறனெலா மரீஇயோன்,
மூவுலகு முழுது மளந்தான்,

பெருந்தகை முனிவன் ஆசிரியன் செய்யன்,
செய்ந்நன்றி யறியுஞ் செம்மல்,
வையக மன்னர் மன்னன்,
மும்மொழி,
உயிர்ப்பாடு மும்மையு முகந்து காண்போன்,
கொம்பு பெரிய கொல்லேறு,
தான்செய்தன தான் சிதைப்பான்,
எழிற்பெரும் பன்றி யேற்றை,
நிலம்போந்து நிரைமேய்த்த நெடுமொழியாளன்,
நலங்கெழு மீளிப் பெரும்படை யுடையான்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலந்தொடித் தோட் பொருநன்,
மறையாயினான்,
ஆழமாயினான்,
இழிந்து காணரியன், புதையல்,
ஆழியுங் கோலு மமர்ந்தான்,
படைப்போற் படைப்போன்,
தன்னடையாள முடையான்
549 வெலப்படான், மாயோன், திண்ணியன்,

நன்கீர்ப்போன் நலம்வழுவான்,
புனல்கிழான்,
புனல்கிழவோன் பெற்றபொருள்,
பொய்கைபூத்த பொற்பியல் கண்ணன்,
பழுமரம் பெருந்தகைய நெஞ்சினோன்,
திருமாண் செல்வன், செல்வ மாறுஞ் சிதைப்போன்,
560 மகிழ்நன், துழாய்த் தொடையல் வேய்வோன்,

மேழிப்படைக்கல மேயோன்,
விருந்தாளி, மிளிரொளி யென்றூழ்,
நோன்றுவோன், சிறப்புயர் செல்சார்,
எய்வில் வாளி, யெறிமுழு வாளி,
569 கடியன், கழிபெரும் பொருட் கொடையாளி,

வான்றொடு மளவும் வளர்ந்த யாக்கையன்,
எல்லா மொருங்குடன் காணுநன்-
மறைமொழி தொகுத்து வகுத்தோன்,
சொற்றோன்றல்-
பிறவாப் பிறப்பினன்,
பண்ணிசை மும்மை, பாணன், பாணி,
சார்நீக்கம், சாவா மருந்து,
579 தொல்பிணி மருத்துவன், துறவு வகுத்தோன்,

ஒப்ப நிற்குமுள்ள முடையான்,
அமைதி யணைந்தான்,
ஒடுக்க மோவான், ஓவாவமைதி,
மீளா மீமிசைவைப்பு,
யாக்கை நலன் மீக்கொள்வான்,
அமைதி யீனு மண்ணல்,
அனைத்து மாக்கி யளித் தழிப்பான்,
589 பாரகந் திளைப்போன், பரவையிற் றுயில்வோன்,

பார்நலம் பயப்போன், பார்முழுதுடையான்,
பார்காத் தோம்புநன்,
ஆனேற்றி னகன்பெருங் கண்ணான்,
ஆனேற்றி னார்வலன்,
புறத்துற வில்லான், அகத்துறவுடையான்,
குறுகத் தொகுப்போன், கூர்நலஞ் செய்வோன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

600 செம்பொலிவு, திருமறு மார்பன்,

திருவாழ்வகம், திருவின் கணவன்,
திருவாளர் செம்மல்,
திருநல்குவோன், திருவின் மணாளன்,
திருவினிலைக்களம், திருவின் பொற்குவை,
609 திருவிழலச் சிறப்பு, திருமேற் கொள்வான்,

திருவாக்குநன், உயர்திரு, சிறப்புடைத்த திருமான்,
உலகு மூன்றி னொருபெருங் களைகண்,
அழகிய கண்ணன்,
அழகிய யாக்கையன்,
எஞ்ஞான்று மினிது மகிழ்நன்,
நகை நயவன்,
இலங்கு சுடர்க்குழுவின் இறைவன்,
620 நெஞ்சினை வென்றோன்,

ஆணைவழிப்படு மகமுடையான்,
பொருள்சேர் புகழோன்,
ஐயுறவு நையுற்றோன்,
விண்ணின் றிழிந்து வெளிப்படுங் குரிசில்,
யாண்டு நின்றுங் காண்டகு கட்புலன்,
இறையிலி,
திரிபின்றி ஞான்றுந் திண்ணிதி னிற்போன்,
நிலக்கிடை நேர்வோன்,
அணிகல மாயினான்,
630 செல்வ மாகிச் சிறப்பிப்பான்,

கல்லான், கவலுநர் கவலை களையுநன்,
உணர்வோ டொளியெலா மொளிபெற வொளிர்வோன்,
எல்லாரு மேத்தி யிறைஞ்சப் படுவான்,
குடக்கூத் தாடி,
உள்ளத் தூய்மை யுலவான்,
மன்னுயிர் மாசு மண்ணுவான்,
மறுக்க லாற்றா மறவன்,
எதிரியிலி,
640 உயிரொளிர்விக்கு முணர்வொளிப் பிழம்பு,

அடுதிற லளவிலான்,
பொழுதுருளி பழுதுபடுப்போன்,
மிண்டன், மள்ளன், மீளியர் தலைவன்,
உலக மூன்றற்கு மோருயிர்,
உலக மூன்றற்கு மொருதனித் தலைவன்,
முக்கூற்று முதலி,
கூந்தன்மாக் கொன்றோன்,
650 ஆழி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழைதகு விண்ணன், விழைவு காவலன்,
விழைவு நிரம்பினோன்,
படைப்பவன் துடைப்பவன் - உடற்கவின் கவர்ச்சியன்,
அருட்பனுவ லாக்கியோன்,
இற்றெனப்படாஅ வெழிற்றோற்ற முடையான்,
திருமால், விறன்மிளி,
ஈறிலி,
660 பொருளை வென்றீட்டும் பொருள்,

வள்ளிவயின் வாழ்நன்,
வள்ளுவற் படைக்கும் வள்ளுவன்,
வள்ளுவன், வள்ளி,
வள்ளியை வளம்படுப்போன்,
வள்ளியை நன்கு மாணத் தெளிந்தோன்,
வள்ளியன், வள்ளுவர் மருகன்,
669 வள்ளியறிஞன், வள்ளுவ ரார்வலன்,

பெரிய வொழுங்கு பேணுநன்,
பெருந் தொழிலாளி, பெரும்பே ரொளியோன்,
பெரும் பாம்பு, பெருவேள்வி,
வேட்குநரிற் பெரியோன்,
பெருவேள்வி பேணினான்,
பெருவேண் மடை,
679 வழுத்தப்படுவான், வழுத்த நயப்பான்,

வழுத்துரை, வழுத்தல், வழுத்துநன்,
போர்நயக்கும் பொருநன்,
முழுநிறை வுற்றோன், முழுது நிறைவிப்போன்,
அறவி,
அறந்தரு சீர்த்திமான்,
பிணியிலாளன்,
690 கருது நெஞ்சினுங் கடிது செலல்வல்லன்,

உளந்துாய் தாக்குந வுஞற்று கிற்பான்,
வெண்பிழி வளவன், பொருள்வள மீவோன்,
பொருட் செல்வம், புத்தேள்,
பொருள்வளம்,
உள்ளம் பொருள்வள மாயினான்,
மடையூண்,
உண்மையென்னு மொள்ளியர் செல்சார்
700 உண்மை யாய வொண்செய லாளன்,

உண்மைத் தன்மை,
உண்மையாயினார துடைமை,
உண்மை யாயினா ரோங்குயர் சார்பிடன்,
மிண்டர் படைஞன், யாதவ ரேறு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை யாயினார் வாழு முறையுள்,
யாணர்த் தொழுநை யாற்றுத் துறைவன்,
மன்னுயிர் முற்றொட்டு வாழுமகம்
புதையல் வைப்புப் புத்தேள்,
710 ஒருங்குயி ரொடுங்கு மிடன்,

அளித்த லானாதான்,
முனைப்புக் கொல்லி, முனைப்பீனுவோன்,
முனைப் பெனைத்து முன்னான் அ ாவற்றோன்,
உளங் கொளலோ பெரிது மரியன்,
பிறர் வெல்லான்,
உலகெலாம் பிழம்பாயினான்,
பெரும்பிழம்பாளன்,
கதிரெறிந் திமைக்குங் கவின்பிழம் பாளன்,
720 பிழம்பிலாளன்,

எனைப்பல பிழம்பு மெய்துவோன்,
தெற்றெனான்,
பதிற்றுப் பத்துப் பிழம்பினோன்,
பதிற்றுப் பத்து முகத்தினன்,
725 ஒருவன், ஒருவனல்லன்,

அவன் எவன், யான் யாம் யார், யாது அது,
அதுநீ, நீயார்,
732 மேனிலை யில்லா மேனிலையாயினான்,

உலகின்கேள், உலகின் தலைவன்,
செய்யவன் கொண்கன்,
அன்ப ரார்வலன்,
செம்பொன்னிறஞ் சிவணினான்,
பைம்பொன் யாக்கையன்,
சிறப்புடை யுறுப்பினன்,
740 களிப்பீனுங் கவின்றொடியோன்,
மறங்கெழுதெவ் மாய்ப்பேன்,
பொருவி லாளன்,
பாழ், நசையில னசைகோ ளாளன்,
அனுக்கமிலி, அனுங்கி,
சீர்மை யில்லான், சீர்மை நல்குவான்,
749 சீர்மை செய்யப் படுவான், உலகெலா முடையடிகள்,

மூன்றுலகு மூன்றுவான்,
உயர்நல் லொட்ப முடையான்,
வேள்வியில் வெளிப்படுவோன்,
ஊதிய மெல்லா முடையான்,
வாய்மை யொட்பம் வாய்ந்தோன்,
இருநிலனீ டேந்துவோன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிபெய்வான்,
ஒளி பூண்பான்,
படைக்கலமேந்தும் பலரினுஞ் சிறந்தோன்,
கொடுப்ப கொள்வான்,

கொடியோரை ஒறுப்பான்,
பரபரப்புடையான், பற்பலமருப்பினன்,
மறைநன்கு நவிலின் வந்தெதிர்ப்படுவோன்,
நால்வேறு தோற்றம், நாற்பெருந் தோளான்,
நால்வேறுபான்மை, நால்வேறு செல்சார்,
நால்வே றுள்ளுயிர், நால்வேறு குறிப்பு,

நான்மறை யறிஞன்,
தன்னொருகூறு,
ஞாலவாழ்க்கை மீண்டுமீண்டுநவிலச் சுழற்றுவோன்,
மீட்சியுள்ள மேயினான்,
அடலொண்ணான்,
தன்பணி கடத்தலரியன்,
தற்பெற லரியன்,
தற்பிற ருணர்தல் சாலவு மரியன்,
புகலரிய பொதும் பனையான்,
அகனமரம் வித்தலரியன்,

தீநெறி புக்க தெவ்வர்த் தெறுநன்,
எழுழினலஞ் சான்ற யாக்கையாளன்,
உலகின் சிறந்த கூறுபா டுவப்பான்,
நன்குவலை விசிறுவோன்,
நிறைந்தவலை நீளம் பெருக்குவோன்,
விண்ணவர் கோன் கொருட்டு வினைசெய்வோன்
பிறர்செயற் கரிய பெருஞ்செயல் வல்லான்,
செய்வனவெல்லாஞ் செய்தோன்,
தெருட்பனுவல் செயதருளினான்,
பிறப்பினன்,

அழகன், சாயலன்,
மணிநிக ருந்தியன், வனப்புறு விழியினன்,
வழுத்தி வணங்கப் படுவான்,
வாயடை வழங்குநன்,
கொம்பன், கொற்றவன்,
முற்றுணர்ந்தாரையும் வெற்றிகொள் புலவன்,
பொலந்துளிப் புள்ளியன்,

மறுக்கஞ் செயப்படான்,
சொற்செல்வ ரெல்லாருந்தொழுதகு தோன்றல்,
பெருந்தண் பொய்கை,
பெருங்குழி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறுகெழு தோற்றம், விழுமிய பொருள் வைப்பு
ஆம்பல், குருக்கத்தி, குருந்தம்
810 மூகில்கிழான்,

காற்று, கடுவளி,
விண்மருந்து மிசையுநன்,
விண்மருந்தியன் மெய்யன்,
எல்லா மெஞ்சா துணர்வோன்,
எல்லா வாற்றானு மியைவான்,
அருமையி லெளியன்,
நன்னர் நோன்பு
நற் பெற்றான்,
820 இகல கடந்தோன், இகல காயவோன்,

ஆல், அத்தி, அரசு,
ஆண்டிரன் மல்லனை விண்டுடல் வீழ்வித்தோன்,
ஆயிரங் கதிரோன்,
ஏழ்நா, ஏழ்கொழுந்து, ஏழூர்தி,
830 பிழம்பிலாளன், அல்லவை யில்லான்,

ஐம்பொறி தன்னை யணுகலாற்றான்,
அச்சமுறுப்பான், அச்சமறுப்பான்,
மொய், பெருக்கு, மெலியன், தடியன,
839 பண்பு கொளி, பண்பிலி, பெருந்தகை.

ஏந்தப் படாதான்,
தன்னைத் தானேந்துவோன்,
அழகிய திருமுக முடையான்,
முன்மரபின் பின் புதல்வன்,
பின்மரபு பெருக்குவோன்,
சுமை சுமப்போன், ஓதுவா ரெல்லாரானு மோதப்படுவான்,
849 புணரி, புணரியர் புரவலன்,

நச்சு யாவு நல்குவோன்,
எய்ப்பாறு மின்னிழல்,
அணங்குவோன், அரக்குவோன்,
அஞ்சிறைப் புள்,
உலவை யூர்தி,
வில்லேந்தி, வின்னூல் வல்லுநன்,
செற்றம்,
860 செறுப்பவன், செறுக்கப் படாதான்,

தெவ்வர் வெல்லுதல் செல்லான்,
யாவும் பொறுக்கும் இயல்பினன்,
ஒல்லும் பணியி லுய்ப்போன்,
கூற்றுவனை யில்லான்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றுவன்,
வாய்மை யாளன்,
ஒண்மைப் பண்பு மிக்கான், வாய்மை,
வாய்மை யறம் விழுமிய வழியாயினான்,

தன்கோள் கிளப்பான்,
உவப்பன நல்கிய ருரியோன்
வழுத்தி வணங்கத் தக்கான்,
ஆர்வலர்க் குவகை யாக்குநன்,
ஆர்வலர் ஆர்வம் பெருக்குவோன்,
வான்வலன்,
ஒளி,
உயர் மாணொளி,
வேள்மடை மிசையுநன்,
வியலி,

எல்லோன், இமைப்போன், ஞாயிறு, கடர்த்திரள்,
செஞ்ஞாயிறு திருக்கண்மல ராயினோன்,
அலகிலான், வேண்மடை யார்வோள்,
அனைத்துந் துய்ப்போன்,
எனைப்பலவு மீவோன்,
ஆவியின்ப மளிப்போன்,
பல்பிறப்பாளன்,

முற்றோன்றி,
கவலாதான்,
மெய்யர்தம் மிகை நோனுவோன்,
உலகெலாமுறையு மொருநிலன்,
வியத்தக்கான்,
தொல்லோன்,
தொன்றுமுதிர் தொன்முதியோன்,
செய்யோன், கதிரிற்புனல் கவர்வோன்,
வியனுலகு ஒன்றுவோன்,
நன்பொலிவு நல்குவான்,
நன்பொலிவு செய்வான்,
நன்பொலிவு,
நன்பொலிவு துய்ப்போன்,
நன்பொலிவு காணிக்கை நேர்வோன்,
செற்றஞ் செறுத்தான்,
சுருளி,
ஆழிமான்,
அடுதிறல்,
உறுதியாணையுய்ப்போன்,

மீச்சொல், சொற்பொறை,
கூதிர்ச் செவ்வி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்குல் செய்பவன்,
கொடுமையிலான்,
கோலமின்றியுஞ் சாலவழகியன்,
வினைவல்லுநன்,
கலைவல்லுநன்,
பொறுமையாளரிற் புரையோன்,
புலவர் பெருமான்,

அச்ச மற்றான்,
உறுதிகேட்டலோ டோதுதலுடையான்,
கவலைப் பெருங்கடற் கரைசேர்ப்பிப்பான்,
பொல்லாரைப் பொல்லாங்கு பொன்றுவிப்பான்,
அறத்தகை யண்ணல்,
இன்னாக் கனவை யீடழிப்பான்,
இன்னா மறவரை யிகல்கெடுப்பான்,
பாதுகாவலன்,
உண்மையாளர்பா லுண்மைத் தன்மை,
வாழ்வியா நின்று வாழ்வான்,

முழுதுங் கவைஇ மூய்க்கவிந் திருப்போன்,
எல்லையில் கோலமெடுப்பான்,
எல்லையில் செல்வ மேய்ந்தான்,
வெகுளியை வென்றோன், வெரூஉ வீப்போன்,
திறமைப்படச் செய்ந்நன்,
அகனுந் தோற்றமு மாழ முடையான்,
மாந்தர்ப் பணிப்போன்,
இமையவர்ப் பணிப்போன், யாவையும் பணிப்போன்,

தொடக்கமில்லான்,
மண்ணகம் விசும்பகம்,
திருமகளுடையான், நன்மீளி,
கவினுறு தொடித்தோளாளன்,
பிறவ யெடுப்பான்,
மக்கட் பிறவி வருவாய்,
வெருவரு காட்சியன், வெருவரு வெந்திறல்,
களைகண் யாவற்குங் களைகண்,

தற்சார்பிலாத் தனிநிலை,
முகையவிழ்வன்ன முகமலர்ச்சியுடையான்,
தூங்காது விழிப்போன்,
மேனோக்கி நெஞ்சு மீதூர்வோன்,
உண்மைநெறி யொழுக்க முடையான்,
உயிர்ப்பு வழங்குவோன்,
ஓமென விசைக்கு மொருதனி முதன்மறை,
பொருள்பரி மாற்றம் புரிபவன்,
அளவை, ஆவியினிலைக்களம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரு முயிர்ப்பு மூன்றுவோன்,
உயிர்ப்பின் வாழ்நன்,
பொருண்மை,
பொருண்மை யாய்வுப் புலமை யாளன்,
உயிரொருதான்,
பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடு பெறான்,
நிலன்விசும்பு துறக்கமென நிகழ்தரு நீண்மரம்,
கடப்பிப்போன், வகுத்தான், பாட்டந்தை,
971 கேள்வி, வேள்விமுதல், வேட்போன்,

வேள்வியாளன், வேள்வியுறுப்பு,
வேள்வி யுய்ப்போன்,
வேள்விக்களன்,
வேள்வி யாக்கியோன்,
வேள்வியுள் வீற்றிருப்போன்,
வேள்வி துய்ப்போன்,
980 வேள்விக்கு வேண்டுஞ் செயன்முறைமை,

வேள்விப் பேறுவிளைப்போன்,
வேள்வி யாற்றம்,
உணாஉ,
உணாவுண்போன்,
ஆவி பிறப்பக மாயினான்,
தற்பிறப்பித்துத் தானே பிறந்தோன்,
அகழ்ந்தெடுப்பான்,
பண்ணொடு பாணி பாடும் பாணன்,
989 தேவகி சேஎய், செந்நெறி படைப்போன்,

நிலன் முழுதரளு நெடியோன்,
அல்லவை பாற்று முதலோன்,
நந்தி, வாளி, யாழி, வில்லி,
கோளி, யுருளைக் குறிவரை யங்கையன்,
நெஞ்சிற் கலக்க நிகழ்த்த லொண்ணான்,
தொலைக்கரு வவுணரைத் தொலைக்குந் தவப்பல
திறப்படைக் கலவன் செய்த
மவற்கியாம் வணக்க மாயிரம் பலவே,

ஓம்

அமைதி அமைதி அமைதி

நெடுமால் பெயராயிரம் முற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லலிதா அஷ்டோத்தரசத நாமஸ்தோத்திரம்

பொருளறியாமல் பாராணயம் செய்வதிலும் பார்க்க பொருளறிந்து படிப்பது நலமெனக்கருதி லலிதாம்பிகையின் பெருமை பேசும் ஏனைய நூல்களிலிருந்து பெறப்பட்ட எடுத்துக்காட்டுக்களுடன் கூடிய வே.ராமச்சந்திரசர்மாவின் குறிப்புரையுடன் சேர்த்து அம்பிகை அடியவர்களுக்கு அருள் விருந்தாக ஸ்ரீ லலிதா மகா திரிபுரசுந்தரியின் திருவருளுடன் ஸ்ரீ லலிதா அஷ்டோத்தர சத நாம ஸ்தோத்திரத்தை தாயே ஆகி வளர்த்தாளின் பாத கமலங்களில் சமர்ப்பிக்க கிடைத்த பேற்றினைப் போற்றுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

॥ श्रीः ॥

॥ शिवाभ्यां नमः ॥

## (१) रजताचलशृङ्गाग्रमध्यस्थायै नमो नमः ॥

(**रजत** - வெள்ளி, **अचल** - மலை, **शृङ्ग** - கொடுமுடி, அல்லது சிகரம், **अग्र** - கோடி, (உச்சி) **मध्य** - நடுவு, '**स्था**' என்ற தாதுவுக்கு இருத்தல் என்று பொருள்)

வெள்ளியங்கிரியினுடைய சிகரத்தின் நடுவில் இருப்பவள்.

வெள்ளியங்கிரியின் சிகரக் கோடியின் நடுவே இருப்பவள்; என்றாலும் அதாவது மஹாமேருவின் சிகரக் கோடியின் நடுவே இருப்பவள் என்றாலும் தாத்பர்யம் ஒன்றுதான். அந்த மஹா மேருவானது முக்கோண வடிவாக இந்த்ர, ஈசான, வாயு திக்குகளில் மூன்று சிகரங்களையுடையதாயிருக்கிறது. அந்தச் சிகரங்களுடைய நடுவே ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரி வஸிக்கின்றாள். அவளுக்கு நமஸ்காரம் - **नमः नमः** என்று இரண்டு தடவை சொல்லியிருப்பது, ஸ்ரீ பராசக்தியின் பக்தியிலீடுபட்டுத் தந்மயமாக ஸர்வப்ரபஞ்சத்தையும் நோக்குகின்ற பக்தர்கள், அதிசயத்தினால் புளகாங்கித மெய்தி ஆதரவோடு கூறுவதாகும். மேலே வரக்கூடிய பதங்களுக்கும் இப்படியே பொருள் கண்டு கொள்க.

" அந்த மஹாமேருவினுடைய கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு திக்குகளின் கோடியில் இருக்கின்றதாயும், ப்ரஹ்ம, விஷ்ணு, ருத்ர லோகங்களுக்கு ஆதாரங்களாகவுமிருக்கின்ற மூன்று தாழ்வரைகளையும் சிறப்பாக வணங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேலே குறித்த மூன்று தாழ்வரைகளுக்கும் நடுவே அழகிய ஒளி வீசுகின்ற ரத்னக் கொத்துக்களால் மனோஹரமான திசைகளின் எல்லைகளையுடையதாயும், மேலே நானூறு யோஜனை உயரமுள்ளதாயுமிருக்கிற (அந்த மஹாமேருவினுடைய) சிறந்த சிகரத்தை உபாஸிக்கிறேன்" (1) என்று துர்வாஸரும் வர்ணித்திருக்கிறார்.

(1) "हरिहयनैर्ऋतमारुतहरितामन्तेष्ववस्थितं तस्य ।
विनुमः सालुत्रितयं विधिहरिगौरीशविष्टपाधारम् ॥
मध्ये पुनर्मनोहररत्नरुचिस्तबकरञ्जितदिगन्तम् ।
उपरि चतुःशतयोजनमुत्तुङ्गं शृङ्गपुङ्गवमुपासे ॥" ल॰ स्त॰ (३, ४)

## (२) हिमाचलमहावंशपावनायै नमो नमः ॥

(**हिम** - பனி, **अचल** - மலை, **महा** - பெரிய, (உயர்வு) **वंश** - வம்சம், (பரம்பரை) **पावन** - பரிசுத்தம், (தூய்மை).

ஹிமவான் (இம-மலை) என்ற பர்வதராஜனுடைய உயர்ந்த வம்சத்தைப் பரிசுத்தம் செய்தவள்.

ஸ்ரீ பார்வதி ஹிமவானென்ற பர்வதராஜனுக்குப் பெண்ணாகப் பிறந்து அவனுடைய வம்சத்திற்கு அழியாப் புகழையும், பரிசுத்தத்தையும் கொடுத்தவள் என்ற கருத்துக்களை மஹாகவி ஸ்ரீகாளிதாஸன் எழுதிய குமாரஸம்பவத்தில் வர்ணிப்பதை விரிவாகக் காணலாம்.

## (३) शंकरार्धाङ्गसौन्दर्यशरीरायै नमो नमः ॥

(**शंकर** - சங்கரன்; **अर्धाङ्ग** - பாதிசரீரம், அல்லது சரீரத்தின் பாதி; **सौन्दर्य** - அழகு; **शरीर** - சரீரம்.)

ஸ்ரீ சங்கரனுடைய பாதிசரீரத்திற்கு அதிக அழகைக் கொடுக்கக்கூடிய சரீரத்தை யுடையவள்.

ஸ்ரீ சங்கரன் பார்வதிதேவிக்கு ஸ்த்ரீதநமாகப் பாதி சரீரத்தை கொடுத்து அவளோடு கூடியிருப்பதால் அர்த்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரி அல்லது மங்கை பாகன் என்ற பெயரை யடைந்தான். ஸ்ரீபார்வதியின் ஸௌந்தர்யமோ; "ஹே ஹிமவத்புத்ரி! உனது அழகுக்கு நிகரான ஒரு பொருளைக் கண்டு பிடிக்கக் கவிவாணர்களாகிய ப்ரஹ்மா முதலானவர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்; ஆனால் அவர்களாலும் முடிய வில்லை!" (1) அப்படியிருக்க உன்னுடைய ஸௌந்தர்யம் மனத்திற்கு விஷயமாகாததாய்; வாக்கினல் வர்ணிக்க முடியாததாய் ஒப்புயர்வற்று விளங்குகிறது.

(1) "त्वदीयं सौन्दर्यं तुहिनगिरिकन्ये तुलयितुं
कवीन्द्राः कल्पन्ते कथमपि विरिञ्चिप्रभृतयः ॥" सौ॰ (१२)

## (४) लसन्मरकतस्वच्छविग्रहायै नमो नमः ॥

(**लसत्** - ப்ரகாசிக்கின்ற, **मरकत** - மரகதம், **स्वच्छ** - மாசற்ற, (அழுக்கற்ற) **विग्रह** - சரீரம்.)

நவரத்தினங்களிலொன்ருகிய மரகதமணி போல் மாசற்று விளங்குகின்ற சரீரத்தையுடையவள்.

இக்கருத்தைத்தழுவியே "மரகதமணி போன்ற காந்தி யையுடையவளே! மன்மதனுக்குச் சத்ருவான ஸ்ரீபரம சிவனுடைய பார்யையே!" (1) என்று வர்ணித்திருக்கிறது.

(1) "मरकतमणिकान्ते मन्मथारातिकान्ते ॥"

## (५) महातिशयसौन्दर्यलावण्यायै नमो नमः ॥

(**महा** - பெரிய, (மிகுதி) **अतिशय** - ஆச்சரியம், (அத்புதம்) **सौन्दर्य** அழகு, **लावण्य** - காந்தி, (ஒளி).

மிகவும் அதிசயிக்கத்தக்க ஸௌந்தர்யத்தை, (அழகை) மிகுதியாகவுடையவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (६) शशाङ्कशेखरप्राणवल्लभायै नमो नमः ॥

(शशाङ्क - சந்த்ரன், शेखर - ஆபரணம், (அலங்கலன்) प्राण - முக்ய, (ப்ரதானம்) वल्लभ - ப்ரேமைக்கு, (அன்புக்கு) உரியது.

சந்த்ரனை சிரஸில் ஆபரணமாகத் தரித்த சந்த்ரசூட னுக்கு உயிரானவள்.

## (७) सदा पञ्चदशात्मैक्यस्वरूपायै नमो नमः ॥

(सदा - எப்பொழுதும், पञ्चदश - பதினைந்து, आत्म - ऐक्य - தன் சேர்க்கை, स्व - रूप தன்-உருவம்.)

எப்போதும் பதினைந்து அக்ஷரங்களோடு கூடிய பஞ்சதசீ மஹாமந்த்ரம் தன்னிடத்திலே நிலைக்கப் பெற்று அந்த அக்ஷரங் களின் வடிவாகவே இருப்பவள்.

இந்தப் பஞ்சதசாக்ஷரீ என்ற மஹாமந்த்ரமானது நான்கு வித புருஷார்த்தங்களுக்கும் முக்ய காரணமாகவுள்ளது என்பது கருத்து. "மூலசக்ர ரூபமாகவுள்ளவள்" (1) என்றும் கூறியிருக்கிறது.

(1) "मूलमन्त्रात्मिका" ல° ஸ° (८७)

## (८) वज्रमाणिक्यकटककिरीटायै नमो नमः ॥

(वज्र - வயிரம், माणिक्य - மாணிக்கம், कटक - தங்கம், किरीट - தலையில் தரித்துக் கொள்ளுகிற முடி.)

வயிரம், மாணிக்கம், தங்கம் என்ற சிறந்த நவரத்னங் களால் இழைத்த கிரீடத்தை யுடையவள்.

## (९) कस्तूरीतिलकोद्भासिनिटिलायै नमो नमः ॥

(कस्तूरी - கஸ்தூரி, तिलक - பொட்டு, उद्-भासि - மிகுந்த சோபை, निटिल - நெற்றி.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்தூரீதிலகத்தினால் மிகுந்த சோபையைத் தாங்கிய நெற்றியை யுடையவள்.

குங்குமத்தோடு பூசப்பட்டவளும், வகிடைத்தொடுகின்ற கஸ்தூரீதிலகத்தையு முடையவள்'' (1) என்று த்யாந ச்லோகத்திலும் கூறியிருக்கிறது.

(1) सकुङ्कुमविलेपनामलिकचुम्बिकस्तूरिकाम् ॥

## (१०) भस्मरेखाङ्कितलसन्मस्तकायै नमो नमः ॥

(**भस्म** - விபூதி, **रेखा** - கோடு, **अङ्कित** - அடையாளம், **लसत्** - ப்ரகாசம், **मस्तक** - தலை.)

விபூதியின் கோடுகளால் அடையாளம் செய்யப்பட்டு ப்ரகாசிக்கின்ற லலாடத்தை (நெற்றியை) யுடையவள்.

## (११) विकचाम्भोरुहदललोचनायै नमो नमः ॥

(**विकच** - மலர்வது, **अम्भोरुह** - தாமரை, **दल** - இதழ், **लोचन** - கண்.)

மலர்ந்த தாமரையினிதழ் போன்ற கண்களை யுடையவள்.

## (१२) शरच्चाम्पेयपुष्पाभनासिकायै नमो नमः ॥

(**शरद्** - சரத்காலம் (கார்காலம்), **चाम्पेय** - சண்பகஸம்பந்தம், **पुष्प** - மலர், **आभा** - சோபை, (காந்தி) **नासिका** - நாசி.)

சரத்காலத்தில் மலர்ந்த சண்பக மலரை யொத்த காந்தியுள்ள நாசியை யுடையவள்.

## (१३) लसत्कनकताटङ्कयुगलायै नमो नमः ॥

(**लसत्** - ப்ரகாசம், **कनक** - ஸ்வர்ணம், **ताटङ्क** - கர்ணாபரணம், (காதணி) **युगल** - இரண்டு.)

ப்ரகாசிக்கின்ற ஸ்வர்ணமயமான இரண்டு கர்ணாபரணங்களோடு கூடியவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (१४) मणिदर्पणसंकाशकपोलायै नमो नमः ॥

(**मणि** - நவரத்தினங்களில் ஒன்று, **दर्पण** - கண்ணாடி, **संकाश**- நல்லப்ரகாசம், **कपोल** - கன்னம்.)

நவரத்தின மணியினுல் செய்யப்பட்ட கண்ணுடியைப் போன்ற காந்தியுள்ள கபோலங்களையுடையவள்.

"பத்மராகக் கற்களினு லிழைக்கப்பட்ட கண்ணுடியைப் பழிக்கின்ற காந்தியோடு கூடிய கபோல ப்ரதேசத்தை யுடையவள்" (1) என்றும்;

"நவரத்தினமணியாலாக்கப்பட்ட கண்ணுடியின் கர்வத்தை நாசம் செய்கின்ற பலகைபோன்ற கபோலங்களின் காந்தியை யுடையவள்" (2) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) "पद्मरागशिलादर्शपरिभाविकपोलभूः ॥" ल० स० (२३)
(2) "मणिदर्पणदर्पघ्नकपोलफलकप्रभाम् ॥" दि० ध्या० (३७)

## (१५) ताम्बूलपूरितस्मेरवदनायै नमो नमः ॥

(**ताम्बूल** - தாம்பூலம், **पूरित** - நிறைவு, **स्मेर** - மந்தஹாஸம், (புன்முறுவல்) **वदन** - முகம்.)

தாம்பூலத்தால் நிறைந்ததும், மந்தஹாஸத்தோடு கூடியதுமான முகத்தை யுடையவள்.

தாயே! ஸுப்ரஹ்மண்யன், உபேந்த்ரன் முதலியவர்களால், சந்த்ரனைப்போல வெளுத்த பச்சைக்கற்பூரத் துண்டுகளோடு கூடிய உன்னுடைய வாயிலிருக்கும் தாம்பூல கபளங்கள்மென்று சாப்பிடப் படுகின்றன" (1) என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பச்சைக்கற்பூரங்களாலான பரிமளங்களினால் ஆகர்ஷணம் (வ்யாபிக்கும்படி) செய்யப்பட்ட திக்குகளை யுடையவள்" (2) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) "विशाखोपेन्द्रैः शशिविशदकर्पूरशकला:
विलीयन्ते मातस्तव वदनताम्बूलकबला: ।" सौ० (६५)

(2) "कर्पूरवीटिकामोदसमाकर्षद्दिगन्तरा ॥" ल० स० (२६)

## (१६) सुपक्वदाडिमीबीजरदनायै नमो नमः ॥

(**सु-पक्व** - *நன்றாகப்பழுத்த*, **दाडिमी** - *மாதுளை*, **बीज** - *விதை*, **रदन** - *பல்*.)

நன்றாகப்பழுத்த மாதுளையின் முத்துக்களை (விதைகளை)ப் போன்ற பற்களை யுடையவள்.

## (१७) कम्बुपूगसमच्छायकंधरायै नमो नमः ॥

(**कम्बु** - *சங்கு*, **पूग** - *கூட்டம்*, **सम** - *ஸமம்*, **छाया** - *காந்தி*, **कंधर** - *கழுத்து*.)

வலம்புரிச்சங்குகளின் கூட்டத்திற்கு ஸமானமான காந்தியை உடைய கழுத்தை யுடையவள்.

## (१८) स्थूलमुक्ताफलोदारसुहारायै नमो नमः ॥

(**स्थूल** - *பெரிய*, **मुक्ताफल** - *முத்துப்பவழம்*, **उदार** - *சிறந்த*, **सु-हार** - *அழகிய மாலை*.)

பெரிய முத்துக்களாலும் பவழங்களாலும் சிறந்து விளங்குகின்ற அழகிய மாலையை யுடையவள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (१९) गिरीशबद्धमाङ्गल्यमङ्गलायै नमो नमः ॥

(**गिरीश** - *பரமசிவன்*, **बद्ध** - *கட்டுதல்*, **माङ्गल्य** - *மங்கள நாண்*, **मङ्गल** - *மங்களம்*.)

கைலாஸநாதனுல் விவாஹஸமயத்தில் கட்டப்பட்டு ஸகல பாக்யத்தையும் கொடுக்க வல்ல மங்களகரமான மாங்கல்யத்தை யணிந்தவள்.

*"காமேச்வரனுல் கட்டப்பட்ட மங்களஸூத்ரத்தோடு சோபிக்கின்ற கழுத்தை யுடையவள்"* (1) *என்பது ஸஹஸ்ரநாமம்.*

(1) "**कामेशबद्धमाङ्गल्यसूत्रशोभितकंधरा ॥" ल० स० (३०)**

## (२०) पद्मपाशाङ्कुशलसत्कराब्जायै नमो नमः ॥

(**पद्म** - *தாமரை*, **पाश** - *கயிறு*, **अङ्कुश** - *அங்குசமென்னும் ஆயுதம்*, **लसत्** - *ப்ரகாசம்*, **कर** - *கை*, **अब्ज** - *தாமரைப் புஷ்பம்*.)

தாமரைப்புஷ்பம், பாசம், அங்குசம். முதலிய ஆயுதங்களால் ப்ரகாசிக்கின்ற தாமரை போன்ற கைகளையுடையவள்.

## (२१) पद्मकैरवमन्दारसुमालिन्यै नमो नमः ॥

(**पद्म** - *தாமரை*, **कैरव** - *அல்லி*, **मन्दार** - *மந்தாரை*, **सु-मालिनी** - *சோபை மிகுந்த மாலை*.)

தாமரை, ஆம்பல், கற்பகம் முதலிய புஷ்பங்களால் தொடுக்கப்பட்ட வாஸனை மிகுந்த அழகிய மாலைகளை யணிந்தவள்.

## (२२) सुवर्णकुम्भयुग्माभसुकुचायै नमो नमः ॥

(**सुवर्ण** - *தங்கம்*, **कुम्भ** - *குடம்*, **युग्म** - *இரண்டு*, **आभ** - *காந்தி* - **सु-कुच** - *அழகிய ஸ்தநம்*.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கக்குடம் போன்ற காந்தி மிகுந்த இரண்டு ஸ்தநங்களையுடையவள்.

"ஸ்ரீகாமேச்வரனுடைய ப்ரேமைக்குப் பணயமாக (ஈடாக) மணிபோன்ற இரண்டு ஸ்தநங்களையும் கொடுத்தவள்" (1) என்று ஸஹஸ்ரநாமத்திலும் கூறியிருக்கிறது.

(1) "कामेश्वरप्रेमरत्नमणिप्रतिपणस्तनी ॥" ल० स० (३३)

## (२३) रमणीयचतुर्बाहुसंयुक्तायै नमो नमः ॥

(**रमणीय** - மனோஹரம், **चतु - र्बाहु** - நான்கு, கை, **संयुक्त** - சேர்க்கை (ஸம்பந்தம்.)

மனோஹரங்களான நான்கு கைகளோடு கூடியவள்.

ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரியானவள் இடக்கையின் கீழ்பாகத்தில் வில்லையும்; வலக்கையின் கீழ்பாகத்தில் தாமரை, செவ்வல்லி, பொற்றுமரை, கருநெய்தல், மாம்பூ ஆகிய ஐந்து புஷ்பங்களையும் பாணமாகக் கொண்டும்; இடக்கையின் மேல் பாகத்தில் பவழக்கொடி போன்ற பாசத்தை (கயிற்றை)யும்; வலக்கையின் மேல் பாகத்தில் சந்த்ரகலை போன்ற கத்தியையும் தரித்துக் கொண்டிருக்கிறுள் என்பது கருத்து.

2

"பாசம், அங்குசம், கரும்பு, ஐந்து புஷ்பங்களாகிய பாணம் இவைகளோடு விளங்குகின்ற கைகளையுடையவள்" (1) என்றும்,

"தநுஸையும், பாணத்தையும், பாசத்தையும், அங்குசத்தையும், கைகளினுலே தாங்கியவள்" (2) என்றும் ஸ்ரீதிவ்யமங்களாத்யானத்திலும், ஆநந்தலஹரியிலும் கூறியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) "पाशाङ्कुशेक्षुकोदण्डपञ्चबाणलसत्कराम् ॥" दि० ध्या० (२५)
(2) "धनुर्बाणान्पाशं सृणिमपि दधाना करतलैः" आ० (७)

## (२४) कनकाङ्गदकेयूरभूषितायै नमो नमः ॥

(**कनक** - *தங்கம்*, **अङ्गद** - *தோள்வலயம்* **केयूर** - *ஆபரணம்*, **भूषित** - *அலங்கரிக்கப்பட்ட*.)

தங்கமயமான தோள்வலயங்கள் முதலிய ஆபரணங்களினுல் அலங்காரம் செய்யப்பட்டவள்.

## (२५) बृहत्सौवर्णसौन्दर्यवसनायै नमो नमः ॥

(**बृहत्** - *விசாலம்*, **सौवर्ण** - *தங்கமயம்*, **सौन्दर्य** - *அழகு*, **वसन** - *வஸ்த்ரம்*.)

விசாலமான தங்கப்பாளம் போல் மஞ்சள் நிறமாகவும், மிகுந்த அழகுபொருந்தியதுமான வஸ்த்ரத்தை யணிந்தவள்.

*"சஞ்சலமற்ற மின்னல்களின் காந்தியைப்போன்ற மஞ்சள் வஸ்த்ரத்தை யணிந்தவள்"* (1) *என்று திவ்ய மங்களாத்யானத்தில் கூறியிருக்கிறது.*

(1) "अचञ्चलतटित्कोटिप्रभापिङ्गलवाससा ॥" दि० ध्या० (२६)

## (२६) बृहन्नितम्बविलसज्जघनायै नमो नमः ॥

(**बृहत्** - *பெரிய அல்லது விசால*, **नितम्ब** - *இடுப்பின் பின்புறம்*, **विलसत्** - *பிரகாசம்*, **जघन** - *இடுப்பின் முன்புறம்*.)

எப்பொழுதும் பருமனேடும் விசாலத்தோடும் பிரகாசிக்கின்ற (சரீரத்தின்) இடைப்பக்கத்தையுடையவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹே பார்வதி! பர்வதராஜன் தனது தாழ்வரையி னின்றும் கனமாயிருக்கும் தன்மையையும் விசாலமாக இருக்கும் தன்மையையும், எடுத்து உன்னிடத்தில் ஸ்திரீதக மாக வைத்தான் போலும்" (1) என்று ஸௌந்தர்யலஹரி யிலும் வர்ணித்திருக்கிறது.

(1) "गुरुत्वं विस्तारं क्षितिधरपतिः पार्वति निजा-
नितम्बादाच्छिद्य त्वयि हरणरूपेण निदधे।" सौ० (८१)

## (२७) सौभाग्यजातशृङ्गारमध्यमायै नमो नमः॥

(सौभाग्य - மங்களத்தின் தன்மை, जात - பிறப்பு, शृङ्गार - நவரஸத்தில் முதலாவதான ச்ருங்காரரஸம், मध्यम - சரீரத் தின் மத்யப்ரதேசம்.)

ஸௌபாக்யத்திலிருந்து உண்டாகிய ச்ருங்காரஸத்தின் (உருவேபோன்ற) மத்யப்ரதேசத்தை யுடையவள்.

## (२८) दिव्यभूषणसंदोहरञ्जितायै नमो नमः॥

(दिव्य - ப்ரகாசம், भूषण - ஆபரணம், संदोह - ஸமூஹம், (குவியல்) रञ्जित - அலங்காரம்.)

ஒளிமிகுந்த ஆபரணங்களுடைய குவியல்களினால் அலங்காரம் செய்யப்பட்டவள்.

## (२९) पारिजातगुणाधिक्यपदाब्जायै नमो नमः॥

(पारिजात - கற்பகம், गुण - குணம் (மணம்), आधिक्य நிறைவின் தன்மை, पद - கால், अब्ज - தாமரை.)

கற்பகத் தருவின் கு(ம)ணத்தைக்காட்டிலும் அதிக கு(ம) ணம் வாய்ந்த தாமரை போன்ற சிவந்த பாதங்களையுடையவள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவலோகத்திலுள்ள கற்பக விருக்ஷமானது தன்னை வந்து யாசிப்பவனுக்கு அவன் நினைத்ததைக் கொடுக்க வல்லது. வேறு தேவதைகளையுபாஸித்தால் இகலோக ஸுகங்களோ, பரலோகஸுகங்களோ ஏதாவது ஒன்று தான் கிடைக்கும். ஆனல் ஸ்ரீத்ரிபுரஸுந்தரியின் பாத கமலங்களோவெனில், எல்லோருக்கும், எச்சமயத்திலும், இம்மை, மறுமை என்ற பாகுபாடின்றி என்றும் அழியா வரத்தைக் கொடுக்கவல்லது என்பது கருத்து. இதையே, "பயத்திலிருந்து (ஸம்ஸார பயம்) ரக்ஷிப்பதற்கும், விரும்பியதைக் காட்டிலும் அதிக பலன்களைக் கொடுப்பதற்கும், ஹே சரண்யே! உனது இரண்டு பாதங்களும் திறமை வாய்ந்தனவன்றோ!" (1) என்று ஸ்ரீசங்கரரும்; "எந்த தேவியினுடைய பாதகமலங்களை நன்றாக உபாஸிக்கின்ற பக்தர்களுக்குப் போகமும் (இவ்வுலக ஸம்பந்தமானது) அபவர்க்கமும் (மறுமை ஸம்பந்தமானது) அவர்களுடைய கையிலேயே இருக்கின்றனவோ" (2) என்று மற்றவரும் வர்ணித்திருக்கின்றனர்.

(1) "भयात्त्रातुं दातुं फलमपि च वाञ्छा समधिकं
शरण्ये लोकानां तव हि चरणावेव निपुणौ ॥" सौ० (४)

(2) "यत्पादपद्मं समुपासकानां
भोगापवर्गौ तु नृणां करस्थौ ॥ (?)

## (३०) सुपद्मरागसंकाशचरणायै नमो नमः ॥

(सु-पद्मराग - சோபை மிகுந்த பத்மராகக்கல், संकाश - நல்ல காந்தி, चरण - பாதம்.)

சோபை மிகுந்த பத்மராகக்கல் போன்ற நல்ல காந்தியோடு கூடிய பாதங்களையுடையவள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (३१) कामकोटिमहापद्मपीठस्थायै नमो नमः ॥

(**काम** - காமேச்வரன், **कोटि** - எல்லை, **महा** - பெரிய, **पद्म** - தாமரை, **पीठ** - ஆஸநம், '**स्था**' - இருப்பு.)

காமேச்வரனுக்கும் எல்லையற்றதாகவும் முக்யமாயுமிருக்கிற மஹாபத்மபீடத்திலமர்ந்திருப்பவள்.

"ஸஹஸ்ராரபத்மத்தில் காமேச்வரனோடு கூட ஏகாந்தமாக விளையாடுகிறாய்." (1) என்பது ஸௌந்தர்யலஹரீ. அல்லது காஞ்சியிலிருக்கிற சிறந்த காமகோடிபீடத்திலமர்ந்தவள் என்றும் பொருள் கொள்ளலாம்.

(1) "**सहस्रारे पद्मे सह रहसि पत्या विहरसे ॥**" **सौ॰ (९)**

## (३२) श्रीकण्ठनेत्रकुमुदचन्द्रिकायै नमो नमः ॥

(**श्रीकण्ठ** - நீலகண்டன் (விஷத்தை விழுங்கிக் கழுத்தில் தங்கும்படி செய்தவன்) **नेत्र** - கண், **कुमुद** - ஆம்பல், **चन्द्रिका** - சந்திரிகை.)

ஸ்ரீநீலகண்டனுடைய கண்களாகின்ற ஆம்பல் புஷ்பங்களுக்குச் சந்திரிகை போன்றவள்.

ஆம்பல் புஷ்பத்திற்கும் சந்த்ரிகைக்கும், பந்துத்வம் கல்பிப்பது கவிகளின் மரபு.

## (३३) सचामररमावाणीवीजितायै नमो नमः ॥

(**सचामर** - சாமரங்களோடு கூடிய, **रमा** - லக்ஷ்மி, **वाणी** - ஸரஸ்வதி, **वीजित** - வீசப்பட்ட.)

வெண்சாமரங்களோடு கூடிய லக்ஷ்மி, ஸரஸ்வதி இவர்களால் விசிறப்பட்டவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இரண்டு பக்கங்களிலும் சாமரங்களோடு கூடிய லக்ஷ்மி, ஸரஸ்வதிகளினால் உபசாரம் செய்யப்பட்டவள்” (1) என்றும், “சாமரங்களோடு கூடிய லக்ஷ்மி ஸரஸ்வதிகளினால் முறையே இடப்புறத்திலும், வலப்புறத்திலும் நின்று ஸேவிக்கப்பட்டவள்” (2) என்றும், “கைகளில் பிடித்துக் கொண்டிருக்கின்ற வெண்சாமரங்களோடு கூடியவர்களான லக்ஷ்மியாலும், ஸரஸ்வதியாலும் வீசப்பட்டவள்” (3) என்றும் “இந்த்ராணியும் ரதியும் (சிலஸமயம்) ச்ரேஷ்டமான சாமரங்களேடு........(4) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) “सचामराभ्यां श्रीवाग्भ्यां पार्श्वयोरुपवीजिताम् ॥ दि० ध्या० (५७)

(2) “सचामररमावाणीसव्यदक्षिणसेविता ॥” ल० स० (६२४)

(3) “सच्चामरहस्तश्रीशारदापरिवीजिता ॥” ल० त्रि० (१९४)

(4) “इन्द्राणी च रतिश्च चामरवरौ” (?)

## (३४) भक्तरक्षणदाक्षिण्यकटाक्षायै नमो नमः ॥

(भक्त - பக்தன், रक्षण - காப்பாற்றுதல், दाक्षिण्य - வாத்ஸல்யம், (திறமை) कटाक्ष - கடைக்கண்.)

தன்னை உபாஸிக்கின்ற பக்தர்களை ரக்ஷிப்பதில் மிகவும் திறமை வாய்ந்த கடைக்கண் பார்வையை யுடையவள்.

“கடைக்கண் வழியாக வெளியே பெருகுகின்ற கருணாரஸத்தினால் நிரம்பிய பார்வையையுடையவள்” (1) என்றும், “திரண்ட வெள்ளம் போல் பெருகுகின்ற கருணையோடு கூடிய கடைக்கண் பார்வையையுடையவள்” (2) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) “कटाक्षसरणीनिर्यत्करुणापूर्णवीक्षणाम् ॥” दि० ध्या० (३१)

(2) “कटाक्षस्यन्दिकरुणा ॥” ल० त्रि० (१५१)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( ३५ ) भूतेशालिङ्गनोद्भूतपुलकाङ्ग्यै नमो नमः ॥

(**भूतेश** - *சராசரங்களின் தலைவன்,* **आलिङ्गन** - *தழுவுதல்,* **उद्भूत** - *உண்டாவது,* **पुलक** - *புளகாங்கிதம்,* **अङ्ग** - *சரீரம்.*)

ஸகல சராசரங்களின் தலைவனாகிய பரமசிவனது ஆலிங்கனத்தினாலுண்டாகிய புளகாங்கித சரீரத்தையுடையவள்.

*ஸ்ரீதேவியானவள் ஸதாசிவனோடு நிரந்தரமான ஸம்பந்தத்தை விரும்பி அவனுடைய ஆலிங்கத்தினாலுண்டாகிய புளகாங்கிதத்தைப் பெற்று அதிக ஆனந்தத்தை யடைந்தாள் என்பது கருத்து.*

( ३६ ) अनङ्गजनकापाङ्गवीक्षणायै नमो नमः ॥

(**अनङ्ग** - *அவயமில்லாதவன், ( மன்மதன் )* **जनक** - *உண்டாக்குவதற்குக் காரணமாகவுள்ளது,* **अपाङ्ग** - *கடைக்கண்,* **वीक्षण** - *பார்வை.*)

மன்மதனை இரண்டாவது முறை ஜனிக்கும்படி செய்த கடைக்கண் பார்வையுடையவள்.

*பரமசிவனால் எரிக்கப்பட்ட மன்மதனை மறுபடியும் பிழைக்கும்படி செய்தவள் என்பது கருத்து.*

( ३७ ) ब्रह्मोपेन्द्रशिरोरत्नरञ्जितायै नमो नमः ॥

(**ब्रह्मा** - *நான்முகன்,* **उपेन्द्र** - *விஷ்ணு,* **शिरोरत्न** - *கிரீடம்,* **रञ्जित** - *அலங்காரம்.*)

வணங்கும் ப்ரஹ்மா விஷ்ணு முதலியவர்களது தலைமுடிகளால் அலங்கரிக்கப் பட்டவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஹே தேவி! ப்ரஹ்மா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்கள் உன்னை வணங்கும் பொழுது உன் வீட்டிற்கு வந்த பரமசிவனை நீ பரபரப்போடு எழுந்து எதிர்கொண்டழைக்கச் சென்ற ஸந்தர்ப்பத்தை விளக்கிச் சொல்லிக் கொண்டிருக்கும் உனது சேடிகளின் வார்த்தை ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்குகிறது" (1) என்பது ஸௌந்தர்ய லஹரீ.

(1) "किरीटं वैरिञ्चं परिहर पुरः कैटभभिदः
कठोरे कोटीरे स्खलसि जहि जम्भारिमकुटम् ।
प्रणम्रेष्वेतेषु प्रसभमुपयातस्य भवनं
भवस्याभ्युत्थाने तव परिजनोक्तिर्विजयते ॥" सौ० (२९)

(३८) शचीमुख्यामरवधूसेवितायै नमो नमः ॥

(शची - இந்த்ராணி, मुख्य - பிரதானம், (முதல்) अमर-वधू தேவஸ்த்ரீ, सेवित - ஸேவிப்பது.)

இந்த்ராணி முதலிய தேவஸ்த்ரீகளால் ஸேவிக்கப் பட்டவள்.

தேவஸ்திரீகளாவார்; அப்ரஸரஸ், யக்ஷ, குஹ்யக, வித்யாதர, ஸித்த, கந்தர்வ ஸ்த்ரீகளாம்.

(३९) लीलाक्लिपतब्रह्माण्डमण्डलायै नमो नमः ॥

(लीला - விளையாட்டு, क्लिपत - நிர்மாணம், ब्रह्माण्ड - ப்ரஹ்மாண்டம், मण्डल - ஸமூஹம்.)

விளையாட்டாகவே நிர்மாணம் செய்யப்பட்ட ப்ரஹ்மாண்ட ஸமூஹங்களையுடையவள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (४०) अमृतादिमहाशक्तिसंवृतायै नमो नमः ॥

(अमृतादि-महाशक्ति - அம்ருதாதிகளான மஹாசக்திகள், संवृत - சூழப்பட்ட.)

அம்ருதாதிகளான மஹாசக்திகளினால் சூழப்பட்டவள்.

ஸ்வர ரூபங்களான பதினாறு இதழ்களோடு கூடிய ஷோடச ஸ்தானத்தில் சிறிது சிவந்த மூன்று வர்ணத்தோடும், மூன்று கர்ணிகைகளோடும், கட்வாங்கம் முதலிய ஆயுதங்களோடும், ஒருமுகத்தோடும், பாயஸாந்நத்தில் பிரியத்தோடும், த்வக் தாதுவிலிருந்து கொண்டும், அத்வைதவித்யாவிஹீனர்களாகிய பசு ஜனங்களுக்குப் பயத்தை யுண்டாக்கிக் கொண்டும், '**डाकिनी**' என்ற தேவியுடன் இருக்கின்ற அம்ருதாதி மஹாசக்திகள்; "**डाकिनीरूपिणी**" என்று ப்ரஸித்தம். அல்லது விசுத்தி சக்ரத்தினுடைய மேல் பாகத்திலுள்ள சித்ரரூபமண்டலத்தினுடைய அம்ருதாதி கலா ரூபிணிகளாயிருக்கிற காமேச்வரீ முதலிய நித்யாகலா ரூபிகளான மஹாசக்திகளால் சூழப்பட்டவள் ஸ்ரீ மஹாத்ரிபுர ஸுந்தரி யென்று தாத்பர்யம்.

## (४१) एकातपत्रसाम्राज्यदायिकायै नमो नमः ॥

( एकातपत्र - ஒரு குடை, साम्राज्य - அரசுரிமை, दायिका - கொடுத்தல்.)

3

ஒரு குடையின் கீழ் அரசாளவல்ல சக்கரவர்த்திப் பதவியையளிக்க வல்லவள்.

அல்லது ஆத்யாத்மிக, ஆதிதைவிக, அதிபௌதிகங்களாகிய மூன்றுவித தாபங்களுண்டு; அவையே ஸம்ஸாரத்தைப் பரவி நின்று மக்களை அஞ்ஞானத்தில் முழுகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி செய்கின்றன. அவைகளைப் போக்கடிக்கும் ஆத்ம ஞானமே ஆதபத்ரமென்பது. ஏக-முக்யம் (இரண்டற்றது) ஜீவப்ரஹ்மைக்ய ரூபமாகிய அகண்டாகாரஞானமே ஏகாத பத்ரமாகும். நன்றாக ப்ரகாசிக்கும் தன்மையைக் குறிக் கின்றது ஸாம்ராஜ்யம் என்னும் பதம். ஆகவே தன்னைத் தானே நன்கு உணர்ந்து தனது மஹிமையில் நின்று ப்ரகாசிக்கும் நிலையேயாகும் என்பது கருத்து.

"மூன்றுவித தாபத்தினாலுண்டாகிய துக்கத்தைப் போக்கடிப்பதற்குச் சக்திவாய்ந்த முக்யமான ஆத்மஞா னத்தையளிக்கவல்லவள்" என்றும் பொருள் சொல்லலாம். இக்கருத்தையே; "एकातपत्रसाम्राज्यप्रदा" (२५) என்று த்ரிச தியும் வர்ணித்திருக்கிறது.

## (४२) सनकादिसमाराध्यपादुकायै नमो नमः ॥

(**सनकादि** - ஸநகாதிகளை ஆதியாகக் கொண்ட, **समाराध्य** - நன்றாக ஆராதிக்கப்பட்ட, **पादुका** - பாதுகை.)

ப்ரஹ்மபுத்ரர்களாயும், ப்ரஹ்மஞானிகளாயுமிருக்கின்ற ஸநக, ஸநந்தந, ஸநாதந, ஸநத்குமாரர்களான யோகிகளினால் நன்றாக ஆராதிக்கப்பட்ட பாதுகைகளையுடையவள்.

"ஸநகாதி முனிகளால் த்யானம் செய்யப்பட்டவள்" (1) என்றும; முனிகள் என்றால் எப்பொழுதும் ஜீவப்ரஹ் மைக்யத்தை மனனம் (த்யானம்) செய்பவர்கள் என்பது பொருள். ஸநகாதிகளோவெனில் ஞானவைராக்யாதி களான ஸாதநங்கள் நிரம்பிய ப்ரஹ்மாவின் மானஸபுத்ரர் கள். இவர்கள் மோக்ஷமார்க்க ப்ரவர்த்தகர்கள். "ஸநகாதி களான யோகிகளாலும், ஸப்தர்ஷிகளுடைய மண்டலங் களாலும் ஸேவிக்கப்பட்டவள்" (1) என்றும் கூறப்பட் டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) "सनकादिमुनिध्येया ॥" ल० त्रि० (२३०)
(2) "सनकाद्यैश्च योगीन्द्रैः सतर्षीणां च कोटिभिः ॥" दि० ध्या० (७७)

## (४३) कलशोद्भवदूर्वासपूजितायै नमो नमः ॥

(कलशोद्भव - *அகஸ்த்யர்*, दूर्वास - *தூர்வாஸர்* पूजित - *பூஜை.*)

அகஸ்த்யமஹர்ஷியாலும், தூர்வாஸமஹர்ஷியாலும் பூஜிக்கப்பட்டவள்.

## (४४) देवर्षिभिस्तूयमानवैभवायै नमो नमः ॥

(देवर्षि - *நாரதாதிகள்*, स्तूयमान - *துதிக்கப்படுவது*, वैभव - *மஹிமை.*)

நாரதாதிகளான தேவர்ஷிகளால் ஸ்தோத்ரம் செய்யப்பட்ட மஹிமையை யுடையவள்.

"*நாரதாதிகளான தேவர்ஷிகணங்களால் துதிக்கப்பட்ட ஆத்மவைபவத்தை (மஹிமையை)யுடையவள்*" (1) *என்றும்* "*நாரதாதி தேவர்ஷிகணங்களால் ஸேவிக்கப்பட்டவள்*" (2) *என்றும் கூறப்பட்டிருக்கிறது.*

(1) "देवर्षिगणसंघातस्तूयमानात्मवैभवा" ल० स० (६३)
(2) "नारदादिसुरर्षीणां कोटिभिः परिसेविताम् ॥" दि० ध्या० (७८)

## (४५) मत्तेभवक्त्रषड्वक्त्रवत्सलायै नमो नमः ॥

(मत्त - *மதம் மிகுந்த*, इभवक्त्र - *யானைமுகம்*, षड्वक्त्र - *ஆறுமுகம்*, वत्सल - *வாஞ்சை.*)

விக்நேச்வரனிடத்திலும் ; ஷண்முகனிடத்திலும் அதிசவாஞ்சையுடையவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (४६) चक्रराजमहायन्त्रमध्यवर्त्यै नमो नमः ॥

(**चक्रराज** - சக்ரச்ரேஷ்டம், **महायन्त्र** - யந்த்ரங்களில், சிறந்தது, **मध्यवर्ति** - நடுவில் இருப்பது.)

ஸ்ரீசக்ராகாரமான மஹாயந்த்ரத்தின் மத்தியில் (பிந்து பீடத்தில்) விளங்குபவள்.

"ஸ்ரீசக்ரராஜமென்பது பிந்துவோடு கூடிய முக்கோண வடிவமுள்ளது. அதை இருப்பிடமாகக் கொண்டவள்"(1) மற்றும், "ஸ்ரீசக்ரமானது சிவனுக்கும் ஸ்ரீதேவிக்கும் சரீரமாகவுள்ளது, எவ்விதம் சரீரத்திலே ஜீவனுடைய இருப்போ, அவ்விதமே ஸ்ரீசக்ரமும் இவர்களது இருப்பிடம் என்பது தாத்பர்யம்.

(1) "श्रीचक्रराजनिलया ॥" ल० स० (९९६) "श्रीचक्रं शिवयोर्वपुः ॥" ल० भा०॥

## (४७) चिदग्निकुण्डसंभूतसुदेहायै नमो नमः ॥

(**चिद्** - ஞானம், **अग्निकुण्ड** - அக்னியை வளர்க்கும் ஹோம குண்டம், **संभूत** - உண்டானது, **सुदेह** - சோபை மிகுந்த சரீரம்.)

ஞானரூபமாகிய அக்நிகுண்டத்திலிருந்து உண்டாகிய சோபைமிகுந்த சரீரத்தையுடையவள்.

"'சித்' என்ற பதத்தினால் கேவலம் ப்ரஹ்மத்தைக் குறிக்கின்றது. அந்தப்ரஹ்மமே அக்நிகுண்டம் என்றும், அந்தப்ரஹ்மத்தின் லக்ஷணம் யாதெனில் அவித்யாரூபமாகிய இருளைப்போக்கடிப்பது. "சரீரத்தினுள்ளே எப்பொழுதும் மிகுந்த ப்ரகாசத்தோடு வளர்ந்து கொண்டிருப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதும்; அஞ்ஞானமாகிய இருளுக்குப் பரமசத்ருவாகவுமிருக்கின்ற ஞானாக்நி" (2) என்றும், அல்லது பண்டாஸுரனால் துன்பமடைந்த இந்த்ராதிகளைக் காப்பாற்றுவதற்காக அவர்களால் வளர்க்கப்பட்ட ஹோமகுண்டத்திலிருந்து உண்டாகியவள் என்றும் பொருள் கொள்ளலாம்.

(1) "चिदग्निकुण्डसंभूता॥" ல० ஸ० (४)

(2) "अन्तर्निरन्तरनिरिन्धनमेधमाने
मोहान्धकारपरिपन्थिनि संविदग्नौ॥" चि० स्त० (५८)

## (४८) शशाङ्कखण्डसंयुक्तमकुटायै नमो नमः॥

(**शशाङ्क** - சந்த்ரன், **खण्ड** - துணுக்கு, **संयुक्त** - சேர்க்கை, **मकुट** - கிரீடம்.)

சந்த்ரகலையோடு சேர்ந்த கிரீடத்தையுடையவள்.

"அஷ்டமீ (எட்டாவது பிறை) சந்த்ரனைத் தரித்துக் கொண்ட காரணத்தால் சோபை மிகுந்த நெற்றிப்ரதேசத்தையுடையவள்" (1) என்று வர்ணித்திருக்கிறது.

(1) "अष्टमीचन्द्रविभ्राजदलिकस्थलशोभिता॥" ல० ஸ० (१५)

## (४९) मत्तहंसवधूमन्दगमनायै नमो नमः॥

(**मत्त** - மதப்பெருக்கு, **हंसवधू** - பெண் அன்னம், **मन्द** - மெதுவான **गमन** - நடை.)

மதம் மிகுந்த அன்னப்பேடு போன்ற மெதுவான நடையையுடையவள்.

"பெண் ஹம்ஸம் போன்ற மந்த கமநத்தை (நடையை) யுடையவள்" (1) என்றும், ஸ்வபாவத்தில் ஹம்ஸம் மெதுவான நடையுடையது. அதிலும் அன்னப்பேடு கிரம்ப மெதுவாக நடக்கும். அதன் காரணமாகவே "**मराली**" என்றபதம் உபயோகப்படுத்தப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும், "ஹே தாயே! அழகிய சரித்ரத்தையுடையவளே! உனது வீட்டிலிருக்கும் கலஹம்ஸங்கள் உனது அழகிய நடையைக் கண்டு தாங்களும் அந்த நடையைப் பரிசயம் செய்துகொள்ள நினைத்து உன்னைப் பின் தொடர்ந்து தட்டுத் தடுமாறி நடப்பதை விடுவதில்லை. அக்காரணத்தினுலேயே அவைகளுடைய விளையாட்டின் சிக்ஷையை அழகிய பத்மராகமணிகளோடு கூடிய கால் சிலம்பினுடைய இனிய சப்தத்தின் வ்யாஜமாகச் சொல்லிக்கொடுப்பது போலிருக்கின்றது உனது பாதாரவிந்தங்கள்" (2) என்றும் வர்ணித்துள்ளது.

"मराली मन्दगमना ॥ ल० सं० ॥ (४७)

पदन्यासक्रीडापरिचयमि वारब्धुमनसः

स्खलन्तस्ते खेलं भवनकलहंसा न जहति ।

अतस्तेषां शिक्षां सुभगमणिमञ्जीररणित-

च्छलादाचक्षाणं चरणकमलं चारुचरिते ॥" सौ० (९१)

(५०) वन्दारुजनसंदोहवन्दितायै नमो नमः ॥

(वन्दारु-जन - வணங்கப்பட்ட - ஜநங்கள், संदोह - ஸமூஹம் அல்லது கூட்டம், वन्दित - வணங்குதல்.)

நான்குவித புருஷார்த்தங்களையும் விரும்பித் தன்னை வணங்கும் ஜநஸமூஹத்தை யுடையவள்.

(५१) अन्तर्मुखजनानन्दफलदायै नमो नमः ॥

(अन्तर्मुख- த்யாநம் அல்லது ரஹஸ்யம், जन - ஜந, आनन्द - ஆநந்தம், फलदा - பலத்தைக் கொடுப்பது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை எப்பொழுதும் த்யானம் செய்து கொண்டிருக்கின்ற ஆத்மஞானிகளுக்கு மோக்ஷ பலத்தைக் கொடுப்பவள்.

"சித்தவ்யாபாரத்தையடக்கி மனத்தினுல் த்யானத்தோடுயிருத்தல் அந்தர்முகமென்பது - அது ஆத்ம ஞானிகளாலேயே முடியும். அவர்களால் நன்கு உபாஸிக்கப் பட்டவள்" (1) என்றும்,

"ஹே தாயே! ஆதியும் அந்தமுமில்லாதவளே! எப்பொழுதும் ஸேவிக்கத்தகுந்தவளே! உன்னுடைய சரணாரவிந்தங்களிலிருந்து வெளிவரும் கிரணங்களோடு, அணிமாதிகளான அஷ்ட ஸித்திகளோடும் சூழப்பட்ட உன்னை, தான் என்று அபேதத்தோடு எவனொருவன் எப்பொழுதும் த்யானம் செய்கிருனே; பரமசிவனுடைய ஐச்வர்யத்தையே துரும்பாக மதித்த அவனுக்கு ஊழிக்காலத்தில் தோன்றக்கூடிய அக்கினியானது ஹாரத்தியெடுக்கும் தன்மையைச் செய்கிறது. அதில் என்ன ஆச்சரியமிருக்கிறது" (2) என்றும், "தானே பரதேவதையாகிய லலிதா" (3) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) "अन्तर्मुखसमाराध्या ॥" क॰ स॰ (१०५)

(2) स्वदेहोद्भूताभिर्घृणिभिरणिमाद्याभिरभितो
निषेव्ये नित्ये त्वामहमिति सदा भावयति यः ।
किमाश्चर्यं तस्य त्रिनयनसमृद्धिं तृणयतो
महासंवर्ताग्निर्विरचयति नीराजनविधिम् ॥" सौ॰ (३०)
"स्वात्मैव परदेवता ललिता ॥" भाव॰ (२७)

(५२) पतिव्रताङ्गनाभीष्टफलदायै नमो नमः ॥

(पतिव्रता - கற்புடைய अङ्गना - பெண், अभीष्ट - தான் விரும்புவது, फलद - பலத்தைக் கொடுப்பது.)

கற்பிற் சிறந்த உத்தமப் பெண்கள் விரும்பும் பலத்தைக் கொடுப்பவள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (५३) अव्याजकरुणापूरपूरितायै नमो नमः॥

(**अव्याज** - கபடமற்ற, **करुणा** - கருணை **पूर** - ப்ரவாஹம் (வெள்ளப் பெருக்கு), **पूरित** - நிரம்புதல்.)

கபடமற்ற கருணைப்ரவாஹத்தினால் நிரம்பியவள்.

"கபடமற்ற (உபாதியில்லாத) கருணையையே சரீரமாகக் கொண்டவள்." (1) என்றும்;

"ஒரு அநிர்வசநீயமான சிவப்பு நிறத்தோடு கூடிய கருணையானது ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்குகிறது" (2) என்றும்,

"கருணையே வடிவாகக் கொண்டவள்" (3) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) "अव्याजकरुणामूर्तिः॥" ல० स० (९९२)

(2) "जयति करुणा काचिदरुणा" (?)

(3) "कारुण्यविग्रहा॥" ல० त्रि० (१५३)

## (५४) निरञ्जनचिदानन्दसंयुक्तायै नमो नमः॥

(**निरञ्जन** - அக்கமற்ற (அழிவற்ற), **चिद्** - ப்ரஹ்மம், **आनन्द** - ஆநந்தம், **संयुक्त** - சேர்க்கை.)

துக்கமற்ற ப்ரஹ்மாநந்த ஸ்வரூபத்தோடு கூடியவள்.

"இச் சராசரங்கள் ஆநந்தத்திலிருந்தே உண்டாகின்றன. அப்படி உண்டாகிய ப்ராணிவர்க்கங்கள் ஆநந்தத்திலேயே ஜீவித்திருக்கின்றன. முடிவில் அவைகள் ஆநந்தத்திலேயே லயத்தை யடைகின்றன" (1) என்று தைத்திரீயோபநிஷத்தில் வர்ணிக்கப்படுகிறது.

(1) "आनन्दाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते; आनन्देन जातानि जीवन्ति; आनन्दं प्रयन्त्यभिसंविशन्तीति" तै० उ० भृ० (६)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (५५) सहस्रसूर्यसंयुक्तप्रकाशायै नमो नमः ॥

(**सहस्र** - அநேகம் (எண்ணிக்கையற்ற), **सूर्य** - ஸூர்யன் **संयुक्त** - சேர்க்கை, **प्रकाश** - காந்தி.)

அநேக ஸூர்யர்கள் ஒன்று சேர்ந்ததுபோன்ற காந்தியை யுடையவள்.

## (५६) रत्नचिन्तामणिगृहमध्यस्थायै नमो नमः ॥

(**रत्न-चिन्तामणि** - ரத்நமும் சிந்தாமணியும் (நவரத்ந விசேஷங்கள்), **गृह** - வீடு, **मध्य** - நடுவு, '**स्था**' - இருப்பு.)

ரத்நங்களாலும், சிந்தாமணிகளாலும் நிர்மாணம் செய்யப் பட்ட வீட்டின் நடுவில் இருப்பவள்.

"சிந்தாமணி க்ருஹத்தின் மத்தியில் இருப்பவள்" (1) என்றும்; "ஆயிரம் யோஜனை நீண்டதாகிய சிந்தாமணி க்ருஹம்" (2) என்றும்; "சிந்தாமணிக் கூட்டங்களினால் நிர்மாணம் செய்யப்பட்ட அந்தத் தேவியின் க்ருஹமானது (கவலையை) விலக்கட்டும்" (3) என்றும் வர்ணித்திருக் கிறது.

4

(1) "**चिन्तामणिगृहान्तस्था**" ॥ ल० स० (५७)

(2) "**सहस्रयोजनायामचिन्तामणिग्रहान्तरे** ॥" दि० ध्या० (१७)

(3) "**चिन्तामणिगणरचितं**
**चिन्तां दूरीकरोतु मे सदनम्** ॥" ल० स्त० (१०५)

## (५७) हानिवृद्धिगुणाधिक्यरहितायै नमो नमः ॥

(**हानि** - குறைவு, **वृद्धि** - வளர்ச்சி, **गुण** - குணம், **आधिक्य**- மிகுதியின் தன்மை, **रहित** - விடுதல்.)

அவயவங்களுடைய குறைவு வளர்ச்சி முதலிய குணங் களின் பாகுபாட்டை விட்டவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது உலகிலே தோன்றும் பொருள்களுக்கு வளர்ச்சியும், குறைவுமுண்டு. ஆனால் ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரிக்கு இவ்விதமான உபாதிகள் ஒன்றும் இல்லை. என்றும் பதினாறு வயது உடையவளாகவே இருக்கிறாள் என்பது கருத்து.

"நித்யையான (அழிவற்ற) அந்த மங்களமூர்த்தியாகிய ஸ்ரீதேவியானவள் இந்த விஸ்தீர்ணமான உலகை (ஸ்ருஷ்டித்து) தேவதைகளுடைய கார்யஸித்தியின் பொருட்டு எப்பொழுது ஆவிர்ப்பவித்தாளோ (அவதரித்தாளோ) அப்பொழுதுதான் உலகவழக்கிலே உண்டானாள் என்றும், ஆனால் அவள் 'நித்யா' என்றும் சொல்லப்படுகிறாள்" (1) என்றும்; "அவயவங்களுடைய வளர்ச்சியும், தேய்வு மற்றவள்" (2) என்றும் கூறப்பட்டிருக்கிறது.

(1) "नित्यैव सा जगन्मूर्तिस्तया सर्वमिदं ततम् ।
देवानां कार्यसिद्ध्यर्थमाविर्भवति सा यदा ॥
उत्पन्नेति तदा लोके सा नित्याप्यभिधीयते ।" दे॰ स॰ ॥

(2) "हानिवृद्धिविवर्जिता ॥" ल॰ त्रि॰ (१७८)

(५८) महापद्माटवीमध्यनिवासायै नमो नमः ॥

(महा - பெரிய, पद्म - தாமரை, अटवी - காடு, (வனம்) मध्य - நடுவு, नि-वास - எப்போதும், வஸித்தல்.)

விசாலமான தாமரைவனத்தின் நடுவே நிரந்தரமான வாஸத்தை யுடையவள்.

"மூன்று லக்ஷம் யோஜனை விஸ்தீர்ணமுள்ள மஹா பத்மவனத்தால் சூழப்பட்டவள்" (1) என்றும் "மிகுந்த வேகத்தோடு கூடிய இளந்தென்றல் மோதுதலின் கார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணமாக வெளிக்கிளம்பிய புஷ்பங்களின் மகரந்தப்பொடிகளை நாலாபக்கங்களில் வீசுவதும், கலஹம்ஸங்களின் கூட்டங்களுடைய கோலாஹலங்களினால் பெருக்கெடுத்த மதுரமான சப்தங்களோடு கூடிய கரைகளினால் மனதைக் கவருவதும், நறுமணத்தோடு கூடிய அலைகளின் வரிசைகளினால் மோதப்பட்ட கரையின் ஸமீபத்தை யுடையதுமான அந்த மஹாபத்மவனத்தை வணங்குவோம்" என்றும்,

"அதைக்காட்டிலும் மேலே இருக்கின்றதும், அதோமுகமாகவும் (கீழ் நோக்கியதும்) ஸஹஸ்ராரமென்று சொல்லப்படுவதுமான அந்த குலபத்மத்தை" 'இதுவே மஹாபத்மவனமென்பது அதற்கு மேலே ஸமனா....'' (2) என்றும், "மஹாபத்மவனத்தில் இருப்பவள்" (3) என்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

(1) "त्रिलक्षयोजनायाममहापद्मवनावृते ॥" दि॰ व्या॰ (१७)

(2) "पटीरपवनबालक-
घाटीनिर्यत्परागपुञ्जरिताम ।

कलहंसीकुलकलकल-
कूलंकषनिनदनिचयकमनीयाम् ॥

पद्माटवीं भजामः
"परिमलकल्लोलपक्ष्मलोपान्ताम् ॥" ल॰ स्त॰ (१०८, १०९)

(3) "महापद्मवनं चेदं समानं तस्य चोपरि ॥" स्वच्छ॰ सं॰ ॥

(4) "महापद्माटवीसंस्था ॥" ल॰ स॰ (५९)

(५९) जाग्रत्स्वप्नसुषुप्तीनां साक्षिभूत्यै नमो नमः ॥

(जाग्रत् - விழிப்பு, स्वप्न - ஸ்வப்நம், सुषुप्ति - தூக்கம், साक्षिभूत - ஸாக்ஷியாக இருப்பது.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி என்ற அவஸ்தாத்ரயங்களுக்கும் ஸாக்ஷியாக இருப்பவள்.

இங்கே வாக்கு முதலிய கர்மேந்த்ரியங்கள் ஐந்தும், த்வக் முதலிய ஞானேந்த்ரியங்கள் ஐந்தும் சேர்ந்த பத்து இந்த்ரியங்களுடைய விஷயங்களான வசநாதிகளோடும்; ஸ்பர்சாதிகளோடும் கூடிச்சேர்ந்து வ்யவஹார ரூபமாயிருப்பது ஜாக்ரதவஸ்தையாகும். மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் முதலிய அந்தக்கரணங்களுடைய பரஸ்பர வ்யவஹார ரூபமாயிருப்பது ஸ்வப்நாவஸ்தையாகும். வெளிவ்யவஹாரங்களும், ஆந்தர (மாநஸிக) வ்யவஹாரங்களும் லயித்து மறைந்திருக்கின்ற ஜீவனையறிகின்ற ஸ்திதியே ஸுஷுப்தியென்ற அவஸ்தையாகும். இந்த மூன்று நிலைகளின் ஸாக்ஷியாக இருப்பவள் என்பது கருத்து.

"ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்திகளில் வ்யக்தமாகயிருந்து கொண்டு எவள் ஞானத்தை விருத்தியடையும்படி செய்கிறாளோ, ப்ரஹ்மா முதல் எறும்புவரையிலுள்ள சரீரங்களில் எவள் ஸம்பந்தித்துக்கொண்டு இருக்கிறாளோ அவளே உலகங்களுக்கு ஸாக்ஷிரூபமாக விளங்குகிறாள்" (1) என்பது மனீஷா பஞ்சகம்.

(1) "जाग्रत्स्वप्नसुषुप्तिषु स्फुटतरा या संविदुज्जृम्भते
या ब्रह्मादिपिपीलिकान्ततनुषु प्रोता जगत्साक्षिणी ॥" म० प० (१)

## (६०) महातापौघपापानां विनाशिन्यै नमो नमः ॥

(महा - பெரிய, ताप - தாபம், ओघ - கூட்டம், पाप - பாபம், विनाश - நாசம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுதியும் தாபக்கூட்டங்களான பாபங்களை நாசம் செய்ப வள்.

ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிகங்களான மூன்றுவித தாபத்தையும் நாசம் செய்பவள் என்பது கருத்து.

## (६१) दुष्टभीतिमहाभीतिभञ्जनायै नमो नमः ॥

(दुष्ट - துஷ்டர், भीति - பயம், महा - பெரிய भीति - பயம், भञ्जन - முறியடிப்பது.)

மிகவும் கொடியவர்களான பண்டாஸுரன் முதலியவர்களுடைய பயத்தையும், காலகூடத்திலிருந்து உண்டாகிய கொடிய விஷபயத்தையும் நாசம் செய்தவள்.

"பண்டாஸுரனை நாசம் செய்வதற்கு முயற்சியெடுத்தவள்" (1) என்றும், "மிகவும் கொடியதான காலகூட விஷத்தையுண்ட பரமசிவனுக்கு அந்த விஷத்தினால் மரணம் இல்லையென்றால் அதற்குக் காரணம்; ஹே தாயே! உன்னுடைய இரண்டு கர்ணாபரணங்களின் மஹிமையே தான்" (2) என்றும் வர்ணித்திருக்கிறது.

தேவர்களும் அஸுரர்களும் ஸமுத்ரத்தைக் கடைந்த ஸமயத்தில் அதிலிருந்து உண்டாகிய காலகூட விஷத்தைப் பரமசிவன் சாப்பிட்டதும் ஸ்ரீதேவியின் அநுக்ரஹத்தினாலே தான் என்பது கருத்து.

(1) "भण्डासुरवधोद्युक्त शक्तिसेनासमन्विता ॥" ल० स० (६५)

(2) करालं यत्क्ष्वेलं कबलितवतः का कलना

न शंभोस्तन्मूलं तव जननि ताटङ्कमहिमा ॥" सौ० (२८)

## (६२) समस्तदेवदनुजप्रेरकायै नमो नमः ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(**समस्त** - எல்லாம், **देव** - தேவர்கள், **दनुज** - அஸுரர்கள், **प्रेरक** - தூண்டுதல்.)

எல்லாத் தேவர்களையும், அஸுரர்களையும், அந்தர்யாமியாயிருந்துகொண்டு தூண்டுகின்றவள்.

எந்ததேவியானவள்; ஸமஸ்த ப்ராணிவர்கங்களிடத்திலும் சைதந்யரூபியாகவும்; ஆதிகாரணரூபியாகவும்; வித்யாரூபியாகவும்; புத்திரூபியாகவும் இருந்துகொண்டு நம்மை ப்ரேரணை செய்கின்றாளோ அவளை த்யாநம் செய்வோம்.

"सर्वचैतन्यरूपां तामाद्यां विद्यां च धीमहि ।
बुद्धिं या नः प्रचोदयात् ॥" दे० भा० (१)

## (६३) समस्तहृदयाम्भोजनिलयायै नमो नमः ॥

(**समस्त** - எல்லாம், **हृदय** - ஹ்ருதயம், **अम्भोज** - தாமரை, **निलय** - இருப்பு.)

ஸகல உயிர்களுடைய ஹ்ருதயமாகிய தாமரைப் புஷ்பத்தை இருப்பிடமாகக்கொண்டவள்.

"ஸகல உயிர்களுடைய ஹ்ருதயத் தாமரையில் வாஸத்தையுடையவளாயிருந்தாலும் மோஹரூபமான வடிவுடன் கண்ணுக்குப் புலப்படாதவள்" (1) என்று லலிதோபாக்யாநத்தில் வர்ணித்திருக்கிறது.

(1) "हृदयस्थापि लोकानामदृश्या मोहनात्मिका ॥" ल० उ० ॥

## (६४) अनाहतमहापद्ममन्दिरायै नमो नमः ॥

(**अनाहत** - அநாஹதம், **महा** - பெரிய **पद्म** - தாமரை, **मन्दिर** - வீடு அல்லது இருப்பிடம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாஹதமென்ற மஹாபத்மத்தை இருப்பிடமாகக் கொண்டவள்.

'க' முதல் 'ठ' வரையிலுள்ள அக்ஷரரூபங்களான பத்ரங்களில் ஸ்வர்ணமயமான தளத்தோடு கூடியதும், ஹ்ருதயஸ்தானத்திலுள்ளதும், ஆறு ஆதாரங்களில் ஒன்ருனதுமாகிய ஒரு ஆதாரத்திற்கு அநாஹதமென்று பெயர். அதைத் தனது இருப்பிடமாக (வீடாக) க்கொண்டவள். அந்த அநாஹத சக்ரமானது அடிக்கடி அடித்துக் கொள்ளும் பொழுது நாதம் எழுவதால் 'அநாஹதம்' என்று அழைக்கப்படுகின்றது. அந்த நாதமானது யோகிகளுக்கேயன்றி மற்றவர்களுக்கு ஸாத்யமாகாது என்பது தாத்பர்யம்.

"பன்னிரண்டு தளங்களோடு கூடிய ஹ்ருதயகமலத்தில் அநாஹதசக்ரதில் 'ராகிணீ' என்ற பெயருள்ள யோகினீ வஸிக்கின்ருள். அந்த அநாஹதபத்மத்தை இருப்பிடமாகக் கொண்டவள்" என்றும் வர்ணித்திருக்கிறது.

"**अनाहताब्जनिलया ॥**" ல° ஸ° (४८५)

## (६५) सहस्रारसरोजातवासितायै नमो नमः ॥

(**सहस्रार** - ஸஹஸ்ராரகமலம், **सरोजात** - தாமரை, **वासित** - இருப்பு.)

சிரஸிலுள்ள ஸஹஸ்ரார கமலத்தில் வாஸத்தையுடையவள்.

"ஆயிரம் தளங்களை யுடையது ஸஹஸ்ராரகமலம். அதில் இருப்பவள்" (1) என்றும்;

"ஸஹஸ்ராரபத்மத்தில் பதியோடு கூட ஏகாந்தமாக விளையாடுகிருய்" (2) என்றும் வர்ணித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) "सहस्राराम्बुजारूढा" ल० स० (१०५)
(2) "सहस्रारे पद्मे सह रहसि पत्या विहरसे" ॥ सौ० (९)

## (६६) पुनरावृत्तिरहितपुरस्थायै नमो नमः ॥

(पुनः - மறுபடி, आवृत्ति - திரும்புவது, रहित - விடுவது, पुर - இருப்பிடம் அல்லது சரீரம், स्था - இருப்பு.)

மறுபடி திரும்புதல் இல்லாத இருப்பிடத்தையுடையவள்.

புனராவ்ருத்தி என்றதால் மனிதன் ஸ்ரீதேவியை யுபாஸித்து எந்த இடத்தை அடைந்தால் பிறகு ஜனன மரணாதிகள் ஒன்றும் அணுகாதோ அந்த இடமாகிற பரமபதம் என்பது கருத்து. "அந்த விஷ்ணுவினுடைய ச்ரேஷ்டமான (அழிவற்ற)-ஸ்தானத்தை எப்பொழுதும் ஞானிகள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்" (1) என்று ச்ருதிகளில் சொல்லப் பட்டிருக்கிறது. அதுவும் உண்மையில் ஸ்ரீபுரமென்று கொள்ளவேண்டும். ஸ்வர்க்கம் முதலிய லோகங்களையடைந்தால் "புண்யம் குறைந்ததும் மனித உலகில் (பூவுலகில்) ப்ரவேசிக்கின்றனர்" (2) என்ற ந்யாயத்தையநுஸரித்துப் பின்னும் ஜனனமரணாதிகள் உண்டாகின்றன. மேலே சொல்லியது என்றும் அழியாது நிலைத்திருக்கின்ற பேரின்ப நிலையாகும்.

(1) "तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति सूरयः" ॥ ऋ० (१-२-७)
(2) "क्षीणे पुण्ये मर्त्यलोकं विशन्ति" (?)

## (६७) वाणीगायत्रीसावित्रीसंनुतायै नमो नमः ॥

(वाणी - ஸரஸ்வதி, गायत्री - காயத்ரி, सावित्री - ஸாவித்ரி, संनुत - நன்றாக வணங்குவது.)

ஸரஸ்வதியாலும், காயத்ரியாலும், ஸாவித்ரியாலும் நன்கு வணங்கப்பட்டவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(६८) नीलारमाभूसंपूज्यपादाब्जायै नमो नमः ॥

(नीला - *நீலாதேவி,* रमा - *லக்ஷ்மிதேவி,* भू - *பூதேவி,* संपूज्य - *நன்றாக பூஜை செய்வது,* पादाब्ज - *பாதகமலம்.)*

நீலாதேவியாலும் லக்ஷ்மிதேவியாலும் பூதேவியாலும் நன்றாக பூஜிக்கப்பட்ட பாதகமலங்களை யுடையவுள்.

(६९) लोपामुद्रार्चितश्रीमच्चरणायै नमो नमः ॥

(लोपामुद्रा - *அகஸ்த்ய மஹர்ஷியின் பத்நி,* अर्चित - *அர்ச்சனை,* श्रीमत् - *சோபை மிக்க,* चरण - *பாதம்.)*

அகஸ்த்ய முனியின் மனைவியாகிய லோபாமுத்ரையினால் பூஜிக்கப்பட்ட சோபைமிகுந்த பாதங்களையுடையவள்.

*"அகஸ்த்யபத்நியான லோபாமுத்ரையினால் உபாஸிக்கப்பட்டவள்" என்றாவது, அல்லது "லோபாமுத்ரையென்ற வித்யையினால் பூஜிக்கப்பட்ட பாதங்களையுடையவள்" (1) என்றாவது பொருள் கொள்ளலாம்.*

(1) "लोपामुद्रार्चिता ॥" ल० स० (६४७)

(७०) सहस्ररतिसौन्दर्यशरीरायै नमो नमः ॥

(सहस्र - *எண்ணிக்கையற்ற,* रति - *ரதிதேவி,* सौन्दर्य - *அழகு,* शरीर - *சரீரம்.)*

ஸகல தேவஸ்த்ரீகளிலும் அழகில் மிக்க ஆயிரம் ரதிதேவியைக் காட்டிலும் ஸௌந்தர்யத்தோடு கூடிய சரீரத்தையுடையவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (७१) भावनामात्रसंतुष्टहृदयायै नमो नमः ॥

(**भावना-मात्र** - பாவனை செய்த அளவில், **संतुष्ट** - ஸந்தோஷப்பட்ட, **हृदय** - ஹ்ருதயம்.)

பாவனை செய்த அளவிலே ஸந்தோஷப்பட்ட ஹ்ருதயத்தை (மனஸை) யுடையவள்.

"(மூன்றுவித) பாவனைகளால் அறியக்கூடியவள்"(1) என்று லலிதாஸஹஸ்ரநாமத்தில் கூறப்பட்டிருக்கிறது. மூன்றுவித பாவனைகளின் விவரத்தை பாஷ்யத்தில் விரிவாகக் காணலாம்.

ஆகவே மஹாஞானிகளும், ஸமயிகளும், யோகிகளுமே மானஸ பூஜை செய்து ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரியை ஸந்தோஷிக்கத் தக்கவர்கள். மற்றும், "சித்தவ்யாபாரத்தை அடக்கி மனத்தை ஒருமுகப்படுத்திய ஞானிகளுக்கே காணத்தகுந்தவள்" என்றும், வெளிவ்யாபாரங்களிற் சென்ற மனத்தை யுடையவர்களாலே காணக்கூடாதவள்" (2) என்றும் கூறப்பட்டிருக்கிறது.

(1) "भावनागम्या ॥" ल० स० (११२)

(2) "अन्तर्मुखसमाराध्या बहिर्मुखसुदुर्लभा ॥ ल० स० (८७०, ८७१)

## (७२) नतसंपूर्णविज्ञानसिद्धिदायै नमो नमः ॥

(**नत** - வணக்கம், **संपूर्ण** - நிறைவு, **विज्ञान** - விசேஷ ஞானம், **सिद्धिद** - முக்தியைக்கொடுப்பது).

தன்னை வணங்கி உபாஸிப்பவர்களுக்குப் பரிபூர்ணமான ஞானத்தையும், முக்தியையும் கொடுப்பவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பக்தர்களுக்கு வேண்டும் வரத்தை யளிப்பவள்" (1) என்றும்; "ஹே தாயே! எந்த பக்தனாவது உன்னைப் பார்த்து" ஹே பவானி! நீ உன் தாஸனாகிய என்மீது கருணை நிரம்பிய கடைக்கண் பார்வையை விழும்படி செய்வாயாக என்று ஸ்துதிசெய்ய விரும்பி, "பவானி! நீ" என்று அந்த இரண்டு வார்த்தைகளைச் சொல்லிய அளவிலேயே அவனுக்கு நீ "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி விஷ்ணு, ப்ரஹ்மா, இந்திரன் முதலியவர்களுடைய ஒளி பொருந்திய மகுடங்களால் ஹாரத்தி செய்யப்பட்ட உன்னுடைய ஸாயுஜ்யபதவியை அவனுக்குக் கொடுத்து விடுகிறாய்" (2) என்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

(2) "भवानि त्वं दासे मयि वितर दृष्टिं सकरुणा-
मिति स्तोतुं वाञ्छन्कथयति भवानि त्वमिति यः।
तदैव त्वं तस्मै दिशसि निजसायुज्यपदवीं
मुकुन्दब्रह्मेन्द्रस्फुटमकुटनीराजितपदाम् ॥" (सौ० २२)

## (७३) त्रिलोचनकृतोल्लासफलदायै नमो नमः ॥

(त्रिलोचन - முக்கண்ணன், (பரமசிவன்) कृत - செய்கை, उल्लास - விளையாட்டு, फलद - பலத்தையளிப்பது.)

ஸ்ரீபரமசிவனால் செய்யப்பட்ட ஜகத்ஸ்ருஷ்டியின் பலத்தை (நான் ஜகத்தை நிர்மாணம் செய்தேன்) என்ற த்ருப்தியின் (உருவாகிய) பலத்தைக் கொடுத்தவள்.

"ஸ்ரீ காமேச்வரனுக்கு ஸந்தோஷத்தையுண்டாக்குபவள்" (1) என்றும்; ஸ்ரீமஹாகாமேச்வரனுடைய நேத்ரங்களாகின்ற ஆம்பல்களுடைய ஆநந்தத்திற்கு சந்த்ரிகை போன்றவள்" (2) என்றும் வர்ணித்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) "कामेश्वराह्लादकरी ॥" ल० त्रि० (२५६)
(2) "महाकामेशनयनकुमुदाह्लादकौमुदी ॥" ल० स० (४०३)

## (७४) श्रीसुधाब्धिमणिद्वीपमध्यगायै नमो नमः ॥

(श्रीसुधाब्धि - *அம்ருதக்கடல்,* मणिद्वीप - *ரத்நத்வீபம்,* मध्यगा - *மத்யப்ரதேசத்தை யடைவது.)*

அம்ருதக் கடலிலுள்ள ரத்நத்வீபத்தினுடைய நடுப் பகுதியை இருப்பிடமாகக் கொண்டவள்.

*"அம்ருதக் கடல் மத்யத்திலிருப்பவள்." என்றும்,* (1) *"ஆயிரம் கோடி விஸ்தீர்ணமான அம்ருதக் கடலின் மத்தியிலிருக்கிற ரத்நத்வீபத்தில்........"* (2) *என்றும்,*

*"அதனுடைய மத்தியில் கற்பகவிருக்ஷங்களாலான உபவநத்தால் சோபிக்கின்ற ஸ்ரீ லலிதாதேவியின் இருப்பிடமாகிய நவரத்ன த்வீபமானது எனக்கு மங்களத்தைக் கொடுத்து பயத்தை யகற்றுவதாக இருக்கட்டும்"* (3) *என்றும் வர்ணித்திருக்கிறது.*

(1) "सुधासागरमध्यस्था ॥" ल० स० (६१)
(2) "सहस्रकोटिविस्तीर्णे सुधासिन्धोस्तु मध्यमे ।
रत्नद्वीपे.......................................... ॥" त्रि० व्या० (८, ९)
(3) तस्य मध्ये मणिद्वीपः कल्पकारामभूषितः ।
अस्तु मे ललितावासः स्वस्तिदा अभयंकरः ॥" त्रि० वे० पा० स्त० (८)

## (७५) दक्षाध्वरविनिर्भेदसाधनायै नमो नमः ॥

(दक्ष - *தக்ஷப்ரஜாபதி,* अध्वर - *யாகம்,* विनिर्भेद - *நாசம்,* साधन - *உபகரணம் (கருவி.)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்ஷப்ரஜாபதியினுடைய யாகத்தை அழிப்பதற்கு ஸாதகமாக இருந்தவள்.

" தக்ஷயஞ்ஞத்தை நாசம் செய்தவள் " (1) என்றும், வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தக்ஷனுடைய யாகத்தை நாசம் செய்தது பரமசிவன் ஆயினும், அதற்குக் காரணம் தாக்ஷாயணியே என்று தெரிவிக்கிறது "साधन" என்ற சப்த ப்ரயோகம்.

(1) "दक्षयज्ञविनाशिनी ॥" ल० स० (६००)

## (७६) श्रीनाथसोदरीभूतशोभितायै नमो नमः ॥

(श्रीनाथ - விஷ்ணு, सोदरीभूत - ஸஹோதரியாயிருப்பது, शोभित - ப்ரகாசிப்பது.)

ஶ்ரிய: பதியாகிய விஷ்ணுவின் ஸஹோதரியாக அவதரித்து சோபிப்பவள்.

" பத்மநாபனுடைய ஸஹோதரி " (1) என்றும் ; " எந்தத் தேவி காத்யாயனி என்ற பெயருடன் அவதரித்தாளோ, அவள் கம்ஸசத்ருவுக்கு ஸஹோதரி " (2) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) "पद्मनाभसहोदरी ॥" ल० स० (२८०)

(2) "कात्यायनीति या जाता कंसशत्रोः सहोदरी ॥"

## (७७) चन्द्रशेखरभक्तार्तिभञ्जनायै नमो नमः ॥

(चन्द्रशेखर - சந்த்ரகலையை ஆபரணமாகக் கொண்டவன், (பரமசிவன்) भक्त - பக்தி, आर्ति - பீடை, भञ्जन - நாசம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ பக்தர்களுடைய உபத்ரவத்தை நாசம் செய்பவள்.

"ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிகமென்ற தாப ரூபமாகிய மூன்றுவித அக்னியால் வெதுப்பமடைந்த மக்களுக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கவல்ல குளிர்ந்த சந்திரிகை போன்றவள்" (1) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) "तापत्रयाग्निसंतप्तसमाह्लादनचन्द्रिका ॥" ல° ஸ° (३५७)

## (७८) सर्वोपाधिविनिर्मुक्तचैतन्यायै नमो नमः ॥

(**सर्व** - எல்லாம், **उपाधि** - உபாதி, **वि-निर्मुक्त** - விடுதலை, **चैतन्य** - சைதந்யம்.)

சம்பரத்த மலரின் சிவப்பு நிறத்தை ப்ரதிபலிக்கச் செய்கிற ஸ்படிகத்தைப்போல் சித்திலிருந்து சைதன்யத்தை ப்ரதிபலிக்கும்படி செய்கின்ற அவித்யையே உபாதியென்பது. மேலே சொன்ன உபாதியோடு கூடாதவள்.

"அவித்யோபாதியை விட்டவள்" (1) என்றும்; "ஸர்வோபாதிகளினின்றும் விடுபட்டவள்" (2) என்றும் கூறப்பட்டிருக்கிறது.

த்வைதாத்வைத பாவமும், ஸதஸத்பாவமும் எங்கும் உண்டு. ஸர்வஸம்பூர்ணையாக எங்கும் நிறைந்து ஸகல தர்மங்களினின்றும் விடுபட்டு ஏகாந்தமாக இருப்பவள் என்று தாத்பர்யம்.

(1) "निरुपाधिर्निरीश्वरा ॥" ல° ஸ° (१५४)

(2) "सर्वोपाधिविनिर्मुक्ता ॥" ல° ஸ° (७०८)

## (७९) नामपारायणाभीष्टफलदायै नमो नमः ॥

(**नाम-पारायण** - நாமஸ்மரணம், **अभीष्ट** - விருப்பம், **फलद** - பலத்தைத் கொடுப்பது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமஸ்மரணம் செய்கின்ற பக்தர்களுக்கு விரும்பிய பலத்தை யளிப்பவவள்.

'அ' (அகாரம்) 1; 'க-க்ஷ' (க முதல் க்ஷ வரையில்) 35 இவ்விதம் மாஸாக்ஷரங்கள் 36. அவைகளில் ஒவ்வொன்றையும் 16 ஸ்வரங்களோடு பெருக்கினால் 36×16 =576 மாஸங்களின் ரூபமான அக்ஷரங்கள் கிடைக்கின்றன. அவைகளே முதல் அக்ஷரங்கள். அந்த முதல் அக்ஷரங்களுடைய ஸ்தானத்தில் முறையே 36 அக்ஷரங்களை வைக்கவேண்டும். கடைசியில் ஆ; ஈ என்ற பல்லவத்தையும் சேர்க்கவேண்டும். 576×36=20736 நாமாக்ஷரங்கள் கிடைக்கின்றன" (1) இதுவே நாமபாராயணமென்பது. இதனுடைய ரஹஸ்யங்களை குருவின் உபதேசம் பெற்றுத் தெரிந்து கொள்ள வேண்டுவதாகும்.

"அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலும் ஸ்வரங்களோடு சேர்ந்த வர்ணங்களோடு (அக்ஷரங்களோடு) சேர்க்கும் பொழுது, வேறு ரகுநந்தனா! எண்ணிக்கையற்ற நாமாக்ஷரங்கள் உண்டாகின்றன" (2) என்றும், "நாமபாராயணத்தினால் ப்ரீதியை யடைகின்றவள்" (3) என்றும் வர்ணித்திருக்கிறது.

மேலே சொன்ன நாமபாராயணமானது க்ரமத்தில் ஐந்து விதமாக பிரிக்கப்பட்டிருக்கிறது அவை, "தினம், வாரம், மாஸம், (முப்பத்தாறு தினங்கள்)" என்பதாகும். இந்த நாமபாராயணம் என்ற கர்மாவானது ஸஹஸ்ரநாம பாராயணத்திற்கும் பொருந்துவதாகும். "இந்த நாம ஸஹஸ்ரத்தை எவனொருவன் பக்தியோடு படித்துவருகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுளோ, அவனே எனக்கு மிகுந்த பிரியமுள்ளவன் என்பதை அறியவேண்டும். அவன் விரும்பிய ஸகல பலங்களையும் அவனுக்கு நான் கொடுக்கிறேன் " (4) என்றும் கூறப்பட்டிருக்கிறது.

(1) "आ ई पल्लवितैः परस्परयुतैर्द्वित्रिक्रमाद्यक्षरैः
कादिक्षान्तगतैः स्वरादिभिरथ क्षान्तैश्च तैः सस्वरैः ।
नामानि त्रिपुरे भवन्ति खलु यान्यत्यन्तगोप्यानि ते
तेभ्यो भैरवपत्नि विंशतिसहस्रेभ्यः परेभ्यो नमः ॥" ल० स्त० (१९)

(2) "अकारादिक्षकारान्तैः स्वरैर्वर्णैस्तु योजितैः ।
असंख्येयानि नामानि भवन्ति रघुनन्दन ॥" दे० भा० ॥

(3) "नामपारायणप्रीता ॥" ल० स० (७३२)

(4) "इदं नामसहस्रं मे यो भक्त्या पठते सकृत् ।
स मे प्रियतमो ज्ञेयस्तस्मै कामान्ददाम्यहम् ॥" ल०स०फ० पू०(४३,५४)

## (८०) सृष्टिस्थितितिरोधानसंकल्पायै नमो नमः ॥

(सृष्टि - உத்பத்தி, स्थिति - இருப்பு, तिरोधान - மறைவு, संकल्प - மானஸிகமான கர்மா.)

உலகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரமென்ற, (படைத்தல், காத்தல், அழித்தல்) மூன்று காரியங்களுடைய ஸங்கல்பத்தை யுடையவள்.

ஸ்ரீ மஹா தேவியினுடைய ஸங்கல்பத்தாலேதான் உலகின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் நடக்கின்றது என்பது கருத்து.

" உலகைப் படைக்கும் ஸங்கல்பத்தோடு கூடிய சரீரத்தையுடையவள் " (1) என்றும், "ஸ்ருஷ்டியென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகை நிர்மாணம்செய்வதாகும். ரஜோகுணத்தை ப்ரதாநமாகக்கொண்ட பரமேச்வரனுடைய நிர்மாணத்திற்குக் காரணமாக இருந்தவள்" (-) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) "जगत्संकल्पविग्रहा ॥" दि० ध्या० (८३)

(2) "सृष्टिकर्त्री ॥" ल० स० (२६४)

## (८१) श्रीषोडशाक्षरीमन्त्रमध्यगायै नमो नमः ॥

(**श्रीषोडशाक्षरीमन्त्र** - ஸ்ரீஷோடசாக்ஷரீ, (பதினாறு அக்ஷரங்களையுடைய) தேவீ மந்த்ரபேதம், **मध्यगा** - மத்யஸ்தாநத்தையடைதல்.)

ஸ்ரீஷோடசாக்ஷரீ மஹாமந்த்ரத்தினுடைய மத்தியில் இருப்பவள்.

"மாலையில் கோர்க்கப்பட்ட மணிகள் போல ஷோடசாக்ஷரங்களை முறையே மேல்மேலும் பாவிக்கவேண்டும்"
6

(1) என்ற ப்ரமாணத்தை யநுஸரித்து அந்தமாலையின் நூல் போல பதினாறு அக்ஷரங்களிலும் நாதரூபமாக ஸ்ரீதேவி வ்யாபித்திருப்பவள். ஸ்ரீயோடு சேர்ந்தது ஷோடசாக்ஷரீ மந்த்ரம். அது இருபத்தெட்டு அக்ஷரங்களோடு கூடியது என்று சொன்னாலும், கௌடபாத ஸூத்ரத்தையநுஸரித்து மூன்று கூடங்களை மூன்று அக்ஷரங்களாகப் பரிகணநம் செய்தால் பதினாறாவது அக்ஷரமாகிய அந்த ஸ்ரீ என்பது ஸ்ரீவித்யாமந்த்ரமாகும்.

"ஆயிரம் கோடி முகங்களாலும், நூறுகோடி நாவினாலும் ஸ்ரீவித்யாஷோடசாக்ஷரியானது வர்ணிப்பதற்கு சக்தியற்றதாக இருக்கிறது" (2) என்று கூறப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) " मालामणिवद्वर्णाः क्रमेण भाव्य उपर्युपरि ॥ "

(2) " वक्त्रकोटिसहस्रैस्तु जिह्वाकोटिशतैरपि ।
वर्णितुं नैव शक्येयं श्रीविद्या षोडशाक्षरी ॥"

## (८२) अनाद्यन्तस्वयंभूतदिव्यमूर्त्यै नमो नमः ॥

(**अनाद्यन्त** - *ஆதியும் அந்தமுமில்லாத*, **स्वयंभूत** - *தானே உண்டாவது*, **दिव्य** - *ப்ரகாசம்*, **मूर्ति** - *அவயவம்*, (*சரீரம்*.)

**ஆதியும் அந்தமும் இல்லாத ஸ்வயமாகவே திவ்ய தேஹத்தோடு கூடியவள்.**

## (८३) भक्तहंसवतीमुख्यनियोगायै नमो नमः ॥

(**भक्त** - *பக்தி*, **हंसवती** - *ஹம்ஸவதீ* **मुख्य** - *ப்ரதானம்*, **नियोग**- *ஆஞ்ஞை* (*கட்டளை*.)

தன்னுடைய பக்தைகளான ஹம்ஸவதீ முதலிய சக்திகளை அவரவர்களுடைய கார்யங்களிலிருக்கும்படி ஆஞ்ஞை செய்பவள்.

*புருவத்தின் மத்தியிலுள்ள இரண்டு தளங்களோடு கூடிய ஆஞ்ஞாசக்ரத்தில் வஸிக்கின்ற* ஹாகினீ *என்ற யோகினீ தேவதையினுடைய பரிவாரங்களான* ஹம்ஸவதீ, க்ஷமாவதீ *என்ற இரண்டு சக்திகளுண்டு. இதுபோலவே விசுத்தி, அநாஹதம், மணிபூரகம், ஸ்வாதிஷ்டாநம்; மூலாதாரமுமாகும். இந்த ஆதாரங்களிலும் டாகினீ முதலிய தாது யோகினிகள் அம்ருதாதி மஹாசக்திகளால் சூழப்பட்டிருக்கின்றனர். இந்த தாதுயோகினிகளுடைய ஸமஷ்டி ரூபிணி தான் ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரி. ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரிதான்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே சொன்ன யோகிநிகளையும், அவர்களுடைய பரிவார சக்திகளையும் த்வக் முதலிய தாதுக்களுடைய கார்யங்களை நடத்தி வரும்படி ஆஞ்ஞை செய்கிறாள் என்பது தாத்பர்யம்.

"புருவத்தின் நடுவில் இரண்டு தளங்களோடு சேர்ந்த பிந்து பத்மத்தில், வெண்ணிறத்தோடும், ஞானமுத்ரையையும், டமருவையும், நிர்மலமான ஜபமாலையையும், கபாலத்தையும், தாமரை போன்ற கைகளால் தரித்துக்கொண்டும், ஆறு சக்ரங்களுக்கும் ஆதாரமான மத்யப்ரதேசத்தையும், மூன்று கண்களோடு ப்ரகாசித்துக் கொண்டும், ஹம்ஸவதீ முதலியவர்களோடு கூடியவளும், ஹரித்ராந்நத்தில் பிரிய முள்ளவளும், ஸகல ஸுகத்தையும் கொடுப்பவளுமான ஹாகிநீதேவியை வணங்குவோம்" (ஸ்துதி செய்வோம்) (1) என்றும் வர்ணித்திருக்கிறது.

(1) "भ्रूमध्ये बिन्दुपद्मे दलयुगकलिते शुक्लवर्णां कराब्जै-
बिभ्राणां ज्ञानमुद्रां डमरुकममलामक्षमालां कपालम् ।
षट्चक्राधारमध्यां त्रिनयनलसितां हंसवत्यादियुक्तां
हारिद्रान्नैकसक्तां सकलसुखकरीं हाकिनीं भवयामः ॥"

(८४) मातृमण्डलसंयुक्तललितायै नमो नमः ॥

(**मातृमण्डल** - ப்ராஹ்மீ முதலிய அஷ்டமாத்ருகைகள், **संयुक्त** - சேர்க்கை, **ललिता** - லலிதாதேவி.)

ப்ராஹ்மீ மாஹேச்வரீ முதலிய அஷ்டமாத்ருகா தேவிகளுடன் கூடியிருப்பவள் ஸ்ரீலலிதாதேவி.

அஷ்டமாத்ருகைகள் வருமாறு—ப்ராஹ்மீ, மாஹேச்வரீ, ஐந்த்ரீ, வாராஹீ, வைஷ்ணவீ, கௌமாரீ, சாமுண்டா, சர்ச்சிகா என்போராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ப்ரஹ்மா, ஈசன், ஸுப்ரஹ்மண்யன், நாராயணன் முதலிய நரச்ரேஷ்டர்களுடைய சக்திகளைத் தன்னுடைய ஐச்வர்யமாகச் செய்து நிசும்பாதிகளைக் கொன்று ஜயித்த தேவகணங்களோடு காப்பாற்றிய மூன்று உலகத்தை யுடையவள்" (1) என்று வர்ணித்திருக்கிறது. ப்ராஹ்மீ முதலிய மாத்ருகா தேவதைகள் ஸ்ரீசக்ரத்தினுடைய பூபுரத்திலுள்ள முதல் ரேகையில் வஸித்துக் கொண்டிருப்பவர்கள்.

(1) "ब्रह्मेशस्कन्दनारायणकिटिनरसिंहेन्द्रशक्तिः स्वभूत्याः
कृत्वा हत्वा निशुम्भं जितविबुधगणं त्रासिताशेषलोकम् ॥"

## (८५) भण्डदैत्यमहासत्त्वनाशनायै नमो नमः ॥

(**भण्डदैत्य** - பண்டன் என்ற அஸுரன், **महासत्व** - மிகுந்த பலம், **नाशन** - அழிவு.)

பண்டாஸுரனுடைய மிகுந்த பலம் பொருந்திய ஸேனைகளை நாசம் செய்தவள்.

"அவனுடைய அஸ்த்ரங்களால் அனுப்பப்பட்ட ஜ்வாலைகளால் அவனுடைய பட்டணம் சூந்யமாகச் செய்யப்பட்டது" (1) என்று ப்ரஹ்மாண்ட புராணத்தில் வர்ணித்திருக்கிறது.

(1) "तदस्त्रप्रहितैर्ज्वालैः शून्यकं तस्य पत्तनम् ॥"

## (८६) क्रूरभण्डशिरच्छेदनिपुणायै नमो नमः ॥

(**क्रूर** - கொடிய, **भण्ड** - பண்டாஸுரன், **शिरच्छेद** - சிரச்சேதம், **निपुण** - திறமை.)

கொடிய பண்டாஸுரனுடைய சிரஸை சேதநம் செய்வதில் மிகவும் திறமை வாய்ந்தவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (८७) धराच्युतसुराधीशसुखदायै नमो नमः ॥

(**धरा** - பூமி, **अच्युत** - விஷ்ணு, **सुराधीश** - இந்த்ரன், **सुखद** - ஸுகத்தைக் கொடுப்பது.)

பூதேவிக்கும், விஷ்ணுவுக்கும், தேவேந்த்ரனுக்கும் ஸுகத்தைக் கொடுத்தவள்.

துஷ்டர்களை நிக்ரஹம் (நாசம்) செய்து பூபாரத்தை நீக்கி, பூதேவிக்கு ஸுகத்தைக் கொடுத்தவள்; மதுகைடப - மஹிஷாஸுர - பண்டாஸுராதிகளை வதம் செய்து விஷ்ணுவுக்கு ஸுகத்தைக் கொடுத்தவள்; தேவேந்த்ரனுடைய தபஸை ரக்ஷித்து இந்த்ர பதவியை யளித்து ஸுகத்தைக் கொடுத்தவள்; என்றும் இவர்களுடைய ஸுகத்திற்குக் காரணம் ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரியே யாகும் என்பதும் தாத்பர்யம்.

## (८८) चण्डमुण्डनिशुम्भादिखण्डनायै नमो नमः ॥

(**चण्ड** - சண்டன், **मुण्ड** - முண்டன், **निशुम्भादि** - நிசும்பன் முதலிய **खण्डन** - சிக்ஷை.)

சண்டன், முண்டன், நிசும்பன் முதலியவர்களை நாசம் செய்தவள்.

## (८९) रक्ताक्षरक्तजिह्वादिशिक्षणायै नमो नमः ॥

(**रक्ताक्ष** - ரக்தாக்ஷன், **रक्तजिह्वादि** - ரக்தஜிஹ்வன் முதலிய, **शिक्षण** - சிக்ஷை.)

ரக்தாக்ஷ ரக்தஜிஹ்வன் முதலியவர்களை நாசம் செய்தவள்.

## (९०) महिषासुरदोर्वीर्यनिग्रहायै नमो नमः ॥

(**महिषासुर** - மஹிஷாஸுரன், **दोर्वीर्य** - தோள்வலிவு, **निग्रह** - நாசம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த தோள் வலிவைப்பெற்ற மஹிஷாஸுரனை நாசம் செய்தவள்.

(९१) अभ्रकेशमहोत्साहकारणायै नमो नमः ॥

(अभ्रकेश - பரமசிவன், महोत्साह - மிகுந்த உத்ஸாஹம், (ஸங்தோஷம்) कारण - காரணம்.)

உலகை ஸ்ருஷ்டி செய்யும் காமேச்வரனுடைய உத்ஸாஹத்திற்குக் காரணமாக இருப்பவள்.

(९२) महेशयुक्तनटनतत्परायै नमो नमः ॥

(महेश - மஹேசன், युक्त - சேர்ந்த, नटन - நாட்டியம், तत्पर - ஒரு முகமாய் இருத்தல்.)

மஹேச்வரனோடு நாட்டியம் செய்வதில் மிகுந்த ஆசையுள்ளவள்.

"ஹே தாயே! உன்னுடைய மூலாதாரசக்ரத்தில், லாஸ்யம் என்ற ஒருவித நாட்டியத்தில் ப்ரியமுள்ள 'ஸமயா' என்ற மஹாபைரவியோடு கூட, நவரஸங்களோடும், (ச்ருங்காராதி நவரஸங்கள் நிறைந்திருக்கும்படி) மஹாதாண்டவம் செய்கின்ற (நூதனசரீரத்தோடு கூடின) மஹாபைரவனை த்யானம் செய்கிறேன்" (1) என்பது ஸௌந்தர்யலஹரீ. "லாஸ்யம் என்னும் ஒருவித நாட்டியத்தில் ப்ரியமுள்ளவள்" (2) என்று ஸஹஸ்ரநாமத்திலும் கூறியிருக்கிறது.

(1) "तवाधारे मूले सह समयया लास्यपरया
नवात्मानं मन्ये नवरसमहाताण्डवनटम् ॥" सौ० (४१)

(2) "लास्यप्रिया ॥" ल० स० (७३७)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(९३) निजभर्तृमुखाम्भोजचिन्तनायै नमो नमः ॥

(निज - தனது, भर्तृ - புருஷன், मुखाम्भोज - தாமரை போன்ற முகம், चिन्तन - சிந்தனை.)

மஹாபதிவ்ரதா சிரோமணியாகிய ஸ்ரீதேவி தனது புருஷனுடைய தாமரை போன்ற முகத்தை சிந்தனை செய்த வண்ணமிருப்பவள்.

(९४) वृषभध्वजविज्ञानतपःसिद्ध्यै नमो नमः ॥

(वृषभध्वज - வ்ருஷபத்தைக் கொடியாகக் கொண்டவன், (பரமசிவன்) विज्ञान - அறிவு, तपः - தவம், सिद्धि - நிறைவு.)

ஸ்ரீபரமேச்வரன் தக்ஷிணாமூர்த்தியாயிருந்து கொண்டு ப்ரஹ்மஞானத்தோடு செய்த தபஸ்ஸித்தியின் பலரூபமாக உள்ளவள்.

ஒருவருக்கொருவருடைய தபஸ்ஸம்பத்திற்குப் (பரஸ்பரம்) பலத்தின் உருவாயமைந்தவர்களும், உலகத்திற்குத் தாய் தந்தையர் போன்றவர்களும், ஆதியாயிருப்பவர்களுமான தம்பதிகளைத் துதிப்போம்'' (1) என்று கூறியிருக்கிறது.

(1) "परस्परतपःसंपत्फलायितपरस्परौ ।
प्रपञ्चमातापितरौ प्राञ्चौ जायापती स्तुमः ॥ "

(९५) कामक्रोधादिषड्वर्गनाशनायै नमो नमः ॥

(काम - ஆசை, क्रोधादि - கோபம் முதலிய, षड्वर्ग - ஆறு - கூட்டம், नाशन - நாசம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறு சத்ருக்களையும் (அரிஷட்வர்க்கங்களையும்) நாசம் செய்பவள்.

மேலே சொன்ன காமக்ரோதாதிகளுக்கு இருப்பிடம் மனமாகையால் மனோமயரூபியாயிருக்கிற ஸ்ரீதேவியானவள் அவைகளை நாசம் செய்கிறாள் என்று தாத்பர்யம்.

## (९६) जन्ममृत्युजरारोगभञ्जनायै नमो नमः ॥

(जन्म - ஜனனம், मृत्यु - மரணம், जरा - முதுமை, रोग - வ்யாதி, भञ्जन - நாசம்.)

ஜனனம், மரணம், முதுமை, வ்யாதி முதலியவைகளை நாசம் செய்பவள்.

"பிறப்பு, இறப்பு, நரை, என்ற முதுமையால் பீடிக்கப்படுகின்ற ஜனங்களுக்கு (துக்கத்தை யபஹரிக்கின்ற) விச்ராந்திரூபமான ஆத்ம ஸௌக்யத்தைக் கொடுக்கிறாய்" (1) என்பது ஸஹஸ்ரநாமம். ஸம்ஸாரபந்தமான ஸகலதுக்கங்களையும் நாசம் செய்து, மோக்ஷத்தைக் கொடுப்பவள் என்று தாத்பர்யம்.

(1) "जन्ममृत्युजरातप्तजनविश्रान्तिदायिनी ॥" ल० स० (८५१)

## (९७) विरक्तिभक्तिविज्ञानसिद्धिदायै नमो नमः

(विरक्ति - ஒழிவு, भक्ति - பக்தி, विज्ञान - ஆத்ம ஞானம், सिद्धिद - நிறைவு.)

ஸம்ஸாரத்தில் அத்யந்த விரக்தியையும்; தன்னிடத்தில் தீவ்ரமான பக்தியையும்; அவைகளின் காரணமாக உண்டாகிய பரமானந்த ரூபமான விஞ்ஞானத்தையும் கொடுப்பவள். இவைகளெல்லாம் அஷ்டஸித்திகளில் உட்படாத ஒரு வித ஸித்திகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (९८) राजराजार्चितपदसरोजायै नमो नमः ॥

(**राजराज** - குபேரன், **अर्चित** - பூஜை, **पद** - கால், **सरोज** - தாமரை.)

குபேரனால் அர்ச்சனை செய்யப்பட்ட பாதாரவிந்தங்களை யுடையவள்.

"ஸ்ரீபுரத்தினுடைய பதினைன்காவதும், பதினைந்தாவதாயுமுள்ள ப்ராகாரங்களுடைய நடுவில் நவநிதிகளுக்கும் தலைவனான குபேரனையும், ஸ்ரீதேவியின் சரணாரவிந்தங்களையே அவலம்பித்திருக்கின்ற மணிபத்ரன் முதலான

7

யக்ஷர்களையும் த்யானம் செய்கிறேன்" (1) என்பது லலிதாஸ்தவம். "குபேரனால் பூஜிக்கப்பட்டவள்" (2) என்றும் ஸஹஸ்ரநாமம் கூறும்.

(1) "तल्लोकपूर्वभागे धनदं ध्यायामि शेवधिकुलेशम् ।
अपि माणिभद्रमुख्यानम्बाचरणावलम्बिनो यक्षान् ॥" ल० स्त०(५८)

(2) "राजराजार्चिता ॥" ल० स० (२०५)

## (९९) सर्ववेदान्तसिद्धान्तसुतत्त्वायै नमो नमः ॥

(**सर्व** - எல்லா, **वेदान्त** - வேதாந்த, **सिद्धान्त** - ஸித்தாந்த, (முடிவு) **सु - तत्त्व** - உண்மை, (யதார்த்தம்.)

எல்லா வேதாந்தங்களுடைய ஸித்தாந்தத்தின் தத்வ வடிவாக உள்ளவள்.

"எல்லா உபநிஷத்துங்களாலும் புகழப்பட்டவள்" (1) என்பது ஸஹஸ்ரநாமம்.

(1) "सर्वोपनिषदुद्घुष्टा ॥" ल० स० (८५२)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (१००) श्रीवीरभक्तविज्ञाननिदानायै नमो नमः ॥

(**श्रीवीर** - விரர்கள், **भक्त** - பக்தி, **विज्ञान** - விசேஷ ஞாநம், **निदान** - காரணம்.)

வீரர்களாயிருக்கின்ற பக்தர்களுடைய விஞ்ஞாநத்திற்குக் காரணமாக இருப்பவள்.

'தானே லலிதா' என்றது போல ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கு ஆதிகாரணமாக இருப்பவள் என்பது கருத்து. இங்கே ஸ்ரீசப்தமானது ஸ்ரீசக்ரம், ஸ்ரீவித்யா என்பது போலச் சிறப்பாகக் கொள்ளவேண்டும். விரர்கள் என்றது சிறந்த உபாஸகர்களைக் குறிப்பதாகும். அதாவது சாம்பவ தீக்ஷையினால் தீக்ஷையடைந்திருந்தாலும் மாலிந்ய தாரதம்யம் கொண்டு உபாஸகர்கள் அசுத்தம்; சுத்தம்; மிச்ரம் என மூன்று விதம் ஆவர். அவர்களுடைய ஸ்வபாவம் வருமாறு. ஆணவம், கார்மம், மாயிகமென்று மூன்றுவித பாசங்களுண்டு. அதில் ஆணவமென்பது அஞ்ஞாநமாகும். அது இரண்டு விதம், ஒன்று சைதந்ய ரூபமாயிருக்கிற ஆத்மாவிடத்தில் ஆத்மவான் என்றுள்ள ஞானத்தை அறியாமலிருப்பது; இரண்டாவது சைதந்யமற்ற தேஹாதிகளில் ஆத்மவான் என்றுள்ள ஞானமாகும். இவை இரண்டும் சேர்ந்து தான் ஆணவமலம் என்று சொல்லப்படுகிறது. அது அபரிச்சிந்ந (பிரிக்கப்படாதது) மாயும், பூர்ணமாயும் (நிறைவு) இருக்கிற ஆத்மாவினுடைய அணுவாகப் பிரித்துக் கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஹிதமாயும் (கட்டளை) நிஷித்தமாயும் இருக்கின்ற கர்மங்களினின்றும் புண்யம், பாபம் என்ற பேதத்தினால் உண்டாவதும், அதிர்ஷ்டமாக (கண்ணுக்குப் புலப்படாத)வு முள்ளதாயிருக்கிற கர்மஸம்பத்தினால் கார்மணமலம் என்று சொல்லப்படுகிறது. இந்த மூன்று பாசத்தையும் கொண்டு கட்டப்பட்டிருக்கிற உபாஸகன் அசுத்தனென்றும்; ஆணவகார்மங்களைக் கொண்டு மாத்திரம் கட்டப்பட்டவன் மிச்ரனென்றும்; ஆணவம் கொண்டு மாத்திரம் கட்டப் பட்டவன் சுத்தனென்றும் சொல்லப்படுகிறது. இந்த மூன்றுவித உபாஸகர்களையும் வீரர்கள் என்று அழைக்கப் படுவதுண்டு. "பராக்கிரமசாலியாக இருந்து கொண்டு அமங்களத்தை யகற்றி தன்னை அநுபவிக்கிறான்"

(1) என்றும் "வீரர்களால் ஆராதிக்கப் பட்டவள்" (2) என்றும் கூறியிருக்கிறது.

(1) " पराक्रमपरो भुङ्क्ते स्वात्मानमशिवापहम् । "

(2) " वीराराध्या ॥ " ல० ஸ० (७७७)

## (१०१) अशेषदुष्टदनुजसूदनायै नमो नमः ॥

(**अशेष** - ஸமஸ்த, **दुष्ट** - துஷ்டர், **दनुज** - அஸுர, **सूदन** - நாசம்.)

துஷ்டர்களான எல்லா அஸுரர்களையும் நாசம் செய்தவள்.

## (१०२) साक्षाच्छ्रीदक्षिणामूर्तिमनोज्ञायै नमो नमः ॥

(**साक्षात्** - ப்ரத்யக்ஷம், **श्रीदक्षिणामूर्ति** - ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி, **मनोज्ञ** - மனத்தை அறிவது - (மனதிற்குகந்தது.)

ஸாக்ஷாத் ஸ்ரீதக்ஷிணாமூர்த்தியினுடைய மாநஸ சக்தியின் உருவாக விளங்குபவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹா தபஸ்வியும், காமனை நாசம் செய்தவனுமான ஸ்ரீதக்ஷிணாமூர்த்திக்கும் மனோஹரமாயிருப்பவள் என்பது கருத்து.

"தக்ஷிணாமூர்த்தி ரூபிணியாகவுள்ளவள்" (1) என்பது ஸஹஸ்ரநாமம்.

(1) "दक्षिणामूर्तिरूपिणी ॥" ல॰ ஸ॰ (७२५)

## (१०३) हयमेधाग्रसंपूज्यमहिमायै नमो नमः ॥

(**हय-मेध** - அச்வமேத - யாகத்தில், **अग्र** - முதன்மை, **सं-पूज्य** - நன்ருக-பூஜிக்கத்தக்க, **महिमा** - மஹிமை.)

அச்வமேத யாகத்தில் முதலாவதாகப் பூஜிக்கப்பட்ட மஹிமையை யுடையவள்.

"அச்வமேதயாகத்தில் நன்ருகப் பூஜிக்கப்பட்டவள்" (1) என்பது த்ரிசதி ஸ்தோத்ரம்.

"हयमेधसमर्चिता ॥" ல॰ த்ரி॰ (१०८)

## (१०४) दक्षप्रजापतिसुतावेषाढ्यायै नमो नमः ॥

(**दक्षप्रजापति** - தக்ஷப்ரஜாபதி, **सुता** - பெண், **वेष** - வேஷம், **आढ्य** - நிறைவு.)

தக்ஷப்ரஜாபதியினுடைய புத்திரியாக தாக்ஷாயணீ என்ற பெயரோடு அவதாரம் செய்தவள்.

## (१०५) सुमबाणेक्षुकोदण्डमण्डितायै नमो नमः ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(**सुम** - புஷ்பம், **बाण** - பாண, **इक्षु** - கரும்பு, **कोदण्ड** - வில், **मण्डित** - அலங்காரம்.)

புஷ்பமாகிய பாணம், கரும்பாகிய வில், இவைகளால் அலங்காரம் செய்யப்பட்டவள்.

மண்டித சப்தமானது ஸ்ரீதேவிக்கு ஆயுதங்கள் ஒரு அலங்காரமாயிருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறது. அப்படி இல்லாமல் சத்துருக்களை ஸம்ஹாரம் செய்வதற்கு வைத்திருக்கிருள் என்று சொல்லக்கூடாது. ஏனெனில் ஸ்ரீதேவியானவள், ஹுங்கார கடாக்ஷாதிகளால் சத்ருக்களை ஸம்ஹாரம் செய்து கொண்டிருக்கிருள். ஆதலால் அலங்காரமாகவே கையில் வைத்திருக்கிருள் என்று பொருள் கொள்ளவேண்டும்.

## (१०६) नित्ययौवनमाङ्गल्यमङ्गलायै नमो नमः ॥

(**नित्य** - அழிவற்ற, **यौवन** - யௌவனம், (இளமை) **माङ्गल्य** - மங்கள ஸூத்ரம், **मङ्गल** - மங்களம்.)

நித்யமாயிருக்கிற (அழிவற்ற) யௌவநமும் ; நித்யமாயிருக்கிற (அழிவற்ற) மங்களஸூத்ரமும் கொண்டு எப்போதும் ஸர்வமங்களரூபியாக விளங்குபவள்.

ஸம்ஹாரகாலத்திலும் ஸதாசிவனுக்கு நாசமில்லாததால் ஸ்ரீதேவி நித்யமாங்கல்யத்தோடு கூடியவள் என்பது கருத்து.

" இந்த மஹாப்ரளயகாலத்திலும் உனது புருஷன் விளையாடும் பொழுது " (1) என்று ஆனந்தலஹரியில் கூறப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) " महासंहारे ऽस्मिन्विहरति सति त्वत्पतिरसौ ॥ " सौ० (२६)

## (१०७) महादेवसमायुक्तमहादेव्यै नमो नमः ॥

மஹாதேவனோடு கூடிய மஹாதேவிக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!

## (१०८) चतुर्विंशतितत्त्वैकस्वरूपायै नमो नमः ॥

(**चतुर्विंशति** - *இருபத்திநான்கு*, **तत्त्व** - *தத்துவம்*, **एक** - *முக்ய*, **स्व-रूप** - *தன் ஸ்வரூபம்.*)

இருபத்திநான்கு தத்வங்களை தனது முக்ய வடிவாகக் கொண்டவள்.

*கர்மேந்த்ரியங்களும்; ஞானேந்த்ரியங்களும், அவை களுடைய விஷயங்களும் சேர்ந்து இருபது, மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற நான்கும் சேர்ந்து இருபத்திநான்கு தத்துவங்களாகும். அவைகளுடைய முக்ய ஸ்வரூபியாக ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரி விளங்குகிருள் என்பது கருத்து. சுபம்.*

*அஷ்டோத்தரசதநாமங்களின் அர்த்தத்தை*
*நான் எழுதி, ஹே சிவே! உனது*
*பாதாரவிந்தங்களில் ஸமர்ப்பணம்*
*செய்தேன். எனக்கு எல்லா*
*மங்களமும் உண்டாகட்டும்.*

ஸ்ரீ லலிதாஷ்டோத்தரசதம் ஸம்பூர்ணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ॥ श्रीललिताष्टोत्तरशतनामावलिः ॥

१. रजताचलशृङ्गाग्रमध्यस्थायै नमो नमः ॥
२. हिमाचलमहावंशपावनायै नमो नमः ॥
३. शंकरार्धाङ्गसौन्दर्यशरीरायै नमो नमः ॥
४. लसन्मरकतस्वच्छविग्रहायै नमो नमः ॥
५. महातिशयसौन्दर्यलावण्यायै नमो नमः ॥
६. शशाङ्कशेखरप्राणवल्लभायै नमो नमः ॥
७. सदा पञ्चदशात्मैक्यस्वरूपायै नमो नमः ॥
८. वज्रमाणिक्यकटककिरीटायै नमो नमः ॥
९. कस्तूरीतिलकोद्भासिनिटिलायै नमो नमः ॥
१०. भस्मरेखाङ्कितलसन्मस्तकायै नमो नमः ॥
११. विकचाम्भोरुहदललोचनायै नमो नमः ॥
१२. शरच्चाम्पेयपुष्पाभनासिकायै नमो नमः ॥
१३. लसत्कनकताटङ्कयुगलायै नमो नमः ॥
१४. मणिदर्पणसंकाशकपोलायै नमो नमः ॥
१५. ताम्बूलपूरितस्मेरवदनायै नमो नमः ॥
१६. सुपक्वदाडिमीबीजरदनायै नमो नमः ॥
१७. कम्बुपूगसमच्छायकंधरायै नमो नमः ॥
१८. स्थूलमुक्ताफलोदारसुहारायै नमो नमः ॥
१९. गिरीशबद्धमाङ्गल्यमङ्गलायै नमो नमः ॥
२०. पद्मपाशाङ्कुशलसत्कराब्जायै नमो नमः ॥


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

२१. पद्मकैरवमन्दारसुमालिन्यै नमो नमः ॥
२२. सुवर्णकुम्भयुग्माभसुकुचायै नमो नमः ॥
२३. रमणीयचतुर्बाहुसंयुक्तायै नमो नमः ॥
२४. कनकाङ्गदकेयूरभूषितायै नमो नमः ॥
२५. बृहत्सौवर्णसौन्दर्यवसनायै नमो नमः ॥
२६. बृहन्नितम्बविलसज्जघनायै नमो नमः ॥
२७. सौभाग्यजातशृङ्गारमध्यमायै नमो नमः ॥
२८. दिव्यभूषणसंदोहरञ्जितायै नमो नमः ॥
२९. पारिजातगुणाधिक्यपदाब्जायै नमो नमः ॥
३०. सुपद्मरागसंकाशचरणायै नमो नमः ॥
३१. कामकोटिमहापद्मपीठस्थायै नमो नमः ॥
३२. श्रीकण्ठनेत्रकुमुदचन्द्रिकायै नमो नमः ॥
३३. सच्चामररमावाणीवीजितायै नमो नमः ॥
३४. भक्तरक्षणदाक्षिण्यकटाक्षायै नमो नमः ॥
३५. भूतेशालिङ्गनोद्भूतपुलकाङ्ग्यै नमो नमः ॥
३६. अनङ्गजनकापाङ्गवीक्षणायै नमो नमः ॥
३७. ब्रह्मोपेन्द्रशिरोरत्नरञ्जितायै नमो नमः ॥
३८. शचीमुख्यामरवधूसेवितायै नमो नमः ॥
३९. लीलाकल्पितब्रह्माण्डमण्डलायै नमो नमः ॥
४०. अमृतादिमहाशक्तिसंवृतायै नमो नमः ॥
४१. एकातपत्रसाम्राज्यदायिकायै नमो नमः ॥
४२. सनकादिसमाराध्यपादुकायै नमो नमः ॥
४३. कलशोद्भवदुर्वासपूजितायै नमो नमः ॥

8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

४४. देवर्षिभिस्तूयमानवैभवायै नमो नमः ॥
४५. मत्तेभवक्त्रषड्वक्त्रवत्सलायै नमो नमः ॥
४६. चक्रराजमहायन्त्रमध्यवर्त्यै नमो नमः ॥
४७. चिदग्निकुण्डसंभूतसुदेहायै नमो नमः ॥
४८. शशाङ्कखण्डसंयुक्तमकुटायै नमो नमः ॥
४९. मत्तहंसवधूमन्दगमनायै नमो नमः ॥
५०. वन्दारुजनसंदोहवन्दितायै नमो नमः ॥
५१. अन्तर्मुखजनानन्दफलदायै नमो नमः ॥
५२. पतिव्रताङ्गनाभीष्टफलदायै नमो नमः ॥
५३. अव्याजकरुणापूरपूरितायै नमो नमः ॥
५४. निरञ्जनचिदानन्दसंयुक्तायै नमो नमः ॥
५५. सहस्रसूर्यसंयुक्तप्रकाशायै नमो नमः ॥
५६. रत्नचिन्तामणिगृहमध्यस्थायै नमो नमः ॥
५७. हानिवृद्धिगुणाधिक्यरहितायै नमो नमः ॥
५८. महापद्माटवीमध्यनिवासायै नमो नमः ॥
५९. जाग्रत्स्वप्नसुषुप्तीनां साक्षिभूत्यै नमो नमः ॥
६०. महातापौघपापानां विनाशिन्यै नमो नमः ॥
६१. दुष्टभीतिमहाभीतिभञ्जनायै नमो नमः ॥
६२. समस्तदेवदनुजप्रेरकायै नमो नमः ॥
६३. समस्तहृदयाम्भोजनिलयायै नमो नमः ॥
६४. अनाहतमहापद्ममन्दिरायै नमो नमः ॥
६५. सहस्रारसरोजातवासितायै नमो नमः ॥
६६. पुनरावृत्तिरहितपुरस्थायै नमो नमः ॥


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

६७. वाणीगायत्रीसावित्रीसंनुतायै नमो नमः ॥

६८. नीलारमाभूसंपूज्यपादाब्जायै नमो नमः ॥

६९. लोपामुद्रार्चितश्रीमच्चरणायै नमो नमः ॥

७०. सहस्ररतिसौन्दर्यशरीरायै नमो नमः ॥

७१. भावनामात्रसंतुष्टहृदयायै नमो नमः ॥

७२. नतसंपूर्णविज्ञानसिद्धिदायै नमो नमः ॥

७३. त्रिलोचनकृतोल्लासफलदायै नमो नमः ॥

७४. श्रीसुधाब्धिमणिद्वीपमध्यगायै नमो नमः ॥

७५. दक्षाध्वरविनिर्भेदसाधनायै नमो नमः ॥

७६. श्रीनाथसोदरीभूतशोभितायै नमो नमः ॥

७७. चन्द्रशेखरभक्तार्तिभञ्जनायै नमो नमः ॥

७८. सर्वोपाधिविनिर्मुक्तचैतन्यायै नमो नमः ॥

७९. नामपारायणाभीष्टफलदायै नमो नमः ॥

८०. सृष्टिस्थितितिरोधानसंकल्पायै नमो नमः ॥

८१. श्रीषोडशाक्षरीमन्त्रमध्यगायै नमो नमः ॥

८२. अनाद्यन्तस्वयंभूतदिव्यमूर्त्यै नमो नमः ॥

८३. भक्तहंसवतीमुख्यनियोगायै नमो नमः ॥

८४. मातृमण्डलसंयुक्तललितायै नमो नमः ॥

८५. भण्डदैत्यमहासत्त्वनाशनायै नमो नमः ॥

८६. क्रूरभण्डशिरच्छेदनिपुणायै नमो नमः ॥

८७. धराच्युतसुराधीशसुखदायै नमो नमः ॥

८८. चण्डमुण्डनिशुम्भादिखण्डनायै नमो नमः ॥

८९. रक्ताक्षरक्तजिह्वादिशिक्षणायै नमो नमः ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

९०. महिषासुरदोर्वीर्यनिग्रहायै नमो नमः ॥
९१. अभ्रकेशमहोत्साहकारणायै नमो नमः ॥
९२. महेशयुक्तनटनतत्परायै नमो नमः ॥
९३. निजभर्तृमुखाम्भोजचिन्तनायै नमो नमः ॥
९४. वृषभध्वजविज्ञानतपःसिद्ध्यै नमो नमः ॥
९५. कामक्रोधादिषड्वर्गनाशनायै नमो नमः ॥
९६. जन्ममृत्युजरारोगभञ्जनायै नमो नमः ॥
९७. विरक्तिभक्तिविज्ञानसिद्धिदायै नमो नमः
९८. राजराजार्चितपदसरोजायै नमो नमः ॥
९९. सर्ववेदान्तसिद्धान्तसुतत्त्वायै नमो नमः ॥
१००. श्रीवीरभक्तविज्ञाननिदानायै नमो नमः ॥
१०१. अशेषदुष्टदनुजसूदनायै नमो नमः ॥
१०२. साक्षाच्छ्रीदक्षिणामूर्तिमनोज्ञायै नमो नमः ॥
१०३. हयमेधाग्रसंपूज्यमहिमायै नमो नमः ॥
१०४. दक्षप्रजापतिसुतावेषाढ्यायै नमो नमः ॥
१०५. सुमबाणेक्षुकोदण्डमण्डितायै नमो नमः ॥
१०६. नित्ययौवनमाङ्गल्यमङ्गलायै नमो नमः ॥
१०७. महादेवसमायुक्तमहादेव्यै नमो नमः ॥
१०८. चतुर्विंशतितत्त्वैकस्वरूपायै नमो नमः ॥




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

नित्यान्नदाता, तरुणाग्निहोत्री, मासोपवासी, पतिव्रता च ।
वेदान्तविद्, "**सहस्रचन्द्रदर्शी**", षड् जीवलोके मम वन्दनीयाः ।।

தினமும் அன்னதானம் செய்பவர்களும் இளமையிலிருந்தே அக்கினி வழிபாடு செய்பவர்களும் மாதந்தோறும் ஏகாதசி விரதத்தில் உபவாசம் இருப்பவர்களும பதிவிரதைகளும்வேதாந்த ஞானம் பெற்றவர்களும் ஆயிரம் பிறை கண்ட உத்தமர்களும் இவ்வுலகில் என்னால் வணங்கப்படும் தகுதியுடையவர்கள்.

ஸ்ரீமத் பாகவதத்தில் கிருஷ்ணர்

**While all in this universe worships Bhagawan, Bhagawan himself worships the following six classes of individuals. They are:**

1. One who does annadaanam daily, 2.One who has performed Soma Yaagam at a young age and continuing with Agnihothram daily ( Soma Yaagam should be performed before the hair grays) 3.Maasopavaasam is a Prayaschitta Karma and who has performed this ( Some opine that Maasopavasam means night fasting on amavasya, Pournami and Sundays, day fasting on ashtami and chathurdasi and full fasting on ekadasi throughout their life).4.A woman selflessly serving her husband without minding the hardship. 5. One who has studied Vedas and Upanishads with meaning and follows what is said in that. And 6. One who has seen 1000 full moon.



ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ்.யாழ்ப்பாணம்.0212219129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org